Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 10 | 29-05-மே-2005



ஆனையிறவின் வெற்றி.... எங்கள் நிமிர்வுக்கு சாட்சி



இணையும் கரங்களிடம் பகைவனின் சூழ்ச்சி நெருங்காது

# தீரரும் தியாகங்களும்

இருநூ றாண்டுகளா யெம்மினத்தை வதைத்த
இரும்புச் சிறையதன் விலங்கொடிந்து வீழ்ந்ததே!
மருவுதமி ழினத்திற்காய் மறத்தமிழர் தமையழித்து
மாண்புறு போர்புரிந்து மீட்புதனைப் புரிந்தனரே!
'பெருவெள்ளம் பீறிட்டால் தடுக்கத்தான் தடையுண்டோ?
பெருந்தீ பற்றிநின்றால் தப்பிக்க வழியுமுண்டோ?
பெரும்புயலைத் தடுக்கின்ற வலிமைதான் எமக்குண்டோ?'
பேதலித்து நின்றவராம், பகைவர்தம் புலம்பலன்றோ!

வன்னியொடு வடபுலத்தை இணைக்கின்ற கடலேரி
வளமான இருபுறத்தும் கழுத்தா யமைந்தநிலம்
அந்நியராம் ஒல்லாந்தர் ஆட்சியின் போதினிலும்,
ஆண்டுகொண்ட ஆங்கிலேயர் பிடியனிலும் சிக்குண்டு
புன்மைகள் புரிந்திடும் பௌத்தவாதச் சிங்களத்தால்
பலகாலம் நசிவுற்று நலிந்துவாடி நிற்கையிலே
மின்னலெனத் தாக்கியே மீட்சிதனைத் தந்துற்ற
மேதாவிக ளாம்தீரரின் மேன்மைதனைச் சிந்திப்போம்!

ஆதியிலே வன்னிமன்னன் ஆனைகளைச் சேர்த்து
அயல்நாடாம் தமிழகத்திற் கனுப்பிய தன்றிப்
போதிய திறையாக வாரணங்கள் சேகரித்தே
பொறுமையுடன் யாழரசின் பாலனுப்பி நின்றான்!
காததூரம் கடப்பதற்குக் கரிகளையே வரிசையாக்கிக்
கடலேரி வழியாகக் கூட்டம்தனை இறக்கியதால்
ஆதிமக்கள் சூட்டினரே 'ஆனையிறவு' எனும்சொல்
ஆரறிவார் இந்நாளில் அப்பெயர் மகிமைதனை!

கள்ளத் தோணியெனக் காலமெலாம் சிறைப்பிடித்துக்
கசக்கியே தமிழினத்தை வருத்தியோர் தலைசிதற
மெள்ளவே எம்மினத்தை மிதித்துத் துன்புறுத்தி
மழையினிலும் வெயிலிலும் மண்ணிலும் சாகடித்த
கொள்ளையரின் கொட்டமது முற்றிலு மடங்கிடக்
குவலயமே வியந்திடும் கோடி வெற்றிகளை
அள்ளியே வழங்கிய அருந்தவப் புதல்வரின்
அளப்பரிய ஈகைதனை எடுத்துரைக்க வகையுண்டோ?
சுற்றவரச் சதுப்புநிலம் துன்புறுத்தும் கொடும்வெயில்
சூழநின்ற தரையெங்கும் சூடான உப்புவயல்
பற்றைகளோ காடுகளோ பண்படுத்தாச் செடிகொடியோ
பதுங்குதற்கும் ஒதுங்குதற்கும் பயன்படாப் பரந்தவெளி
அற்றைவரை நிலைத்துநின்ற ஈனர்க்கோ எள்ளளவும்
இன்னல் அளித்திடாத இதமான நிலமது!
நற்றமிழ் மறவர்தம் நம்பிக்கைத் துடிப்புடனே
நாற்புறமும் சூழநின்று நலிவுறச் செய்தனரே!

உணவின்றி நீரின்றி உவர்காற்றின் சுவாசத்தில்
உடல்நொந்து உளமோங்க உவப்புடனே பெற்றவெற்றி!
மணல்மேட்டுத் தரைகளிலே மறைந்தும் ஒளிந்தும்
மாற்றான் மண்டியிட மழையெனப் பொழிந்தகணை!
கணமேனு முறக்கமின்றி உப்பளத்திற் காலூன்றிக்
கயவர்தமை கதிகலங்க விரட்டிநின்ற பெருவெற்றி!!
தணலென எதிர்கொள் எதிரியின் எரிகுண்டில்
தம்முயிர் போக்கிய தனயரின் புகழ்வெற்றி!

களத்தினில் விழுப்புண் கண்டவர் தமக்குக்
குருதியை வழங்கிய கொடையினில் முதலிடம்!
தளத்திலே இன்னுயிர் நீத்தவர் உடல்தனைத்
தமதருகே புதைத்திடும் திண்மைமிகு மனத்திடம்!
அழுகிய பகைவனின் எச்சம்தனைப் பொறுக்கி
அடக்கம் செய்திடும் உளத்தின் சகிப்பு!
இளகிடும் எண்ணத்தில் எதிரியை விடுவித்த
இணையற்ற பொறுமையின் பெருமித மன்னிப்பு!
இத்தனை துன்பங்கள் மட்டுமா எம்சிறார்க்கு?
எழுதிட முடியா எண்ணற்ற துயரங்கள்!
அத்தனையும் தாங்கியே ஆடினார் களத்தில்!
அவனியே வியந்திட்ட அறமிகு போராட்டம்!
பத்தரை மாற்றுத் தங்கமாம் பாலகரைப்
பண்பட்ட நெஞ்சத்திற் பதித்தே நாமும்
இத்தரை உள்ளவரை இவர்பெயர் நிலைத்திட
என்றும் இங்கிதமாய்த் தொழுதுநிற் போமே!

**கனடாவில் இருந்து**
**பவித்திரா**

# கார சாரம்

மனிதர்களுக்கு உள்ளது நோயுடம்பு. ஒருசித்தர் அழகாகச் சொல்கிறார் இந்த நோயுடம்பிலிருந்து என்னை மீட்டெடு என்று. கொஞ்சநேரம் உட்கார்ந்தால் நாரியுளையும், கொஞ்ச நேரம் நின்றால் காலுளையும், தொடர்ந்து படுத்திருந்தால் தலைப்பாரம். இப்பிடித் தொழிலே செய்யாமல் இருப்பவர்கள் கூடச் சொல்வார்கள். பொதுவாகவே மனிதனை அவன் வாழும் சூழலே தாக்குவதுண்டு. கனநேரம் வெயில்ல நிண்டது தலைசுத்துது. மழையில நனைஞ்சன் தலையிடி, தடிமன், கடும்வெக்கை கண்திறக்கேலாதாம், பனிக்கு இழுப்பு வந்திட்டுது. கனக்கக் குளிச்சது சளி, தண்ணி வித்தியாசம் தொண்டையடைக்குது. இப்படி எக்கச்சக்கம்.

மனிதஉடல் சில வேளைகளில் தாங்கமுடியாத வலிக்கு உள்ளாகும் போது வைத்திய உதவி தேவைப்படுகிறது. நோய் நீக்க ஒருவர் இனி இயலாது என்ற நிலையில் வைத்தியரைத் தேடிச் செல்கிறார். அதிதீவிர, சாதாரண என்ற எந்த வகையைச் சேர்ந்த நோயானாலும் வைத்தியருடைய ஆலோசனைகள் எங்கோ மறைந்துவிட மக்கள் பாடு அந்தரந்தான்.

வாட்டில் நிற்கமுயலக் கூடாது என்பது சிலரது அவா. மனிதனின் அன்றாடப் பிரச்சினைகளான மலசலங்கழித்தல், குளித்தல், சாப்பிடுதல் உள்ளான பல பிரச்சினைகள் படு மோசமான நிலையில் உள்ளன. குளிப்பறை, கழிப்பறை, உணவுப்பங்கீட்டறை என்பன அருகருகே அமைத்து, யப்பானிய அரசும், மக்களும் இணைந்து வடக்குக்கிழக்கு மக்களுக்கு வழங்கிய தொழில்நுட்ப நன்கொடை இந்தக் கட்டடம்.

கழிப்பறைக் 'கொமட்டை' கண்டிராத எமது கிராமியப்பெண்ணொருத்தி அதைத் துணிதுவைக்கும் வாளியாகப் பயன்படுத்திப் பார்த்தால் அது ஓட்டை வாளி இதையேன் வச்சுக்கட்டினவை என்றாள். இன்னொருத்தி அதில என்னண்டு குந்திற- என்றாள். மக்கள் பழகத்தானே வேணும் என்கிற மேம்போக்குக் கருத்து கிராம வாசிகளிடம் எடுபடாது. விளைவு கழிப்பறைகளின் வெளிப்புறங்களில் மலசலங்கழிப்பது நடக்கிறது.

வைத்தியசாலைகளில் ஒரு புறம் நாற்றமெடுத்துப்போயிருக்க, ஒருபுறத்தே மலர்ச்செடிகளின் ப்ராமரிப்பும் நடக்கிறது.

சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் போதியளவு இல்லையா? அல்லது அவர்களும் தனிப்பட்ட வருவாய்களுக்காக இவற்றைக் கவனிக்கவில்லையா? மூன்றாம் உலக நாடுகளின் மிகப்பெரிய சாபக்கேடு இதுதான். கழிவகற்றும் நவீன சாதனங்கள் இல்லை. அவை இன்னும் மனிதக்கைகளில் விடப்பட்டுள்ளன. பெரும் வைத்திய சாலையின் கழிவுகள் கால்வாய்களில் ஓடிக் கடலில் கலக்கும் வசதியில்லை.

ஒரு பிரசவம் நடைபெறும் போது ஒரு பெண்ணின் பாவனையிலிருந்த ஆடைகளைப் பெரும்பாலும் மீண்டும் பயன்படுத்த முடியாது. அதற்கேற்ப பழைய ஆடைகளையே அணிவது வழக்கம். ஒரு பழைய துணியை வைத்திய சாலைக் கழிவகற்றும் தொழிலாளி அவற்றைத் துவைத்து உலரப் போட்டு பிரசவித்த பெண்களிடம் மீளக் கொடுத்து சலவைச் செலவெனப் பணம் பெற்றுக் கொள்ளலாமா? அதென்றாலும் பரவாயில்லை. யாரோ இவ் சலவை செய்த அந்தத்துணிகளைத் தமக்கு வேண்டாம் என்று கூறிவிட்டார்களாம். மறுநாள் பகிரங்கமாக நோயாளிகளின் முன்னறையில் வந்து

# இது குற்றச்சாட்டல்ல ஒரு விண்ணப்பம்

கவனிப்பு என்பது நோயாளிகளினது பெரும்பகுதி நோயைக் குறைக்கிறது. பதற்றம் தணிவதே பெரும் ஆறுதலாகிவிடும். நோய் ஏற்பட்ட ஒருவர் வைத்தியரை அவ்வளவு விரைவில் சந்திக்க வன்னியில் முடிவதில்லை. எனக்கொரு நாட்டார்பாடல் நினைவு வந்ததைத் தடுக்க முடியவில்லை.

"அழகழகா டாக்டர்களாம். சொக்க நாதா ஆனா ஆஸ்பத்திரியில மருந்துயில்லே சோக்கு சோக்குத் தான்" இப்போ அதை மாற்றி " அழகழகா ஆஸ்பத்திரியாம் சொக்க நாதா- ஆனா ஆஸ்பத்திரிக்கு டாக்டர் இல்ல சோக்கு சோக்குத்தான் " என்றும் பாடலாம்.

வன்னியில் புளியங்குளத்து வைத்தியரே நெடுங்கேணியையும் பார்க்கிறார் என்பதால் அவர் மாலையில் மட்டும் அங்கிருப்பாராம். இந்த வைத்தியசாலையை நம்பி அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்டது போல அங்கு இயங்கிவந்த ஆரம்ப சுகாதார நிலையம் மூடப்பட்டுவிட்டது. பின்னால் நகரம் மட்டும் என்ன வாழுகிற தாம் என்ற கேள்வி வருகிறது.

மாந்தர் தாம் வைத்திய சாலைக் அருகில் இருப்பதான தென்பில் நருக்கடி வந்த பின்னரே வைத்தியசாலையை நாடுகின்றனர். வெளிநோயாளர் பகுதியில் முண்டியடித்துக்கொண்டு வரிசையில் நிற்போர் தொகையைப் பார்த்தாலே மயக்கம் வரும். சரி தனியார்வைத்திய சாலைகளை நாடி ஓடியே தீரவேண்டும். அங்கேயும் என்ன வாழ்கிறதாம். வைத்தியரைச் சந்திக்க மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது.

வைத்தியசாலைகளின் நோயாளர் பெருக்கம் வைத்தியர்களைக் களைப்படைய வைக்கிறது. வருடாந்தம் மருத்துவக் கல்லூரிகளிலிருந்து வெளியேறிவரும் மருத்துவர் உணவுப்பங்கீட்டுப் பகுதியில் ஒரு கைகழுவும் தொட்டி (Wash Basin) அது முதல் நாளே நீர்புகும்பாதை அடைபட்டிருந்தது போலும். மேலும் மேலும் கழிவுகளைக்கழுவி தொட்டி நிரம்பி நொதித்திருக்க எட்டி நின்றவாறே டம்ளரை நீட்டி நீர்க்குழாயில் பிடித்து கழுவி முற்றத்திலோ, பெரும்பாலும் விறாந்தையிலோ எற்றிவிட்டுப் போகும் மக்கள் அதைத் தமது வைத்தியசாலையாகக் கொள்ளவில்லை. குழந்தைகள் பகுதிக்கெனத்தனிக்கழிப்பறை இல்லை. நடைபாதையோரம் பூந்தொட்டிகள், பூங்கா என அமர்க்களப்படும். இப்புறம், அப்புறமுள்ள விறாந்தையிலேயே பிள்ளைகளைச் சிறுநீர் கழிக்கவிடும் பெற்றோர் உள்ளனர். இவர்கள் போன்றோர், பஸ்தரிப்பு நிலையம் ஆஸ்பத்திரி போன்ற, பொது இடங்களின் கழிப்பறைகள் எவ்வளவு முக்கியமானவை. அவற்றை நாம் தானே சுத்தமாகப் பேண வேண்டும் என்ற கவனமற்றோராகவே உள்ளனர்.

கழிப்பறைகளுக்கு நீர் வசதியை குழாய் மூலம் செய்தால் போதாது. அதற்கென வாளிகள் வேண்டும். மக்களுக்கு காலங்காலமாக காடுகளையே மலசலகூடமாகப் பயன்படுத்தும் மக்களுக்கு நீரடைப்புக் கூடத்தையோ, சொகுசுக் கழிப்பறையையோ பயன்படுத்தத் சொல்லித்தான் கொடுக்க வேண்டும். அதை விட்டுவிட்டுச் "சனியனுகள் காட்டுவாசிகள் குப்பையாக்கிப் போட்டியள் என்ற பதங்களைப் படித்த தொழில் பார்க்கும் எவரும் சொல்வது அந்த அடைமொழிகளுக்கு அவர்களையே பொருத்தப்பாடாக்கும்.

மெத்தப் படித்தவர்களாகவும், நாகரிகமுள்ளவர்களாகவும் எல்லோரும் இருப்பதில்லை. இதே "ஆர் நேற்றுப் பிள்ளை பெத்த.....ங் உங்கட துணியளத் தரலாம். ஒரு சொப்பிங்பாக் எடுத்துக் கொண்டு வாங்கோ நீங்களே கொண்டேக் கழுவுங்கோ..... நான் கழுவினாக் காசுதராயள் எனக்கேன் தேவையில்லாத வேலை" இன்னும் அவர் வாயோயாமல் " கொண்டு வாங்க சொப்பிங் பாக்க...." என்று கூறிக்கொண்டேயிருந்தார். குழந்தை பெற்ற ஒரு தாய் சொப்பிங் பாக்குடன் போய் அந்தக் கழிவுகளை அதில் வாங்கிக்கொண்டுவந்து குழந்தைக்குப் பக்கத்தில் வைப்பதைப் ஒரு தடவை கற்பனை செய்து பாருங்கள். ஒரு பெண் மட்டும் சொன்னாள் " எனக்குத் துணியேவேணடாம். நீர் வேணுமென்றால் எடும்" என்று.

நவீன வசதிகள் வேண்டும்தான் அவற்றைப் பயன்படுத்துவோர் அது பற்றிய பயனைப்பெற விரும்பவேண்டும். காலங்காலமாக அடிப்படை வசதிகளற்று வாழும் மக்கள்தான் அதிகமாக அரச மருத்துவமனைகளில் படுக்கவருகிறார்கள். வசதியுள்ளவர்கள் தனியார் மருத்துவ மனைகளுக்குப் போகிறார்கள். இந்த மக்களுக்கு இப்படித்தான் வாழ்ந்து பழக்கம் என்று எடுத்தெறியாமல் அவர்களையும் மனிதர்களாக மதித்துப் போற்ற முன் வருவோமே.

வைத்தியப் பற்றாக்குறை, நோயாளர் பெருக்கம் என்பன அடிப்படை சுகாதார வசதிகளைப் பேணிவர இல்லாது போகும். ஆஸ்பத்திரிகளிலேயே அடிப்படை சுகாதார வசதி ஆட்டங்கண்டால், கிருமிகள் பெருகினால், முடிவுதான் ஏது. கொஞ்சம் நல்லது செய்வோமே

**மாயா**

# றெஜினோல்ட் கூரே-கொழும்பு அரசியலின் இன்றைய மையப்புள்ளி







பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பார்கள்.கொழும்பு அரசியலில் கடைசியாக ஏற்பட்ட பொருந்தாக் கூட்டும் இறுதியில் புளித்துப்போகும் நிலைக்கு வந்து விட்டது. இந்தவார அரசியல் நிகழ்வுகள் இதைத்தான் சுட்டிக்காட்டுகின்றன.

யாருடைய கடிவாளம் யாருடைய கையில்? என்பதான ஒரு இழுபறி நிலையின் உச்சத்தில் சிறிலங்காவின் ஆளும் கூட்டணியின் இன்றைய நிலை சூடுபறந்துகொண்டிருக்கிறது.

கூட்டணியின் பிரதானகட்சியும், அதிக நாடாளுமன்ற ஆசனங்களைக் கொண்டிருப்பதோடு நிறைவேற்றதிகார சனாதிபதியும் எமது கட்சிக்காரரே. ஆதலால் நாமே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய பங்காளிகள் என்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வாதம் அவர்களின் சிவப்பு நண்பர்களால் கிஞ்சித்தும் மதிக்கப்படுவதாகத் தெரியவில்லை. 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே கண்ணா' என்பதாக அவர்கள் அம்மையாரின் நீலக்காட்சியைப் பாடாய்ப்படுத்துகிறார்கள்.

கூட்டணியின் பிரதான கட்சியும் அதிக நாடாளுமன்ற ஆசனங்களைக் கொண்டிருப்பதோடு நிறைவேற்றதிகார சனாதிபதியும் எமது கட்சிக்காரரே. ஆதலால் நாமே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய பங்காளி கள் என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாதம் அவர்களின் சிவப்பு நண்பர்களால் கிஞ்சித்தும் மதிக்கப்படுவதாகத் தெரியவில்லை. 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே கண்ணா' என்பதாக அவர்கள் அம்மையாரின் நீலக்கட்சியைப் பாடாய்ப்படுத்துகிறார்கள்.

இந்த அதிகாரப்போட்டியில் தற்போது பணயம் வைக்கப்பட்டிருப்பது மேல் மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேயின் தலையாகும். இவர் மீது பத்துக்கும் மேற்பட்ட ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய ஐக்கிய தேசியக் கட்சி,(ஆளும்கூட்டணிக்குள் நிலவும் குத்து வெட்டுக்களை நாடி பிடித்துப் பார்த்துவிட்டு) ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை அவர் மீது கொண்டு வந்துவிட்டது. இதற்கான வாக்கெடுப்பு ஏப்ரல் 26 ஆம் திகதியன்று சபை நிகழ்ச்சி நிரலில் நேரமும் ஒதுக்கப்பட்டிருந்தது.

'தாங்கள் யாரென்று காட்டுவதற்கு' இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த ஜே.வி.பி முடிவெடுத்தபோதுதான் கொழும்பு அரசியலில் புகையெழும்பத் தொடங்கியது. தனது 23 உறுப்பினர்களும் ஐ.தே.கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கப் போவதாக ஜே.வி.பி உறுதிபடத் தெரிவித்ததால் ஆடிப்போன சந்திரிகா அம்மையார், அவ்வளவு பேரையும் கூப்பிட்டு தானே நேரில் பேசினார். ஆனால் அவர்கள் மசிவதாக இல்லை. ஜே.வி.பியின் இடைநிலைத் தலைவர்களான இவர்கள் ஒப்பீட்டளவில் விமல்வீரவன்சவையும், விட கடினப்போக்கை வெளிப்படுத்திய போது வேறுவழியின்றி அம்மையார் தனது மரபுரீதியான ஆயுதத்துக்குத் தாவ நேர்ந்துவிட்டது.

'மே மாதம் 17 ஆம் திகதிவரை மாகாணசபையின் அமர்வுகள் ஒத்தி வைக்கப்படுகின்றன என 25 ஆம் திகதி நள்ளிரவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியானது. உடனடியாகவே இதற்குக் கண்டனங்கள் எழுந்தன. இதில் முன்வரிசையில் நின்று வானத்துக்கும் பூமிக்குமாகக் குதித்தவர்கள், குதிப்பவர்கள் ஜே.வி.பி யினரே. இது ஒரு "சன நாயக்க கோழைத்தனம்" என அவர்கள் வர்ணிக்கின்றனர். மீண்டும் சபை அமர்வுகள் தொடங்கும்போதும் தமது நடவடிக்கையில் மாற்றம் இருக்காதென்றும் ஜே.வி.பி அடித்துக்கூறுகிறது.

"ஊழல் செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும்'' என்கிறது ஜே.வி.பி.ஊர் இரண்டுபட்டாற் கூத்தாடிக்கொண்டாட்டந்தானே. கொடுப்புக்குள் சிரித்தபடியே ஐ.தே. கட்சி இதனை ஒரு அப்பட்டமான சனநாயக விரோதச்செயலென ஜே.வி.பியை விடவும் குறைவான தொனியில் கண்டித்துள்ளதோடு அடுத்தகட்ட நடவடிக்கையையும் அறிவித்துவிட்டது. மாகாணசபை அமர்வுகளை தனது அதிகாரங்களையும் மீறி ஒத்திவைத்த மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானாவுக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரப்போகிறோம் என்கிறது ஐ.தே. கட்சி மாகாண ஆளுநருக்கு சபையைக் கலைக்க அதிகாரம் இருக்கிறதே தவிர ஒத்திவைக்க அல்ல என்கிறது அது. எனவே இன்றைய அரசியல் நீரோட்டத்தின்படி இந்தப் பிரேரணைக்கும் ஜே.வி.பி ஆதரவு வழங்கக் கூடிய ஏது நிலையே அதிகம் இருக்கிறது.

இந்த மூன்று வாரகால ஒத்தி வைப்புக்குத் தெரிவிக்கப்பட்டுள்ள நியாயம் என்ன? முதலமைச்சர் மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு இந்தக் காலம் பயன்படும் என்கிறது அம்மையாரது தரப்பு. இதனைக் கடுமையாகச் சாடும் ஜே.வி.பியோ முதலமைச்சர் கூரே மீதான குற்றச்சாட்டுக்கள் இன்று முன்வைக்கப்பட்டவையல்ல. கடந்த ஆறு மாத காலமாகவே இவை பற்றி தெரிவிக்கப்பட்டபோது சும்மா இருந்துவிட்டு:

**பு.சத்தியமூர்த்தி**

அவர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையும் வந்து, அது வாக்கெடுப்புக்கு வரும் நாளன்றுதானா விசாரணை செய்யப்படுவது பற்றி அறிவிக்கப்படவேண்டும்? என்று கேட்கக் கூடாத கேள்வியை கேட்கக் கூடாத நேரத்தில் கேட்டு அம்மையாரை மிகவும் சங்கடப்படுத்திவிட்டது.

இனிவரும் மூன்றுவாரகாலம், எதற்குப் பயன்படப் போகிறது? கூரே மீதான விசாரணைக்கா? அப்படி நாங்கள் நினைத்தால் எங்களையிட்டு நாங்களே அனுதாபப் பட்டுக்கொள்ளவேண்டியதுதான். நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களிக்கும்படி கூட்டணி தர்மத்தை முன்வைத்து ஜே.வி.பிக்கு அழுத்தம் கொடுக்க அம்மையார் தீவிரமாக முனைவார். அத்தோடு ஐ.தே. கட்சியின் உறுப்பினர்களை வளைத்துப் போடவும் முனைவார். ஆனாலும் ஓரளவுக்கு தமது பிரேரணை வென்று விடக்கூடும் என எதிர்பார்க்கக்கூடிய தருணத்தில் ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் கட்சி மாறுவார்களா? என்பதுவும்; அப்படிச் சிலர் மாறினாலும் அது ஜே.வி.பியின் 23உறுப்பினர்களின் இழப்பையிட்டு நிரப்பப் போதுமா? என்பதுவும் இன்று அம்மையாருக்குள்ள முக்கிய பிரச்சினைகள்.

எனவே அம்மையாருக்கு இன்று இரண்டு தெரிவுகளே உள்ளன.

1. றெஜினோல்ட் கூரே பதவி விலகுவது அவ்வாறு அவர் விலகினால் கூட்டணிக்குள் ஜே.வி.பியின் கை கட்டுப்படுத்த முடியாதபடிக்கு ஓங்கிவிடும் என்பதோடு, மக்கள் மத்தியில் ஆட்சியை நடத்திச் செல்பவர்களும் நேர்மைக்கும் நீதிக்குமாகப் போராடுபவர்களும் ஜே.வி.பியினரே என்பதுமான ஒரு படிமம் விழுந்து விடக் கூடிய ஏதுநிலை தோன்றும். இது அம்மையாரால் ஒன்றுமே விரும்பப்பட மாட்டாது. அத்தோடு அவரது கட்சிக்கான மரண சாசனமாகவும் இது அமைந்துவிடக் கூடும்.

2. மாகாணசபையைக் கலைத்துவிடுதல். இவ்வாறு நடந்தால் அதன்பின் சிவப்பு நீலக் கூட்டணி நீடிக்கச் சந்தர்ப்பம் மிகக்குறைவு. ஜே.வி.பியின் 'ரோதனை'களைத் தாங்கிக்கொண்டு ஆட்சி நடத்த முடியாதென்பதால் நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டே ஆகவேண்டிய சூழல் உருவாகும்.

இதுவும் தற்போதைய அரசியல் பொருண்மிய முன்னணியில் அம்மையாருக்கு அவ்வளவு உவப்பான விடயமல்ல.

ஆனால் இந்த இரண்டு தெரிவுகளில் இரண்டாவது மட்டுமே அம்மையாரால் விரும்பப்படக் கூடுமென்பதே மிகப் பரவலான எதிர்பார்ப்பாகும். அதனையே ஐ.தே.கட்சியும் விரும்புகிறது. அதனது தேவை நாடாளுமன்றத் தேர்தல் அல்ல. அம்மையாரது ஆளும் சிவப்பு நீலக் கூட்டணியை உடைப்பதே ரணிலது வேலைத்திட்டத்தில் முதன்மையானது. மேல்மாகாணசபை முதல்வரை முன் வைத்து அதனைச் சாதித்துவிடும் நிலையின் விளிம்பிற்கு ரணில் வந்துவிட்டார்.

ஆனால் ரணிலின் முதன்மை இலக்கு நாடாளுமன்ற அதிகாரமல்ல. அதனையும் மேவி நிறைவேற்றதிகார சனாதிபதிப் பதவியிலேயே ரணில் குறிவைத்து இயங்குகிறார். அதற்காகவே ரவூப்ஹக்கீமை கைக்குள் வைத்துக்கொண்டு அவரது இழுப்புக்கெல்லாம் இழுபடுவதாக பாவனை பண்ணிக்கொண்டிருக்கிறார். இடைக்கால அதிகாரசபை,ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்புப் பற்றியெல்லாம் எதிர் நிலையெடுக்காமல் இருக்கிறார்.

தனது இலக்கு நோக்கி பயணிக்கும் இடைத்தங்கல் முகாம்களாக தற்போதைய சலசலப்புக்களைப் பயன்படுத்துகிறார் ரணில். ஆக,கொழும்பின் அரசியல் இழுபறியின் மையப்புள்ளியாக இன்று மாறியிருப்பது றெஜினோல்ட் கூரே விவகாரம். ஆனால் தென்னையிலே தேள் கொட்ட பனையிலே நெறிகட்டிய கதையாக சிறிலங்கா நாடாளுமன்றத் தேர்தலை தவிர்க்க முடியாதபடி எதிர்நோக்குகிறது என்பதே கொழும்பில் நிலவும் யதார்த்தமாகும்.

# நறுக்கென...

## என்னதான் செய்வது?



கடைசியாக அந்த உண்மையை இராணுவத்தரப்பே ஒப்புக்கொண்டுவிட்டது. கடந்த இரு தசாப்த கால யுத்தத்தில்... களத்தைவிட்டு ஒட்டுமொத்தமாக எண்பதாயிரத்து அறுநூற்று அறுபத்தொரு படையினர் தப்பி ஓடியுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்நாயக்கா இச்செய்தியைக் கொழும்பில் செய்தியாளர்களுக்குத் தெரிவித்ததன் மூலம் ஒரு ஒப்புதல் வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதாவது களத்தில் இருந்து ஆயுதங்களைப் போட்டுவிட்டோ, அல்லது ஆயுதங்களுடனோ தப்பியோடியவர்களின் தொகையே இதுவாகும்.

அப்படியானால் போரில் கொல்லப்பட்டவர்கள், போரின்போது காணாமல் போய்விட்டார்கள் என்று பாதுகாப்புத் தரப்பினால் அறிவிக்கப்பட்டவர்கள், யுத்தத்தில் ஊனமுற்று களப்பணிகளைச் செய்யமுடியாது விலகிப்போயுள்ளவர்கள் ஆகியோரின் தொகையையும் கணக்கிட்டுப்பார்த்தால் அந்தத் தொகை லட்சத்திற்கும் அதிகமானதாகிவிடுமல்லவா?

அதுசரி தப்பியோடியவர்களில் இன்னமும் தலைமறைவாக உள்ளவர்களின் தொகை 70 ஆயிரம் வரை இருக்கிறதாம்.

இதேவேளை சமாதான காலத்தில் தப்பியோடுவோர் தொகை 70 வீதத்தால் குறைந்துள்ளது என்று அவர் கூறுவதை வைத்துப் பார்க்கும்போது இன்னமும்- போரற்ற நேரத்திலும் தப்பியோடுவோர் ஓடிக்கொண்டுதான் உள்ளனர் என்ற செய்தியும் உண்மையாகியுள்ளது.

தப்பியோடியவர்களில் தலைமறைவாக இருக்கும் 70 ஆயிரம் பேர் என்ன செய்கிறார்கள், இவர்கள் எடுத்துச் சென்ற ஆயுதங்கள் எவ்வளவு போன்ற விபரங்களும் அந்தப் பிரிகேடியருக்கு தெரிந்தே இருக்கும். இதனை அடிப்படையாக வைத்து ஆய்வொன்றை மேற்கொண்டால் தென்னிலங்கையில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களுக்கும், பாதாள உலகக் கும்பல்களின் செயற்பாடுகளுக்கும் யார்காரணம் என்பது பெரும்பாலும் தெரிந்துவிடும்.

அது கிடக்கட்டும், பிரிகேடியர் இந்த உண்மையை வெளியிட்டதால் இராணுவத்தின் மனோபலம் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், மேலும் பலர் படையிலிருந்து தப்பியோடுவதற்கு இது வழிவகுக்கப்போகிறது என்றும், படைத்தரப்பினரின் தொகையை அதிகரிக்கத்தீவிர முயற்சிகள் எடுத்துவரும் வேளையில் இராணுவப் பேச்சாளரின் இந்த புள்ளிவிபர வெளிப்படுத்தல் அதற்குப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும் இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

எது எப்படியானாலும் புதிய ஆட்சேர்ப்புக்களும் உறுதியான படையினரை உள்வாங்கும் நடவடிக்கையாக அமையுமா என்ற கேள்வி பாதுகாப்பு வட்டாரத்தில் எழவே செய்துள்ளது.

மீண்டும் யுத்தம் வருமெனில் படையைவிட்டு ஓடத்தொடங்குவோர் தொகை அதிகரிக்கவே செய்யும். அதனைத்தடுக்கவே முடியாது என்றும் கூறப்படுகிறது.

## சங்கரியார்: ஆரம்பமே நல்லாயில்ல



த.வி. கூட்டணியின் தனிப்பெரும் தலைவர் ஆனந்தசங்கரியாரின் கதிகள் தொடர்ந்துகொண்டே போகின்றன.

கடந்த சில வாரங்களாக சங்கரியார் தமிழ் மக்களின் கழுத்தில் கத்தி வைக்குமளவிற்கு களத்தில் இறங்கி கதைக்க ஆரம்பித்துவிட்டார்

அதுமட்டுமல்ல மற்றொரு த.வி.கூட்டணிக்கும் தலைவராக நியமிக்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

முன்னர் தமிழர் விடுதலைப் கூட்டணிக்குத் தானே தலைவரென பட்டம் சூடிக்கொண்டு தானே தந்தை செல்வாவின் வாரிசு எனத் தம்பட்டம் அடித்துத் திரிந்தவர் இப்போது தமிழர் விரோதக் கூட்டணி ஒன்றிற்கு அயலகத்தில் வைத்து தலையேற்கக் கோரப்பட்டதையடுத்து அவருக்குப் பொருத்தமான கட்சித் தலைவராகியுள்ளாராம்.

ஏற்கனவே கதிர்காமரை ஓரம்கட்டும் அளவுக்கு தமிழின மற்றும் விடுதலைப் புலிகள் எதிர்ப்புப் பிரசாரத்தில் உச்ச மொத்த அறளைத்தனத்துடன் பிரசாரங்களை மேற்கொண்டு வந்த சங்கரியார், இப்போது ஹெலஉறுமயப் பிக்குகளையும், ஜே.வி.பி கும்பலையும் வியப்பால்விழிபிதுங்க வைக்குமளவிற்கு பொதுக்கட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து தன் முழுமையான சுயத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு என்பது தேவையற்ற ஒன்று என்றும். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும் திருவாய் மலர்ந்தருளியுள்ள சங்கரியார் கடைசியில்

பொதுக்கட்டமைப்பு உருவானால் அதனால் இந்திய நலன்களும், இந்தியாவின் பாதுகாப்பும் பாதிக்கப்படும் என்றும் இந்தியா அதனைத் தடுக்க முன்வரவேண்டுமென்றும் அறைகூவல் தொனியில் கூறி தனது பெளத்த சிங்கள மற்றும் இந்திய எஜமானர்களின் உள்ளங்களில் ஐஸ் மழை கொட்டியுள்ளார்.

உடனேயே அவரை தமிழர் விரோதக் கூட்டணியின் தலைமையை ஏற்க இவரைவிடப் பொருத்தமான ஆசாமி ஒருவர் ஒருகாலத்திலும் கிடைக்கப் போவதில்லை என்று முடிவுகட்டிய அயலக உளவுத்துறையினர் அவர்கள் வசமிருந்த -ஈ.என்.டி.எல்.எவ், வரதராஜப் பெருமாள் அணியினர், கருணா கும்பல் மற்றும் இவைபோன்ற தமிழ்த்தேசிய விரோதக் குழுக்களுக்கெல்லாம் தலைவராக்கியுள்ளதாக ஊடகங்கள் 'இழவுச்' செய்தியொன்றினை வெளியிட்டுள்ளன.

ஏற்கனவே கொடி-குடை-ஆலவட்டம், போன்றவற்றை மட்டுமல்ல அனைத்தையும் இழந்து துண்டைக்காணோம்,துணியைக்காணோம் என்று ஓடிய சங்கரியாரின் கோவணச் சீலையையும் பறிக்க அவர்கள் தீர்மானித்துவிட்டார்கள் போலும்.

பாவம் புதுப் பதவியைப் பொறுப்பேற்றதுமே, சேருவில சம்பவத்தில் கொல்லப்பட்ட ஈ.என்.டி.எல்.எவ் உறுப்பினர்களின் சடலங்களைப் பொறுப்பேற்று அடக்கம் செய்யும் திருப்பணியை பொறுப்பேற்க வேண்டியவராகிவிட்டார்...

சங்கரியாரே ஆரம்பமே நல்லாயில்லையே! பதவிப் பதர்களுக்கு இப்படி ஒரு இழிந்த வாழ்வு தவிர்க்கமுடியாதது தானே...!

## சொல்ல வேண்டிய தருணத்தில் சொல்லத்தான் வேணும்



அமெரிக்கத் தரப்பிலிருந்து இப்படி ஒரு கருத்து முன் வைக்கப்படும் என எவருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்தான்...

ஆனாலும் சொல்ல வேண்டிய விடயங்களை சொல்லவேண்டிய தருணம் வரும்போது சொல்லத்தானே வேண்டும்.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் பட்டியலில் அமெரிக்க வல்லரசு இணைத்துக்கொண்டாலும் கூட அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கையை அமெரிக்க அரசு எதிர்க்கவில்லை என்று அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்கான இராஜாங்க உதவிச் செயலாளரான கிறிஸ்டீனா றொக்கா கூறியுள்ளமையானது பேரினவாதிகளுக்கு மட்டுமல்ல வேறு பலருக்கும் கூட வயிற்றில் புளிகரைக்கும் விடயமாகிவிட்டது.

ஏற்கெனவே விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர்மட்ட அரசியல் குழுவினர் அண்மையில் மேற்கொண்ட ஐரோப்பிய சுற்றுப் பயணம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் , போராட்டம் மற்றும் இலங்கையரசின் அணுகுமுறைகளின் போலித்தனம் மற்றும் நேர்மையின்மை தொடர்பாக ஒரு தெளிவான கருத்தியல் நிலைப்பாட்டை அவர்கள் எடுக்க வாய்ப்பளித்திருப்பதாகக் கூறப்படும் நிலையில் கிறிஸ்டீனா றொக்காவின் இக்கருத்தும் வெளியாகியுள்ளதானது குறிப்பிடத்தக்க ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவேயுள்ளது.

இப்போதுள்ள சூழலில் இலங்கைத்தமிழர் விவகாரத்தில் மட்டுமல்ல இலங்கையரசுடனான அதன் உறவு உட்பட பல விடயங்களில் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க முடியாது இந்திய கொள்கை வகுப்பாளர்கள் மட்டுமே திணறிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு இந்தியாவின் 'றோ' புலனாய்வுப் பிரிவும் அவர்களுக்கு ஆலோசனை வழங்கிக்கொண்டும் அவர்களின் கூலிப்படையாக இயங்கும் சுயநல தமிழ்த்தேசிய விரோதக் குழுக்களின் செயற்பாடுகளுமே காரணமாகும்.

உண்மையில் இந்தியாவின் எதிர்காலப் பாதுகாப்புக்கு இலங்கைத் தமிழ் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் வகையில் இந்தியா தனது தவறான மதிப்பீடுகளையும் கொள்கைகளையும் களைந்துவிட்டு சரியானதும் உறுதியானதுமான நிலைப்பாட்டை எடுக்கவேண்டியது அவசியம் என்பதையும் கிறிஸ்டீனா றொக்காவின் கருத்து தெளிவாக்கியுள்ளது என்றே கூற வேண்டும்.

அமெரிக்க அரசின் இலங்கை விவகாரம் மீதான கண்ணோட்டமானது இந்து சமுத்திரப் பிராந்தியம் மீதான அதன் மேலாதிக்க மற்றும் இராணுவ நலன்களை மையமாகக் கொண்டதாகவே எபபோதம அமையும் என்பதை விபரிக்க வேண்டிய அவசியமேயில்லை.

இந்தச் சூழலில் பொதுக்கட்டமைப்பு விவகாரம். சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான நெருக்கடிகள் ஆகியவை மீதான ஐரோப்பிய-அமெரிக்க நாடுகளின் அணுகுமுறை அரசுக்கு அது குறித்து அழுத்தம் கொடுப்பதாக உள்ள சூழலில் "றொக்கா" வின் இந்தக் கருத்தை இலங்கை அரசும் பேரினவாத சக்திகளும் அச்சத்துடன் நோக்க ஆரம்பித்துள்ளன என்றால் மிகையில்லை. நன்றி... கிறிஸ்டீனா றொக்கா அவர்களே!

## சமாதானப் புறாக்களுக்கு ஆபத்து



"இன்றைய முக்கிய விடயம் என்ன தெரியுமோ?"

'பேயும்-சாத்தானும் சமரசத்திற்கு தயாராகிவருகின்றனவாம்' கொழும்பிலிருந்து புதுவருசத்திற்கு வந்த கொண்டோடி சுப்பர்தான் இந்தப் புதினத்தை அவிழ்த்துவிட்டார்.

பொதுக்கட்டமைப்பு, இடைக்கால நிர்வாக அதிகாரசபை, சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்பு முயற்சிகள், தனியார் மயமாக்கல் என எல்லாவிடயங்களிலும் சனாதிபதிக்கும், அரசுக்கும் தலைவலியையும், மனவலியையும் தாராளமாகவே கொடுத்துவரும் ஜே.வி.பி யினர் தமது அரசியல் நகர்வுகளை மிகவும் துல்லியமாக திட்டமிட்டவகையில் மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

முதலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து பொதுசன ஐக்கிய முன்னணியை பலவீனப்படுத்தவேண்டும். அதற்குள் இணைந்திருந்த அந்தக்கால இடதுசாரிக் கட்சிகளின் முகவரியை இல்லாததாக்க வேண்டும். சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் உள்ளக முரண்பாடுகளை உருவாக்கி அக்கட்சியைக் கூறாக்க வேண்டும். அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் முன்னுக்கு வராமல் செய்ய அக்கட்சிக்குள் முரண்நிலையை உருவாக்குதல் வேண்டும்.. என ஜே.வி.பியினரின் நீண்டகால அரசியல் உள்நோக்குடனான சகல திட்டங்களும் ஐ.ம.சு முன்னணி ஆட்சியமைத்த ஓராண்டிற்குள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு முடிந்தநிலையில்...

இப்போது அடுத்த கட்ட நடவடிக்கையில் அது இறங்கியுள்ளது என்றே கூற வேண்டும். அதாவது தங்கள் நடவடிக்கைகளால் வெளிக்காட்ட முடியாதளவுக்கு கடுப்பாகி இருக்கும் சனாதிபதி சர்வதேச அழுத்தம் மற்றும் வேறு சில தவிர்க்க முடியாத காரணிகளால் தங்களைப் புறக்கணித்துவிட்டு சில நடவடிக்கைகளை மேற்கொண்டாலோ, அல்லது அரசைக் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தலை நடத்தமுற்பட்டாலோ எழக் கூடிய சிக்கல்களை மனதில் கொண்டு ஒரு புதிய வியூகத்தை அமைக்கத் தயாராகிவருகிறதாம்.

ஏற்கனவே சனாதிபதியுடன் கசப்படைந்துள்ள மங்கள சமரவீரவையும் வேறு சிலரையும் தம்வசம் இணைத்துக்கொண்டு ஹெலஉறுமயவுடன் உறவுகளை வலுப்படுத்த மறைமுக செயற்பாடுகளில் ஜே.வி.பியினர் இறங்கியுள்ளதுடன் அநுராவையும் தமது பொறிக்குள் சிக்கவைக்க முயன்று வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

அப்படியெனில் அதிதீவிர பெளத்த சிங்கள பேரினவாதிகளின் கூட்டணியொன்று மூன்றாவது சக்தியாகத் தென்பகுதியில் உருவாகும் சூழல் உருவாகலாம். "பொதுக்கட்டமைப்பை எதிர்க்க சிங்கள இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலை உருவாகும் என எச்சரித்துள்ள ஹெல உறுமயவினர் ஜே.வி.பி யினரையும் அதில் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளதைக் கவனித்துப் பார்த்தால் பல விடயங்கள் புரியும்"

ஆகப் பேயும் சாத்தானும் நெருங்கி வருகின்றன... அவற்றின் பின்னால் ஏனைய குட்டிச்சாத்தான்களும் அணிதிரளலாம்...

சமாதானப் புறாக்களுக்கு ஆபத்துக் காத்திருக்கின்றது.

செங்குட்டுவன்

# இணையும் கரங்களிடம் பகைவனின் சூழ்ச்சி நெருங்காது

"நாங்க எங்கட உம்மா வாப்பா மற்ற எங்கட உறவினர்கள் எல்லோரிடம் எல்லாத்தையும் சொல்லுவம். அவங்க இன்னும் பழைய சில எண்ணங்களோட தான் இப்பவும் வாழுறாங்க.

நாங்க இண்டைக்கு உண்மையில பெரிய சந்தோசத்தில இருக்கிறம். நாங்களும் நீங்களும் ஒரு மொழியைத்தானே பேசிறம். ஒரே நிலத்திலதானே வசிக்கிறம். ஏன் எங்கட மனசில இந்த சூழ்ச்சிகள திணிச்சாங்க. உண்மையச் சொல்லப்போனா எங்களுக்கும் உங்களுக்குமிடையில இடைவெளியெண்டு சொல்லுறது வெறும் அறியாமை மட்டும்தான்.

நாமை இனிமேலும் எங்களுக்கிடையில இருக்கிற இடைவெளியை நிரப்பி உறவுகள பலப்படுத்தோணும் என்றாள் எழுவான் கரையிலிருந்து படுவான் கரையை நோக்கி வந்திருந்த அந்த இஸ்லாமிய சகோதரி ஒரு போராளியை நோக்கி...

உண்மைதான். நாங்களும் இஸ்லாமிய தமிழ் சகோதரர்களும் எப்போது மனங்களால் பிரிந்தோம். நாங்கள் ஒருபோதும் மனங்களால் பிரிந்துபோகவில்லை. எதிரியின் சூழ்ச்சிகளுக்கு இரையாகிப்போன அரசியல் தலைவர்களின் மனங்கள் மட்டுமே பிரிந்துபோயின. எல்லோருமல்ல.

அன்று படுவான் கரையில் சகவாழ்வு அமைப்பால் தமிழ் முஸ்லிம் மகளிர் ஒன்று கூடலில் கனிந்துவிட்ட ஒற்றுமையின் தாற்பரியத்தை எதிரிகள் கண்டிருந்தால் நிச்சயம் அதிர்ந்துதான போயிருப்பார்கள்.

மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்ரினன்ட் கேணல் கௌசலயன் அவர்களின் வீரமரண நிகழ்வில் வெளிப்படத் தொடங்கிய கிழக்கின் புதிய உதயம் இப்போது வியாபிக்கத் தொடங்கியிருக்கிறது என்றால் மிகையில்லை.


தமிழ்-இஸ்லாமிய இனங்களுக்கிடையில் சூழ்ச்சி விதை தூவிய எதிரி அதன் பலா பலன்களை அறுவடை செய்துகொண்டிருந்தான். ஆனால் அதன் துயரங்களை தமிழ் இஸ்லாமிய உறவுகள்தான் தங்கள் மனங்களில் சுமந்தார்கள். ஆனால் நீளும் அந்த எதிரியின் கோர சூழ்ச்சி இந்த சமாதான காலத்தில் கணிசமானளவு அதன் மாயைகளைக் களைந்துவிட்டிருப்பதில் புலிகளின் அரசியல் வேலைத்திட்டம் நன்கு பலனளித்திருப்பதை காணக் கூடியதாகவே உள்ளது.

சகவாழ்வு மகளிர்மன்றம் என்ற இந்த அமைப்பு படுவான் கரையில் அன்று தமிழ்-இஸ்லாமிய இனங்களுக்கிடையில் சகவாழ்வையும் நல்லுறவையும் கட்டிவளர்க்கும் நோக்கோடு கூட்டியிருந்த அந்நிகழ்வு உண்மையில் ஒரு பெறுமதிமிக்க பெறுமானத்தை அளிக்கவே செய்தது.

இராணுவத்தின் அடிமைக் கரங்கள் அகல விரிந்திருக்கும் எழுவான் கரை இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து சுமார் இருபதிற்கு மேற்பட்ட இஸ்லாமிய சகோதரிகள் வந்திருந்தார்கள். அங்கு மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளந்திரையன் மட்டு-அம்பாறை மாவட்ட கட்டளைப் பணியகப் பொறுப்பாளர் சுரேஷ், விடுதலைப் புலிகளின் ஒளிக்கலைப்பிரிவு பொறுப்பாளர் செந்தோழன் மற்றும் பல போராளிகளும் கலந்துகொண்டிருந்தனர்.



ஒன்றாகக் கூடி தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கருத்துக்களை உள்வாங்கிய போது அந்த இஸ்லாமிய சகோதரிகளின் மனங்களுக்குள் அந்த இஸ்லாமிய சமூகத்திற்குள் தமிழ் தொடர்பாகவும், போராளிகள் தொடர்பாகவும் ஊட்டப்பட்டிருந்த உண்மைக்குப் புறம்பான கற்பனைகளால் வனையப்பட்ட கருத்துருவாக்கம் மெல்ல மெல்ல உடைந்து சிதைந்த போது தமிழ்-இஸ்லாமிய உறவின் கரங்கள் இணைவதை எவராலும் தடுக்க முடியாது என்பதையே பறைசாற்றியது.



இஸ்லாமிய சகோதரிகளின் கரங்களை ஆரத்தழுவிய அந்தப்பெண் போராளிகளை இவர்களையா நாங்கள் புரிந்து கொள்ள மறுத்தோம் எங்களுக்குள் ஏன் இந்த உறவு நீடிக்காமல் விட்டது என்பது போல அந்த இஸ்லாமிய சகோ தரிகள் அந்தப் பெண் போராளிகளை ஆரத் தழுவினார்கள்.

இஸ்லாமிய சகோதரிகளின் கரங்களை ஆரத்தழுவிய அந்தப்பெண் போராளிகளை இவர்களையா நாங்கள் புரிந்து கொள்ள மறுத்தோம், எங்களுக்குள் ஏன் இந்த உறவு நீடிக்காமல் விட்டது என்பது போல அந்த இஸ்லாமிய சகோதரிகள் அந்தப் பெண் போராளிகளை ஆரத்தழுவினார்கள்.

நிகழ்வின் ஒரு கட்டத்தில் மட்டு அம்பாறை மாவட்ட கட்டளைப் பணியகப் பொறுப்பாளர் சுரேஷ் அவர்கள் தமிழ்-இஸ்லாமிய உறவு பற்றியும் இஸ்லாமிய சகோதரர்களைப் பற்றிய புலிகளின் நம்பிக்கை பற்றியும் அவா பற்றியும் உரையாற்றி விட்டு கீழிறங்கிய சுரேஷ் அவர்களை அணுகிய அந்த இஸ்லாமிய சகோதரிகள் "நீங்க இன்னும் கனக்கப் பேசுவிங்க எண்டு எதிர்பாத்தம். நீங்க பேசின எல்லாம் நல்லாயிருந்தது. எங்கள் மீது நீங்க இப்படியெல்லாம் ஒரு எதிர்பார்ப்பு வச்சிருப்பிங்க எண்டு எங்களுக்குத் தெரியாது. எங்களுக்கு மிக சந்தோசமாக இருக்கிறது" என்றாள் அந்த இஸ்லாமிய சகோதரி.



இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் இருந்த அந்த இஸ்லாமிய சகோதரிகளை மட்டுமல்ல அங்குள்ள மக்க

## வேறினி

ளினதும் மூளைகளை சலவை செய்திருந்த இராணுவத்தின் கருத்தூட்டல்கள் அந்தப்போராளிகளோடு பழகியபோது கலையத்தொடங்க அவர்களால் நம்ப முடியவில்லை. இதை அந்த நிகழ்வில் கலந்துகொண்ட செந்தோழன் இப்படிச் சொல்கிறான்.

"அந்த நிகழ்வில் போராளிகள் அவர்களோடு இனிமையாகப் பழகியதையும், அவர்களை நட்போடு தங்களுடன் உள்வாங்கியதையும் பார்த்த போது அவர்களுக்கு ஒரு வித்தியாசமான உணர்வைக் கொடுத்திருக்கும் என நான் நம்புகிறேன். எங்கள் அணுகு முறைகளையெல்லாம் அவர்கள் பார்த்த போது புலிகள் இயக்கம் இப்படியெல்லாம் இருக்கிறதா என்று வியக்கிறார்கள். எங்களைப் பற்றி அவர்களுக்குள் ஒரு பயங்கரமாக உருவாக்கப்படுத்தப் பட்டிருக்கிறது. அதனால் அவர்களின் மதிப்பீடும் அது சார்ந்த தாகவே அதுவரை இருந்தது. இன்னுமொரு சம்பவத்தையும் நினைவு கொள்ளவேண்டும். ஒரு போராளியின் கமராவிலுள்ள படங்களைப் பார்த்த அவர்கள் போராளிகள் கட்டுக்கோப்பான முழுமையான இராணுவச்சீருடை அணிந்து நேர்த்தியாக இருப்பதைப் பார்த்து வியந்து போனார்கள். அதோடு அந்த கமராவில் மட்டக்களப்பின் அழகிய காட்சிகளைப் படமெடுத்திருப்பதைப்பார்த்து உங்களுக்கு இப்படியான இரசனையெல்லாம் இருக்கிறதா என்ற போது போராளிகள் தொடர்பாக அவர்களுக்குள் உருவாக்கப்பட்டிருந்த உருவகத்தை கற்பனை செய்யக் கூட முடியாதிருந்தது. ஆனால் அன்று அவர்களின் மனங்களில் இருந்து கடைந்தெடுக்கப்பட்டுவிட்டது என்பதை அவர்கள் எங்களிடமிருந்து விடை பெற்றபோது புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது என்கிறார்.

இதற்கு ஒரு நல்லதொரு உதாரணத்தை என்னால் சொல்ல முடியும். சாதாரணமாக ஆண்களோடு பழகுவதையோ அல்லது தேவையற்ற சந்திப்புக்களையோ தவிர்த்துக்கொள்ளுகின்ற ஒரு கட்டுப்பாடு கொண்ட இஸ்லாமிய சகோதரிகள் அன்றைய நிகழ்வில் ஒரு போராளிக்கு உணவில்லை போதாது என்கிற போது தன்னுடைய உணவுப் பொதியில் "இதில நீங்களும் சாப்பிடுங்க நானும் சாப்பிடுறன்" எனக்கூறி ஒரே உணவுப் பொதியில் ஆளுக்குப் பாதியாக ஒரே மேசையில் அமர்ந்து பங்கிட்டுக் கொண்டதைப் பார்த்தபோது ஒரு புதிய மாற்றத்தின் சூரியனாகவே அந்தக்காட்சி தென்பட்டது.

உண்மையிலேயே இதிலிருந்து நாம் ஒன்றை காணக் கூடியதாக இருந்தது. தமிழ் இஸ்லாமிய மக்களிடையேயான கால்புணர்ச்சி என்பது வெளியிலிருக்கிறதேயொழிய இஸ்லாமிய தமிழ் மக்களின் மனங்களில் இல்லை என்பதுதான். அரசியல் மயப்படுத்தப்பட்ட அரசியல் இலாபங்களுக்காக அரசியல் தலைவர்களால் தூண்டிவிடுகின்ற பிரச்சினையைத்தவிர மக்களின் அடி மனங்களில் இல்லவேயில்லை.

இதுமட்டும் போதுமா நாங்கள் எங்கள் நட்புறவை வளர்க்கப் புதிய புதிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை அதிகமாவே உள்ளது அல்லவா?

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 29 . 04 . 2005

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com


## எதிர்பார்த்த நெருக்கடி..!

பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கவனமும், நம்பிக்கையும் வலுவடைய அதற்கெதிரான கூச்சல்களும், எதிர்ப்புகளும் அதற்கு நிகராக அதிகரித்து வருகிறது.

அரசு ஒரு புறம் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான தனது சாதகப் போக்கை வெளிப்படுத்துவது போன்ற ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கிக்கொண்டு மறுபுறம் காலத்தை இழுத்தடிப்பதற்கான நழுவல் போக்கை கடைப்பிடிக்கிறது.

ஆனால், தென்னிலங்கையில் அரசின் சக பங்காளிக் கட்சிகளோ கண்கொத்திப்பாம்புகளாய் அரசை அச்சுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியை இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான புலிகளின் வரைவை அடிப்படையாக வைத்து ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிராகத் தனது அதிகார அஸ்திரத்தைப் பாவித்து ஆட்சி அதிகாரத்தை வீழ்த்தி ஜே.வி.பியுடனான கூட்டுடன் இன்றைய ஆட்சி அதிகாரத்தை பற்றிக்கொண்டார். இதே கூட்டுக்கு உதவிய ஜே.வி.பி, கூட இருந்தே குழிபறிக்கும் தனது கோர முகத்தை இப்போது சந்திரிகாவுக்கு எதிராக வெளிப்படுத்தி வருகிறது.

ஜே.வி.பியின் மேல் மாகாணசபை முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா வாக்கெடுப்புக்கு ஆதரவாக வாக்களிக்கப்போவதான நிலைப்பாடானது சந்திரி காவின் சேரக்கூடாதவர்களுடன் கூட்டு சேர்ந்த தன் விளைவின் பயனாகும்.

நாட்டில் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த சூழ் நிலைல்யில் முற்றிலும் சமாதான விரோத சக்தியான ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தமையானது அவர் எதனையும் எதிர் கொள்ளத் தயாரான ஒரு நிலையில் ஏற்படுத்திய கூட்டே அன்றி வேறில்லை.

ஆகவே, ஜே.வி.பி யின் பொதுக்கட்டமைப்பு தொடர்பான நிலைப்பாடு தொடர்பாகக் கவலை கொள்ளவோ சிந்திக்கவோ தேவையற்ற ஒன்றாகவே பார்க்கவேண்டும்.

ஏனெனில் மத்திய மாகாணசபைப் பிரச்சினைக்கு முகம் கொடுப்பதும் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக நெருக்கடியை எதிர் கொள்வது என்பன சனாதிபதி சந்திரிகா ஏற்கெனவே எதிர் பார்த்திருக்க வேண்டும்.

இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகா ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டிற்கு வரவேண்டிய தருணம் அவரை அண்மித்து விட்டதாகவே கருதவேண்டியுள்ளது.


மேல்மாகாண சபை விவகாரத்தில் அரசுக்கு எதிராக செயற்படும் ஐக்கிய தேசியக்கட்சி பொதுக் கட்டமைப்பு விவகாரத்தில் அரசுக்கு எதிராகச் செயற்படும் நிலைகாணப்படவில்லை.

இந்த நிலையில், கூட்டுப் பொறுப்பை மீறி செயற்பட ஜே.வி.பி முனைகின்ற நிலைமையில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்திற்கு துணிந்து அவரால் செயற்பட முடியும். ஆனால் அவ்வாறு செயற்படப் போவதில்லை.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் அவர்கள் குறிப்பிட்டது போல பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்தை காரணம் காட்டி ஜே.வி.பி அரசிலிருந்து விலகுமாயின் அரசு அஞ்சத் தேவையில்லை. ஏனெனில் அரசை வீழ்த்த வேண்டுமாயின் ஜே.வி.பி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தே வீழ்த்த வேண்டும்.

இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாக செயற்படுகின்ற நிலைமை இல்லை.

எனவே பொதுக் கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பாக சனாதிபதி சந்திரிகா எதிர்கொள்ளுகின்ற ஒரு நெருக்கடி பெரியதொரு பிரச்சினையல்ல.



# மாறி வரும் சர்வதேச சூழல்

**மு.தமிழ்ச் செல்வன்**

நாம் முன்னர் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று திரும்பிய தற்கும், இப்போது சென்று திரும்பியமைக்குமிடையில் நிறைய வேறுபாடுகளைக் காண்கின்றோம். முன்னர் சிறிலங்கா அரசின் பொய்ப்பிரசாரங்களை வைத்துக்கொண்டு பல கேள்விகளை எம்மீது தொடுத்த அவர்களின் நிலை மாறியிருக்கின்றதே என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்கள் கூறியிருக்கின்றார்.

**சர்வதேச சமூகம் இலங்கையில் சமாதானம் நிலவுவதையே இன்று விரும்புகின்றது. இது சிறிலங்கா அரசுக்கும் புரிந்திருக்க வேண்டும். ஆனால் அரசினதும், அதன் படைகளினதும் செயல்பாடு சமாதானத்தைத் தொடர்ந்து பேணுவதாகத் தெரியவில்லை.**

அரசியல்துறைப் பொறுப்பாளரின் கருத்து இப்போது நிதர்சனமாகிக் கொண்டிருக்கின்றது. அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்காவின் தெற்காசிய நாடுகளுக்கான இராஜாங்கச் செயலர் கிறிஸ்டீனா றொக்கா அவர்கள் தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை அமெரிக்கா ஒரு போதும் எதிர்க்கவில்லையென கூறியிருப்பது அமெரிக்காவின் நிலைய வெளிப்படுத்துகிறது. அதுமட்டுமன்றி அமெரிக்க நாடாளுமன்ற செனட் உறுப்பினர்கள் வன்னிக்கு வந்து சென்றமையும் அவர்கள் கூறிய கருத்துக்களும் விடுதலைப் புலிகள் சார்பாக அமெரிக்காவின் நிலைப்பாடு மாறியுள்ளதைக்காட்டுகிறது.

தனது பயங்கரவாதப் பட்டியலில் அமெரிக்கா பல அமைப்புகளை உள்ளடக்கியுள்ளது. அதில் விடுதலைப் புலிகள் அமைப்பும் அடங்குகின்றது. ஆனால் அமெரிக்கா விடுதலைப் புலிகள் சார்பாக பேணுகின்ற உறவு மற்றும் கொள்கை போன்று தனது பயங்கரவாதப் பட்டியலில் உள்ள ஏனைய அமைப்புகளுடன் மேற்கொள்வதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே ஐரோப்பிய நாடுகளிலும்நிலைமை மாறியிருக்கின்றது. ஐரோப்பிய நாடுகளில் தங்கள் தங்கள் அரசாங்கங்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பல பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளைச் சந்தித்து அவர்கள் கூறுகின்ற கருத்துக்கள் அனைத்தையும் கவனித்து பார்க்கும் போது விடுதலைப் புலிகள் சார்பாக அவர்களின் நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பு விடையத்தில் சிறிலங்கா அரசுக்கு சர்வதேச சமூகம் கொடுக்கும் அழுத்தம் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு என்ன என்பதனைத் தெளிவாக உணர்த்துகின்றது. இந்நிலையில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுவது போன்று சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்தோனேசியாவின் ஆச்சே போராளிகளுடன் ஓர் உடன்பாட்டிற்கு வருமாறு இந்தோனேசியாவின் அரசை சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்குக் கொடுக்கும் அழுத்தம்போன்று கொடுக்கவில்லை. ஆனால் விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஓர் உடன்பாட்டிற்குவருமாறு இலங்கை அரசுக்கு ஏன் இவ்வாறு அழுத்தம் கொடுக்க வேண்டும். ஜே.வி.பி யின் இக்கேள்வியிலிருந்து நாம் ஒன்றைத் தெளிவாக விளங்கிக்கொள்ளலாம். சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகள் சார்பாகவும் இலங்கை அரசு சார்பாகவும் கொண்டுள்ள நிலைப்பாடு என்ன என்பதனை. இந்நிலையில் நிறைவேற்று சனாதிபதி பதவியின் அந்திமதி காலத்தில் இருக்கும் சந்திரிகா தனது பதவியை மீண்டும் எப்படித் தக்க[illegible]த்துக்கொள்வது என்ற நோக[illegible]ல் செயல்படத் தொடங்கியுள்[illegible]ர்.

மாறா[illegible] கடந்த இரண்டரை தசாப்த காலங்களளாக நிலவி வரும் உள்நாட்டுப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமானத் தீர்வினைக்காண்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு இந் நாட்டு மக்களின் மனங்களில் என்றும் வாழப்போகின்றாரா? என்றால் இல்லை என்றே கூறவேண்டும்.

(20 ஆம் பக்கம் பார்க்க)




1.பத்து முன்னாள் அமைச்சர்களுக்கு எதிரான இலஞ்சப் புகார்களை அரசு வாபஸ்பெறத் தயார்.
"பத்து அமைச்சர்கள் பற்றுவரவு"

2. சமாதான முயற்சிகள் தொடர்பாக பிரச்சாரம் செய்ய சிறிலங்கா சுதந்திரக்கட்சி முடிவு
"சமாதானம் தொடர்பாக அல்ல"

3. சட்ட விரோ மின் பாவனையை இராணுவம் மேற்கொள்வதால் முப்பதுவீத வருமான இழப்பை மின்சாரசபை சந்திக்கிறது.
"மலைபோல ஜொத்துக்களே போச்சு மின்சாரத்துக்குக் கண்ணீர் விடுறியள்"

4. பொலநறுவைப் பகுதிக்கு அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.
"அப்ப பிரச்சினை கூட்டுபோகுதென்டு சொல்லுறியள்"

5. சீனப்பிரதமர் நூறு பரிவாரத்தினரும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.
"பாம்புக்குத்தலை மீனுக்குவால்"

6.சொல்ஹெய்மின் விஜயத்தில் திரும்ப மெதுவும் ஏற்படாது.
"நாய்வலை நிதித்தமுடியாது"

# எழுச்சி பூர்வமான நாள்

எதிர்வரும் முதலாம் நாள் தொழிலாளர் தினமாகிய மே நாள் உலகமெங்கும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட இருக்கின்றது. தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடியதை நினைவு கூர்ந்து உலகத் தொழிலாளர்கள் அனைவரும் அனுஷ்டிக்கும் நாளாக இது அமைகின்றது. இந்த நாளுக்கு நீண்ட வரலாறு இருக்கின்றது.

1806ஆம் ஆண்டு தொழிற்சங்க ரீதியாக ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு ரீதியான போராட்டம் வேலை நேரத்தைக் கட்டுப்படுத்தும் கோரிக்கையுடன் இடம்பெற்றது. 20 மணி நேரத்திக்கும் மேலாக வேலை வாங்கப்பட்ட தொழிலாளர்கள் தமது வேலை நேரத்தைப் 10 மணி நேரமாகக் குறைக்குமாறு கோரிக்கைப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டங்கள் உடனடியாக வெற்றியை ஈட்டிக்கொடுக்காவிட்டாலும் தொழிலாளர்கள் 20 மணி நேரத்துக்கு மேலாக வேலை வாங்கப்படுவது அம்பலமாகியது.

பின்னர் படிப்படியாகத் தொழிற்சங்கங்கள் பல்வேறு நாடுகளிலும் வளர்ச்சியடைந்து 1869 இல் பாரிஸில் நடைபெற்ற தொழிலாளர்கள் உரிமைபேணும் அமைப்பின் முதலாம் மாநாட்டில் மேமாதம் முதலாம் நாள் எட்டுமணி நேர வேலைக்கு அறை கூவல் விடுவிக்கும் தினமாகப் பிரகடனப்படுத்தப் பட்டது.

இந்தப் போராட்டம் பரந்துபட்டதாக உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்டபோது அதனை ஒடுக்க முதலாளித்துவ வர்க்கம் மேற்கொண்ட கொடூர நடவடிக்கைகளால் பெருமளவு இரத்தம் சிந்தப்பட்டு பல உயிர்கள் பறிக்கப்பட்டன.

பின்னர் 1889ஆம் ஆண்டு உலக தொழிலாளர் காங்கிரஸ் மே மாதம் முதலாம் நாள் உலகத்தொழிலாளர்கள் அனைவரும் எட்டு மணிநேர வேலைக்காக குரல் கொடுக்கும் நாளாக மே மாதம் முதலாம் நாளைத் தெரிவுசெய்தது. இப் பாரிஸ் பிரகடனம் பெரும் எதிர்ப்புக்களின் மத்தியில் ஐரோப்பியநாடுகளில் 1890ஆம் ஆண்டு தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்பட்டு அது உலக தொழிலாளர் தினமாக மாறியது.

இவ் உலக தொழிலாளர் தினம் உண்மையில் ஒடுக்கப்படும் மக்கள் வாழும் நாடுகளில் எழுச்சி தினமாக உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஆனால் பல நாடுகளில் இது வெறும் சம்பிரதாய பூர்வமான நிகழ்வாக அல்லது அரசியல் நிகழ்வாக மாறிவிட்டுள்ளது.

முன்னர் இலங்கையிலுள்ள தொழிற்சங்கங்கள் தமது பலத்தைக் காட்டும் நிகழ்வாக இந்த மே நாளை அனுஷ்டித்து வந்தனர். இலங்கை சுதந்திரம் பெற்ற 1948 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாறு மேதினம் அனுஷ்டிக்கப்பட்டு வந்த போதிலும் காலப்போக்கில் இது தொழிற்சங்கங்களின் பலத்தை வெளிக்காட்டுவதற்குப் பதிலாக அரசியல் கட்சிகளின் விழாவாக மாறியது.

ஆளும் கட்சிகள் தமது வளங்களை முற்று முழுதாகப் பயன்படுத்தி மக்களை மேதினப் பேரணிகளுக்குக் கொண்டுவந்தனர். பல இசை நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள், இந்தியச்சினிமாக் கலைஞர்களின் வருகை என்று இது வேறொரு பரிமாணத்திற்குச்சென்றது. அவர்கள் தமது சாதனைகளைச் சொல்லும் நிகழ்வாகமாற்றினர். அதேவேளை எதிர்க்கட்சிகளும் அதேபாணியையே கைக்கொண்ட அதேவேளை, தொழிலாளர் உரிமைக் கோசங்களைவிட ஆளும் கட்சியினருக்கு எதிரான எதிர்ப்புக் கோஷங்களே கூடுதலாக ஒலித்தன.

அதேவேளை தொழிற்சங்கங்கள்கூட தனித்து மேதின நிகழ்வுகளை நடத்தின. இவை பெரும்பாலும் தொழிலாளர் உரிமைகள் குறித்த அறைகூவல்களையே விடுத்தன. அதிலும் குறிப்பாக மலையகத் தொழிற்சங்கங்கள் மறுக்கப்பட்ட தமது உரிமைகளுக்காக குரல் எழுப்பவேண்டிய தேவை இருந்தது.



அங்கும் இ.தொ.கா.போன்றவை அரசியலில் ஈடுபட்டிருந்தமையால் அரசியல் கோஷங்களும் இடம் பெற்றன.

தமிழ் மக்களைப் பொறுத்த வரை அவர்கள் இந்த நிகழ்வை மறுக்கப்பட்ட தமது அரசியல் உரிமைகளை வெளிப்படுத்தும் நிகழ் வாகவே எப்பொழுதும் அமைத்துக் கொண்டனர். அதாவது மறுக்கப்பட்ட தமது அரசியல் உரிமைகளை வழங்க வலியுறுத்தியும் தம்மீது காலத்துக்குக்காலம் மேற்கொள்ளப்பட்ட இனவாத வன்முறைகள், அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள், தாங்கள் சந்தித்த அவலங்கள் என்பவற்றை வெளிப்படுத்தியும் வந்தனர். வருகின்றனர்.

எவ்வாறாயினும் இன்று சிறிலங்காவில் தொழிலாளர்களின் போராட்டங்களும் அரசியலிற்கு எதிரானதாக மாறிவருகின்றமையை அவதானிக்கமுடியும். கிடுகிடுவென உயரும் விலைவாசியால் ஏற்படும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க ஊதிய உயர்வு கோரும் போராட்டங்கள் ஒருபுறம், ஆட்சி பீடத்தைக் கைப்பற்றுவதற்காக ஊதிய உயர்வு குறித்த கவர்ச்சிகரமான அறிவிப்புக்களைத் தேர்தல் வாக்குறுதிகளாக வழங்கிவிட்டு அதனை நடைமுறைப்படுத்தமுடியாது திண்டாடுகையில் ஏற்படும் போராட்டங்கள் மறுபுறம். ஊதியம் வழங்கலில் சமச்சீரற்ற தன்மை போன்றவற்றுக்காக சுகாதாரத்துறையே தொழிற்சங்கப் போராட்டம் நடத்துகின்ற நிலை சிறிலங்காவில் காணப்படுகின்றது. சிறிலங்காவில் மட்டும் தான் சுகாதாரத்துறையினர் தொழிற்சங்கப்போராட்டம் நடத்துவதைக் காணலாம் என அண்மையில் அமைச்சர் ஒருவர் அங்கலாய்த்திருந்தார்.

இதனைவிட தனியார்மயமாக்கல் அல்லது மறுசீராக்கம் என அரச நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் சிறிலங்காவில் தொழிலாளர் போராட்டங்களுக்கு வித்திடுகின்றன. இதற்காக எரிபொருள் விநியோகம், மின்சார விநியோகம்போன்ற மிக அத்தியாவசியமான துறைகள் கூட தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு ஆயத்தமாயிருந்தன. இன்று சிறிலங்காவில் பலரும் வேலை வாய்ப்பை விரும்பும் துறையாக அரசதுறையே காணப்படினும் அந்த நிலையில் படிப்படியாக மாற்றம் ஏற்பட்டு வருவதனையும் காணலாம்.

தனியார் துறையினரிடம் பலதுறைகள் கையளிக்கப்படும் போது அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடமுடியாத நிலை உருவாக்கப்படுவதாக பல தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்துகின்றன.

அதேவேளை இன்று உலகளாவிய நிலையில் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் போக்கும் அதிகரித்துவருகின்றது. கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்வோரின் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது. இவர்களின் பிரச்சினைகள் வேறுபட்டவையாக உள்ளன. இவ்வாறு பல்வேறுபட்ட வகையினராக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பவர்களாக இன்று தொழிலாளர் உலகம் இருக்கின்றது. இவர்கள்அனைவரும் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் நாளாக மே நாள் அமைகின்றது.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# யாழ் குடாவில் மருத்துவமனைகள் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றன


தமிழர்கள் போர்க்காலங்களிலும் சரி சமாதானம் என்று சொல்லப்படுகின்ற காலங்களிலும் சரி திட்டமிட்டு இனவாத சக்திகளாலும் ஆளும் ஆட்சியாளர்களினாலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும். இந்த வகையில் யாழ் குடாநாட்டின் இரண்டாவது மருத்துவமனையாக விளங்கிய சாவகச்சேரி மருத்துவமனையும் அதன் கீழ் உள்ள கிராமிய மருத்துவமனைகளும் அன்று தொடக்கம் புறக்கணிக்கப்பட்டுவருகின்றது. கடந்தகாலப்போரின் விளைவால் முற்றாக சேதமாக்கப்பட்ட சாவகச்சேரி மாவட்ட மருந்துவமனை இது வரை மீளப்புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் இன்றும் இருந்து வருகின்றது.

கடந்த 2003 ஆம் ஆண்டு மருத்துவமனையை புனரமைப்பதற்கு தேவைப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இம் மருத்துவமனைக்கு ஏற்பட்ட சொத்தழிவுகள் மதிப்பீடு செய்யமுடியாதுவிட்டாலும் கட்டடங்களை புனரமைப்பதற்கு என 23 கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதற்கான நிதியினை உரிய காலத்தில் அரசு வழங்க முன்வராமையினால் தற்பொழுது பொருட்களின் விலை வாசி உயர்வுடன் ஒரு வருடம் கடந்த நிலையில் கடந்த 2004 இன் இறுதிப் பகுதியில் இதன் மதிப்பீடு 33 கோடிரூபாவாக உயர்வடைந்துள்ளது.

ஆனால் இது வரையில் இதற்கான நிதி ஒதுக்கீடு அரசினால் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை. ஓராண்டு காலத்தில் 10 கோடிரூபாவாக உயர்வடைந்துள்ள இழப்பீடு இவ்வாண்டு நடுப்பகுதியில் மேலும் 10 கோடிரூபாவிற்கு உயர்வடையக் கூடும் என சாவ கச்சேரி நகர புனரமைப்புக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

இவை ஒருபுறம் இருக்க இம் மருத்துவமனை வைத்தியர்கள் பற்றாக் குறை, தாதியர்கள் பற்றாக்குறை, சிற்றூழி யர்கள் பற்றாக்குறை, தளபாடவசதிகள் இன்மை போன்ற பல்வேறு பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றது. தற்பொழுது வெளிநோயாளர் பிரிவும் உள் நோயாளர்கள் பிரிவும் ஒன்றாகவே செயற்பட்டு வருகின்றன.

உள்நோயாளர் விடுதிகள் தற்காலிகமாக அமைக்கபட்டுள்ளமையால் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள், பருவ மழை காலங்களில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றதுடன் வேறு நோய்களுக்கும் உள்ளாகிச் செல்ல வேண்டிய நிலை காணப் படுகிறது. இது சாவகச்சேரி மருத்துவமனையின் ஒரு பகுதி மட்டுமே. இதைவிட இதன் கீழ் உள்ள கிராமிய மருத்துவமனைகளை எடுத்துக்கொண்டால் கைதடி மத்திய மருந்தகத்திற்கு கட்டடம் இன்மை, வைத்தியர் தங்குமிடமின்மை, தண்ணீர்த் தாங்கி திருத்தப்படாமை. மருத்துவர் இன்மை போன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றது.



இதே போன்று கைதடி ஆரம்ப சுகாதார நிலையம் ஆயுர் வேத மருத்துவமனை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சாவகச்சேரி மட்டுவில் ஆரம்ப சுகாதார நிலையம், கொடிகாமம் சுற்றயல் கூறு மருத்துவமனை, வரணி மத்திய மருந்தகம் என்பன அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுகின்றமையால் இப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் யாழ் மாவட்ட மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுகின்றநிலை காணப் படுகின்றது. இதனால் யாழ் பொது மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள நோயாளர்கள் அதிகரிப்பால் அங்கு மருத்துவர் முதல் சிற்றூழியர்கள் வரை மேலும் பற்றாக்குறை அதிகரிக் கின்றது.

இது தொடர்ந்தவண்ணமுள்ளது. இதனை குறைப்பதற்கு பிரதேச மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் புனரமைக் கப்பட்டு அங்கு மருத்துவர்கள் நியமிக்கப்படுவதன் மூலம் அந்தந்தப் பிரதேசங்களின் சுகாதார நடவடிக்கைகளை செவ்வனே செய்ய முடியும். அத்துடன் சாதாரண நோய்களுக்கான சிகிச்சைகளையும் மேற் கொள்ளமுடியும். அதனால் யாழ் பொது மருத்துவமனைக்கு வருகின்ற சாதாரண நோயாளர் களின் தொகை குறைவடைவதுடன் அதிக கஷ்டப்பிரதேச வறிய மக்களின் போக்குவரத்து மற்றும் சிரமங்களை குறைக்க முடியும். இதற்கான முழுப் பொறுப்பும் அரசு சார்ந்த அதிகாரிகளிடமே உள்ளது.

இது ஒருபுறம் இருக்க தீவக மக்களின் மருத்துவ நிலை மிக மிக மோசம். இரவு வேளைகளில் யாழ் குடாநாட்டில் இருந்து ஒரு அவசர நோயாளியை ஏதோ ஒரு வாகனம் மூலம் பொது மருத்துவமனைக்கு எடுத்து வரலாம். ஆனால் தீவகத்திலே வாழுகின்ற மக்கள் ஒரு நோயாளியை எடுத்துவரமுடியாது.

அதாவது அங்கு போக்குவரத்திற்கு படகுகளே பயன்படுத்தப்படுகின்றன. இதைவிட தீவகப்பகுதிகளான நயினாதீவு, நெடுந்தீவு, வேலணை, அனலைதீவு, புங்குடுதீவு போன்ற இடங்களில் உள்ள மருத்துவ மனைகள் எந்த அடிப்படைவசதிகளையும் கொண்டிருக்கவில்லை. அங்குள்ள ஒரு சாதாரண நோயாளியைக் கூட யாழ் குடாநாட்டிற்கு எடுத்து வர வேண்டியநிலை. ஆனால் போக்குவரத்துப் பிரச்சினை. அதாவது நெடுந்தீவை எடுத்துக் கொண்டால் ஒரு சாதாரண நோயாளியை நெடுந்தீவுப் பிரதேசத்தில் இருந்து ஏதோ ஒரு வாகனம் மூலம் நெடுந்தீவு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லலாம்.ஆனால் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமாயின் படகு தேவை. அது பெரிய பிரச்சினை. படகு மூலம், குறிகாட்டுவான் கொண்டு வந்தால் அங்கிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவர வேறு வாகனம் தயார்ப்படுத்த வேண்டும்.

ஒரு சாதாரண நோயாளி என்றாலும் சரி அல்லது அவசர நோயாளி என்றாலும் சரி எப்படியாவது காலை 6 மணிக்கு நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டு செல்ல பிற்பகல் 2 மணியாகிவிடும். இதற்குள் நோயாளி மேலும் நோய் வாய்ப்படலாம். அல்லது மரணமடையலாம். இவ்வாறு பல கஷ்டங்களை எமது தாயகப் பகுதி மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாறான பிரச்சினைகளுக்கு எப்பொழுது தீர்வு கிடைக்கும் என்பது கேள்விக்குறியான விடயமாகும். பின்தங்கிய பகுதி மக்களின் மருத்துவத் தேவைகளாவது பூர்த்திசெய்யப்படவேண்டும்.

**சு.பாஸ்கரன்**

# அதிகரித்துவரும் ரவுடிக்கும்பல்கள்


புத்திஜீவிகளையும் புனிதர்களையும் பெற்றெடுத்து ஈழத்துக்கு பெருமையும் புகழும் தேடிக்கொடுத்த தென்மராட்சிப் பிரதேசத்தில் இன்று காடைத் தனம் கொண்ட ரவுடிக்கும்பல் களுள் பெருமளவில் தோற்றம் பெற்று வருவது தென்மராட்சிப் பிரதேசத்தின் புனிதத்தன்மை யையும் அதன் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் சீர் குலைக்கும் ஓர் விடயமாகும்.

தினசரிப்பத்திரிகைகளின் பக்கங்களை ஒரு கணம் புரட்டிப் பார்த்தால் அதில் யாழ்ப்பாணத் தில் எங்கேயோ ஒரு மூலைக் குள்ளோ அல்லது நகரத்துக் குள்ளோ கொலை, கொள்ளை முதலானசெயல்கள் பற்றிய செய்தி இடம்பெற்றிருக்கும் என்று கூறினால் அது பொய் யாகுவதற்கான சந்தர்ப்பங்கள் மிகமிக அரிதாகவே காணப் படும். அப்படி வெளியாகும் செயல்கள் பற்றிய செய்திகள் எங்கு இடம்பெற்றுள்ளது என நோக்கும்போது பெரும்பான் மையாக அது தென்மராட்சிப் பிரதேச எல்லைக்குட்பட்டபகுதி தியிலேயே இடம்பெற்ற செய லாக அது வெளியாகியிருக் கும் என்ற ஐயம் மக்கள் மத்தி யில் ஊறி உறைந்து கொண்டு வருகின்றது. அவ்வள விற்கு தென்மராட்சிப் பிர தேசத்தில் இந்தச் செயல்கள் மிதமிஞ்சி கூத்தாடுகின்றன என்றே கூறவேண்டியுள்ளது.

இவ்வாறு மிதமிஞ்சித் தாண்டவக்கூத்தாடும் இந்தச் செயல்கள் தென்மராட்சியின் கிழக்குப்பகுதிக்குச் சொந்தமான கொடிகாமம், மிருசுவில், தவசி குளம், போக்கட்டி, கச்சாய், மந்துவில், வரணி, குடமியன், மீசாலை, புத்தூர்ச்சந்தி, வேம் பிராய், மீசாலைகிழக்கு போன்ற பகுதிகளிலேயே இந்தச் செயல்கள் மிதமிஞ்சி தாண்ட வக் கூத்தாடுகின்றன என்று கூறினால் அதனை எவராலும் மறுத்துரைக்க முடியாது.

மேலும் இந்த ரவுடித்தனக் கும்பல் கூட்டங்களில் இணைந் துள்ள இளைஞர்கள் பெண் ணியம் தொடர்பான சேட்டை களையும் புரிந்து வருகின் றார்கள். அதாவது யுவதி களுடன் தகாதவார்த்தைப் பிர யோகம் மற்றும் பாலியல் சேட்டைகள், கணவனை இழந்து தனித்து இருக்கும் பெண்களை வெருட்டுதல், வற்புறுத்துதல், யுவதிகளின் பின்னே கொடி போல பின்தொடருதல், தனி யார் கல்விநிலையங்கள், பாட சாலை வாசல்களில் யுவதி களை எதிர்பார்த்து காத்திருத் தல் போன்ற பல பிரச்சினை களிலும் இந்த இளைஞர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அதாவது இந்தப் பெண் ணியம் தொடர்பான சேட்டை களில் பத்திரிகைகளில் அம் பலம் ஆவதிலும் பார்க்க அம் பலமாகாதவையே அதிகமாகக் காணப்படுகின்றன. உண்மையில்



இந்த கும்பல்களோடு இணைவு உள்ள இளைஞர்களில் பெரும் பாலானவர்கள் சிறைக் கதவுகளையும், நீதிமன்றப் படி களையும் தொட்டவர்களாகவே விளங்குவது மிகவும் வேத னையாக இருப்பது ஒருபுறம் இருக்க அந்த இளைஞர்கள் மீண்டும் திருந்துவதற்கான சாத்தியங்கள் இல்லை என்றே சொல்லத்தோன்றுகிறது.

இந்த ரவுடிக்கூட்டங் களையும், கும்பல்களையும் தட்டிக்கேட்க வேண்டியது தட் டிக்கேட்கும் தரப்பினரது தலை யாய கடமைமட்டுமல்லாது கட் டாயமும் ஆகும். இந்த ரவுடிக் கும்பல்களையும் கூட்டங்களை யும் தட்டிக்கேட்காத பட்சத்தில் பாரிய பிரச்சினைகளுக்கு மக் கள் முகம் கொடுக்கவேண்டியுள் ளது.ஆனாலும் இந்த ரவுடிக்கும் பல் களிடமும் கூட்டங்களிடமும் கைக்குண்டுகள் முதலான ஆயுதங்கள் எவ்வாறு கிடைத் தன? யார்கொடுத்தது? போன்ற விசாரணைகளை அவ்வப்போது தடுத்து நிறுத்தும் பொலிசார் பூரணமாக விசாரணைகளை மேற்கொண்டு குற்ற வாளிக ளுக்குத் தகுந்ததண் டனை வழங்காததன் விளை வாகவே கடந்த மாதம் கொடி காமம் பிரதேசத்தில் (நகரில்) இடம் பெற்ற கோஷ்டி மோதலை உடனே கட்டுப்படுத்த முடியாத நிலைக்குத்தள்ளப்பட்டது.

மந்துவில் மற்றும் தவசி குளம் பகுதியில் இந்த ரவுடிக் கும்பல்கள் தலைமைப்பீடம் போன்ற ஒரு அமைப்பினையும் உருவாக்கியுள்ளன. அதாவது மக்கள் நடமாட்டம் அற்ற வீடு கள், பொது நிலையங்களில் இந்தக்கும்பல் கூட்டங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்தக் கும்பல் கூட்டங்களில் இருப் பவர்கள் தமது வீடுகளையே மறந்து வாழ்ந்து வருவது குறிப் பிடத்தக்கது. இந்த கும்பலில் இரவு வேளைகளில் 40 இற்கு மேற்பட்ட இளைஞர்கள் தங்கி வாழ்கின்றார்கள். இந்தத் தகவல்களை அறிந்த தமிழீழ விடுதலைப்புலிகள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு முறைகளை மேற்கொண்டும் இன்னும் முடிவுக்கு வரவில்லை.இந்த கும்பல்கள் தொடர்ந்து செயற் படுவது மக்கள் மத்தியில் வேதனையையும் பீதியையும் ஏற்படுத்துகின்றது.

ரவுடிக்கும்பல்கள் தோன்றியதற்குப் பல காரணி கள் செல்வாக்குச்செலுத்து கின்றன.

இந்த ரவுடிக்கும்பல்களி லும், கூட்டங்களிலும் பாடசா லைக் கல்வியைக் கற்ற வர்கள் மட்டுமல்லாது பல்க லைக் கழகத்தில் கற்பவர்கள் மற்றும் உயர் அரச ஊழியர்கள் போன்ற பல வகுப்பினரும் உள் ளடங்குவது மிகவும் வேத னையாகவும் வியப்பாகவும் உள் ளது.

அநேகமான இடங்களில் காணப்படும் ரவுடிக்கும்பல்களின் செயல்களும் அடாவடித்தனங் களும் வாள் முதலான சிறிய ஆயுதங்களை உபயோகித்தே தமது செயல்களை மேற் கொண்டு வருகின்றார்கள். ஆனால் தென்மராட்சிப் பிர தேசத்தில் படையெடுத்துக் கொண்டுவரும் இந்த ரவுடிக் கும்பல்கள் வாள் முதலான சிறிய ஆயுதங்களோடு கைக் குண்டுகள் (கிரனேட்), இடியன், சொட்கண் முதலான பல ஆயு தங்களைப் பயன்படுத்தி தமது அதிகாரப் போக்கையும், ரவுடித் தனத்தையும் காட்டிவருகின்ற னர்.

கடந்த வருடத்தின் (2004) நடுப்பகுதியில் மந்துவில் பிரதேசத்தில் இடம்பெற்ற ஒரு கோஸ்டி மோதலில் கைக் குண்டுகள், இடியன், சொட்கண் முதலான ஆயுதங்கள் பயன் படுத்தப்பட்டதன் விளைவாக அநியாயமாக இன்னும் எத் தனையோ இளைஞர்கள் இந்தக் கும்பல்களுடன் சேர்ந்து தமது வாழ்க்கையைத் தொலைப்பது மட்டுமல்லாது இந்தச் தேசத் துக்கும் அதன் பண்பாட்டுப் பெருமைகளுக்கும் இவர்களால் இழுக்கு ஏற்படப்போகின்றது என்பது உண்மை. எனவே அனைத்துத் தரப்பினரும் ஒன்று சேர்ந்து தென்மராட்சியில் களை கட்டி வளர்ந்து வரும் இந்தக் கும்பல்களை அடியோடு ஒழிக்க வேண்டும்

" விழிப்புடன் கடமை செய் நெருப்பையும் அணைக்கலாம்"

நன்றி

தொகுப்பு
**"கொடி கமல்"**

---



## விசுக்விசுக் விசாலாட்சி

உன்னான எப்பன் நில்லடா எடுத்ததுக்கெல்லாம் சட்டத்தில இடமி ருக்கோ சட்டத்தில இடமிருக்கோ எண்டு அரசாங்கம் அலம்பிறமாதிரி என்னடா அலம்பல். அ.... சட்டத்தில என்னத்துக்கு இடம் தேடுறியள் இல் லாட்டிக்கு ஒரு இடத்தைப் போடுறது தானே. 'ஹஹ... என்னடா 'அழுவாரு மழுவாரும் தன்கரைச்சல் திருவன் பெண்டிலுக்கு கட்டியழ ஆளில்லை யாம்...'

பின்னை என்னடா- சனம் தேசியக்கட்டமைப்பு மாறி பொதுக் கட்டமைப்பு எண்று வானலாவ போக் காட்டாமாட்டாம வாய் புசத்திக் கொண்டிருக்க, அக்கையும் தம்பியும் பதவிய நீடிக்க எங்கத்தையால சட்டம் எண்டு வரிஞ்சு கட்டிக்கொண்டு அலசிக்கொண்டு இருக்கினமாமடா.- பொடியா... உந்த அரசியல் அமைப் பின்ர மூன்றாவது சரத்தில அடிப்படை மனித உரிமையள் எண்ட ஒரு பகுதி இருக்கடா. அது ஒண்டு காணுமேடா. அம்மா இன்னும் கொஞ்சக்காலம் காலாட்டிக்கொண்டு ராச்சியம் நடத்த.. பின்ன என்னடா முன்ன உவர் ரணிலார் பதவியில இருந்த நேரம் மூன்று அமைச்சுப்பதவியலை பறிச்சுப்போட்டா பறிச்சுப்போட்டா என்று பதறிஅடிச்சியளே.... அ.... அது பறிப்பில்லையடா குடுத்தத வாங்கி னதுதான். அரசியல் அமைப்பில பாதுகாப்பு அமைச்சர் சனாதிபதி யட்டத்தான் இருக்கவேணும் என்று வலு தெளிவாத்தானே ஜேயாரை யாவுக்கு ஜீயெல் பீரிஸ் எழுதிக் குடுத்தவர்... ஆங்... பிடிச்சிட்டாய் விடாத. பீரிசையாவே தான்.


பின்ன அந்தாளுக்கும் விசரே- கொளுந்து விட்டு எரியிற இனப்பிரச்சினையை தீர்க்கிறதெண்டா உப்பிடி ஒவ்வொருவரா சம்மதம் கேட்டுக்கொண்டு நிண்டா ஏலாது. சர்வ அதிகாரங்களும் ஒரு தலைவரிட்டை இருந்தாத்தான் முடியும் எண்டு எல்லா வகையாலும் திட்டம் போட்டுத்தானே... அம்மேரிக் காவில கொஞ்சம், பிரித்தானியாவில கொஞ்சம், பிரான்சில கொஞ்சம் எண்டு பல நாடுகளின்ர யாப்பை கலந்து குழைச்சு தனக்கொரு யாப்பைச் செய்தவர் ஜேயார். இப்ப தான் வெட்டிய குழி தன்கெண்டு விழுந்து கிடக்கினம். அதவிடு- நான் சொல்ல வந்த கதை விட்டிட்டு எங்கோயோ போட்டன்.

என்ன சொன்னன். அடிப் படை மனித உரிமை யெண்டோ... அங்கதான்ரா மனித உரிமை யளப்பற்றி பத்தி பத்தியா எழுதுப் படுது. கேட்கப்பார்க்க பூரிக்கிற மாதிரி நல்ல நல்ல விசயம் எல்லாம் கிடக்கு. அவ்வளவு உரிமையும் தமிழருக்கு கிடைச்சிருந்தா.... என்ரா சண்டையை என்ரா துவக்க. அவ்வள வும் நடந்தாற்கூட இல்லை, அதில ஒரு கொஞ்சம் நஞ்சமிருந்தாக்கூட காணுமே சும்மாவேயடா. சொல் லுறன். மெய்தான்ரா... எல்லாத்துக்கும் கடைசியா ஒரு பத்தி அதுகின்ர ஆழ நீளம் பற்றி கதைக்க இன்னும் ஒருவராலும் முடியேல்லத்தம்பி முடியேல்ல.... அப்பிடிஎன்னவோ.... அதுதான் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டமடா. பொதுவா எல்லா நாட்டி லயும் இருக்கடா. வெளியால இதுக்கு இதுதான் பெயர். உள்ளால தடா, பொடா,பயங்கரவாதத்தடை அது இதெண்டு காலத்துக்கும் அவையட கவனத்திற்கும் தக்க மாரிப்பெயர். பொதுமக்கள அவையட அடிப்படை உரிமைகள் அவளத்தையும் பறிச்சுப்போட்டு அவசர கால நிலை எண்டு சனாதிபதி சொல்லிப் போட் டால்... அவசர காலம் தான். பின்ன அமைச்சுப்பதவியள அவா பறிச்ச.... ச்சுச்சுச்சு பறிக்கேல்ல திருப்பி வாங்கிறதுக்கு ஒரு அவசரகாலம் கொண்டு வரேல்லையே. அ... அதேதான். என்ன... இடைக்கால வரைவை எடுத்துப்பார்த்தா பிரச்சினை இடைக்கால வரைபு வந்ததே அவசர கால நிலையெண்டா.... பொதுக்க ட்டமைப்பு எண்டு ஒண்டு வந்தா பொடியா நீ நினைக்கிறியே ஒண்டும் நடவாதெண்டு. இருக்கடா தம்பி இருக்குது பார். இப்பவே ஜேவிப்பியார கிண்டிவிட்டாச்சு. இவை பெரும்பான் மையைக் கிண்டமாட்டினம் எண்டது என்ன கதையோ படமோ. பிறகென் னடா பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தில அம்மா போய் தஞ்ச மடைய தேர்தல தள்ளிப்போடவும் தாராள அனுமதி கிடைச்சுப்போகும்.

இப்பிடித்தாண்டா அரிசியில பயறு சக்கரை கலந்தாத்தான் பொங்கல் உந்த பொதுமக்கள் பாது காப்புச்சட்டத்தை வைச்சுத்தாண்டா பொடியா பிரிட்டிஷ் அரசு தென்னா பிரிக்கா முதல் அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை என்று ஏராளமான மூன்றாம் உலக நாடுகளுக்க சுதந் திரம் கேட்டவைய கொன்றொழிச்சது. இப்ப இதேசட்டத்தைத்தான் இலங்கை, இந்தியா,பாகிஸ்தான் எண்டு எல்லாரும் வைச்சிருக்கினம். கச்சியப்பர் உதை வடிவாச் சொல்லு வாரடா குச்சில கிடந்த நெருப்ப மின்னிமின்னி பூச்சியெண்டு குஞ்சு களுக்கு வெளிச்சத்துக்கு கொண்டே வைச்சுதாம் தூக்கணாம் குருவி- கூடு பத்தினாப் பிறகு தான் அதுக்கு தன்ர பிழை தெரிஞ்சுதாம்...... ம் காலம் கடந்த ஞானம். இலங்கை அரசுக்கும் இதுபோல ஞானம் கட்டுநாயக்காவில வந்ததுதான். ஆனால் கதிரையாசை கண்ணை மறைக்கிது.

# போதாமையை வெளிப்படுத்திய ஆசிய - ஆபிரிக்க மாநாடு

ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் இந்தோனேசியாவின் தலைநகரான ஜகாட்டாவில் கூடிய மாநாடு கடந்த வார சர்வதேச அரசியலை அதிகம் பிரபலித்தது. சனநாயகம், பொருளாதாரம், உலக மயப்படுத்தல் என்பதெல்லாம் நிகழ்வின் பேச்சுக்களில் இடம்பெற்றபோதும் ஆசிய-ஆபிரிக்க தலைவர்களிடம் ஒற்றுமைக்கு பதிலாக. வேறுபாடே அதிகம் காணப்பட்டது. அணிசேராமையின் மீள்வாசிப்பாக மாநாடு அமைந்திருந்தாலும் அந்தளவு உறவுநிலை ஆசிய-ஆபிரிக்க தலைவர்களிடம் நிலவவில்லை. ஆசியத்தலைவர்களின் வியூகங்களை நோக்குவோம்.



### இலங்கைப்பிரதமர்

இலங்கைப்பிரதமர் அரசபிரதிநிதியாக கலந்து கொண்டார். உலகமயப்படுத்தலைப் பற்றிய பொருளாதாரக் கண்ணோட்டத்தில் கருத்து முன்வைத்த பிரதமர் அதனை விமர்சனம் செய்யாது, எதிர்க்காது உலக மயவாக்கல் உலகத்தில் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது பற்றியும் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டிவளர்ப்பது பற்றியும் கருத்துக் கூறினார். எல்லாவற்றையும்விட அவர் முதன்மைப்படுத்திய அம்சம் ஐ.நா. சபையில் ஆசியாவின் பிரதிநிதித்துவம் பற்றியதாகவே அமைந்திருந்தது.

ஐ.நா வின் பொதுச்செயலாளருக்கான பதவி வெற்றிடமாவதனைக் கருத்தில் கொண்ட பிரதமர் அதற்கான பிரதிநிதியை ஆசியாவிலிருந்தே தெரிவுசெய்யப்படவேண்டும் என்றார். உண்மையில் அவர் ஆசியா என்று குறிப்பிட்டது இலங்கையிலிருந்து ஒருவரை தெரிவுசெய்வதையே நினைவில் வைத்துக்கொண்டே உரையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடக் கூடியதாகும். கடந்த காலத்தில் ஆபிரிக்க நாட்டுக்காரர்களே அப்பதவிக்குரியவர்களாக விளங்கியதனால் தற்போதாவது ஆசியாவுக்கு வழங்கப்பட வேண்டும் எனக்கோருவது பொருத்தமானது. ஆனால், இலங்கைக்கென பிரதமர் கோருவது எந்தவிதத்திலும் நியாயமானதாக தென்படவில்லை. ஏனெனில், ஆசியாவுக்குள் பல வேட்பாளர்களை முன்னிறுத்தி போட்டி போடுவதைவிட ஒருவரை எல்லோரும் இனங்கண்டு தெரிவுசெய்வதே ஆசிய நாட்டவருக்கு அழகாக அமையும்.

ஆனால், இலங்கையரோ சமாதான செயலகத்தில் பணியாற்றும் நந்தன ஜயந்த தனபாலாவை ஒரு காலப்பகுதியிலும் பின்னர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் அப்பதவிக்கு நிறுத்தப்போவதாகக் கூறி வருகின்றனர். இவர்களின் நடைத்தைகள், அணுகுமுறைகள் பின்பற்றும் இனவாத உணர்வுகள் எப்படி அப்பதவிக்குப் பொருத்தமான வேட்பாளராக உள்ளனரென கருதமுடியும். ஆனால், இதில் சனாதிபதியால் பிரதமருக்கு அதிக நெருக்கடி உள்ளதென்பதும் அதனால், பிரதமர் சனாதிபதியை இத்தகைய பதவிகளுக்கு அமர்த்திவிட்டால் அடுத்த சனாதிபதி வேட்பாளராகவும், வெற்றியாளராகவும் மாறலாமென கருதி செயற்பட்டிருக்கலாம். ஏனெனில், சனாதிபதி குமாரதுங்கவுக்கு அதிகாரம் செலுத்தும் கதிரை மீது அதிக அவாக்கொண்டவராக உள்ளார்.



### ஜப்பானிய - சீனத்தலைவர்கள்

இரு நாடுகளுக்கும் இடையில் பெரும் முறுகல் அண்மைக்காலங்களில் நிகழ்ந்து வருகின்றது. அத்தகைய நிகழ்வுகள் மீண்டுமொரு போரைத்தொடக்கிவிடுமோ என்ற சந்தேகத்தைக்கூட கிளப்புமளவுக்கு நிலைமைகள் காணப்படுகின்றன. இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜப்பானியர் நிகழ்த்திய கொடுமைகளுக்கு பதில்சொல்லவேண்டும் என்பதுடன் சீனாவில் இயங்கும் ஜப்பானிய சார்பு நிறுவனங்கள் மீதும் அவர்களின் பொருட்கள் மீதும் சீன மக்கள் நிகழ்த்தும் பயங்கரமான தாக்குதல்கள் எல்லை கடந்து செல்கின்றன. சீனாவில் இப்படியொரு வன்முறை நிகழ்கிறதா என்பதை சந்தேகத்துடன் பார்க்கவைத்துள்ளது.

**ஐங்கரன்**

இத்தகைய நெருக்கடி மிக்க சூழலுடன் ஜகாட்டாவில் சந்தித்த இருநாட்டுத் தலைவர்களும் உச்சி மாநாட்டை அதற்காகப் பயன்படுத்தாத நிலை காணப்பட்டதுடன், அவர்களின் இலக்கும் ஐ.நா.வின் மறுசீரமைப்புக்கான ஆயத்தமாகவே அமைந்திருந்தது. ஐ.நா. சபையில் நிரந்தர அங்கத்துவத்தை விரும்பும் ஜப்பான் சீனாவுடன் மென்மையான போக்கை கடைப்பிடிக்க விரும்புகிறது. அதற்கான ஆதரவையும்,எதிர்பார்க்கையையும் கொண்டிருந்த ஜப்பான் சீனாவிடம் உலக யுத்தத்தின் விளைவுகளுக்காக பல தடவை மன்னிப்புக் கோரியிருந்தது நினைவு கோரத்தக்கது. ஆனால் தற்போதைய சூழலில் சீனா ஜப்பானை ஆதரிக்காத நிலையே காணப்படுகின்றது என்பதும் ஆசிய- ஆபிரிக்க மாநாட்டினால் அதற்கு தீர்வு காணப்படவில்லை என்பதுவுமே இம்மாநாட்டின் மீதமாகும்.

சீனாவை பொறுத்தவரை ஜப்பானுக்கு வழங்கும் வீட்டோ அதிகாரத்தை தனது எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாக கருதுவதோடு, ஜப்பானை ஒரு ஆசிய வட்டகை அனுதாப நாடாகவோ ஆசிய நாடாகவோ சீனா பார்க்கவில்லை. சீனாவின் இப்பிராந்திய அரசியலை முறியடிக்கும் உபாயத்துடன் அமெரிக்கா சார்ந்த மேற்குலகம் ஜப்பானை முதன்மைப்படுத்த முயலுகின்றது. கிழக்காசியாவிலும் தென்கிழக்காசியாவிலும் எழுந்துள்ள சீனாவின் பலத்தை தோற்கடிப்பதே மேற்குலகத்தின் நோக்காகும். இத்தகைய மேற்கின் உத்திக்கு ஜப்பானின் வீட்டோ அதிகாரம் வாய்ப்பளிப்பதுடன் ஜப்பான் சீனப்போட்டியாக மாற்றியமைத்து முரண்பாட்டை ஆசியாவுக்குள் நகர்த்த அமெரிக்கா விரும்புகிறது. அதனை ஆசிய- ஆபிரிக்க மாநாட்டில் பரீட்சித்துப் பார்த்ததாகவே தெரிகின்றது.



### கொபி அனான்

கொபி அனானின் கூரை ஆசிய- ஆபிரிக்க தலைவர்களை ஐ.நாவின் மறுசீரமைப்புக்கு தயாராக்குவதாக அமைந்தது. ஆசிய- ஆபிரிக்க தலைவர்கள் மறுசீரமைப்புக்கு தயாராகவேண்டும் என்பதுடன் அடுத்த மாநாட்டில் அதற்கான கோரிக்கையை முன் வைக்க வேண்டுமெனவும் கூறினார். ஆசிய- ஆபிரிக்க நாடுகளை நிரந்தர அங்கத்துவ நாடுகளாக மாற்றுவதுடன் புதியநாடுகளை ஐ.நாவுடன் இணைத்து தனித்துவமான சபையாக மாற்ற வேண்டுமெனவும் அவரது உரை அமைந்தது. ஐ.நாவை புதிய யுகத்துக்கு ஏற்பவும் 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்பவும் மாற்ற வேண்டுமென கோரியிருந்தார்.

கொபி அனானின் உரையில் அதிக நம்பிக்கை ஊட்டப்பட்டது போன்று காணப்பட்டதுடன் அவரது பேச்சில் ஆசிய- ஆபிரிக்க தலைவர்களை தயார் செய்வது போன்று அமைந்தது. அதாவது ஜேர்மனிக்கும், ஜப்பானுக்கும் நிரந்த உறுப்புரிமையை சாத்தியப்படுத்தி ஐரோப்பாவுக்குள் போட்டியையும், ஆசியாவுக்குள் போட்டியையும் நிரந்தரமாக உருவாக்குவதே அமெரிக்காவின் விருப்பமும் உபாயமுமாகும். அதனை வெளிப்படுத்தும் பாணியிலேயே கொபி அனானின் உரையும் போக்கும் அமைந்திருந்தது. ஆசியர்களை தூண்டிவிட்டு ஜப்பானை உறுப்புரிமைக்கு நகர்த்துவதும், இந்தியாவின் எதிர்பார்க்கையை சீரழிப்பதும் மறுசீரமைப்பின் நோக்கமாகவுள்ளது. இதனை சீனா தகர்க்கும் நோக்குடனேயே செயற்படுகின்றது. ஜப்பான் முதலாவது வர்த்தகக் கூட்டாளியாக சீனாவுக்கு இருந்தாலும் இந்திய வீட்டோவை பெறுவதால் ஏற்படும் ஆபத்தைவிட ஜப்பானுக்கு ஏற்படும் ஆபத்து அதிகமாகவே சீனா கருதுகிறது. இதனால் ஐ.நாவின் மறுசீரமைப்பு என்பது சவால் மிக்கதாகவும் அதிகமான நெருக்கடியைக் கொண்டதாகவும் அமையும்.

ஆரம்பகாலத்தில் நிரந்தர உறுப்புரிமைக்கு மக்கள் தொகை ஆட்சிமுறை பொருளாதாரப்பலம் நிலப்பரப்பின் அளவு என்பன முதன்மைப்படுத்தப்பட்டாலும் தற்போது சனநாயகம், மனிதஉரிமை போன்ற குறி காட்டிகளையும் இணைத்துள்ளது. அமெரிக்காவைப் பொறுத்தவரை ஜப்பான் ஒருமேற்கு நாடு பொருளாதாரத்திலும் அரசியலிலும் மேற்கு சார்பு கலாசாரத்தையும் கொண்டிருப்பதனால் ஜப்பானுக்கு விட்டோ கொடுப்பது மேற்குக்கு கொடுப்பதற்கு சமமானதாகும். அதனால் ஜப்பானுக்கு வழங்குவதன் மூலம் ஆசியப் போட்டியையும் மேற்கின் பலத்தையும் உறுதிப்படுத்திக்கொள்ளலாம். அதனால் ஆசியாவுக்குள் ஜப்பானை தேர்ந்தெடுப்பதில் குறியாக மேற்குலகம் காணப்படுகின்றது. அவ்வாறே பிரான்ஸுக்கு சமவலுவாக ஜேர்மனியை முன்நிறுத்துவது ஐரோப்பாவுக்குள் போட்டியை உருவாக்கி ஐரோப்பிய ஒன்றிணைப்பினை தகர்ப்பது அமெரிக்காவின் நோக்கமாகும். இதனை பிரதிபலிபதாகவே ஐ.நாவின் மறுசீரமைப்பு அமையவுள்ளது. இதனை முழுமையாகக் குழப்பும் பல ஆசிய நாடுகளிடமே உண்டு. அதிலும் சீனாவிடமே அதிகபலமுண்டு என்பது தெளிவாகப் புலப்படும் அம்சமாகும். வழமை போல் பொருளாதார எச்சரிக்கைகளுக்காக



அடிபணியும் சீனா இதிலும் அவ்வாறு நடந்து கொள்ளுமாயின் ஆபத்தான பாதையை ஆசியா தெரிந்தெடுத்ததாக அமையும். இந்தியாவின் கனவும் நொருங்கிவிடும்.

எனவே ஆசிய- ஆபிரிக்க அரசுகளின் மாநாடு போதிய பலத்தையோ ஒற்றுமையையோ வெளிப்படுத்தாது மட்டுமன்றி, ஆபிரிக்கத் தலைவர்களால் உலகமயப்படுத்தலுக்கு எதிராக முன்வைத்த கோஷங்களை நிராகரித்ததுடன் ஆபிரிக்க- ஆசிய ஒற்றுமையை பிரதிபலிக்காது ஐ.நா மறுசீரமைப்புக்குள் மூழ்கிப் போனதாகவே அமைந்திருந்தது. இதனால் ஏற்படக்கூடிய மாறுதல் எதுவும் நிரந்தரமான சாதக நிலையை ஏற்படுத்துவதாக அமையவில்லை.

# ஆட்சி மாறியதன் பின்னணியில் பேசப்படாத சில தகவல்கள்

சு.ஞாலவன்

பதியப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றும் காலநகர்வினில் வெறுமனே, குறித்த ஒரு நாளுக்குரிய சம்பவமாக மட்டும் புரிந்துகொள்ளப்படும் வருந்தத்தக்க வழக்கம் பரவலாகவே உள்ளது. '1903 ஆம் ஆண்டு டிசம்பர் 17 இல் றைட் சகோதரர்கள் விமானத்தைக் கண்டு பிடித்தனர்', என்ற ஒற்றைத்தகவல் ஆனது, மனிதனால் பறக்கமுடியுமென்று உறுதியாக நம்பிய முதல் மனிதனிலிருந்து, 16ஆம் நூற்றாண்டில் பறக்கும் இயந்திரம் ஒன்றிற்கான ஆரம்பகால வரைவுகளைத் தயார்செய்த இத்தாலிய விஞ்ஞானி லியர்னாடோ டா வின்சி தொட்டு, றைட் சகோதரர்கள் முயற்சியில் இறங்குவதற்கான ஆரம்பத்தளத்தை கிளைடர் விமானத்துறையில் ஏற்படுத்திக்கொடுத்த யேர்மனியரான லிலெந்தால்வரை, அனைவரினது முயற்சிகளையும் வெறுமனே ஒற்றைத்தரவோடு ஓரங்கட்டவில்லையா?

சரி மேற்கண்டது அறிவியல் கண்டுபிடிப்பு சம்பந்தப்பட்ட பொதுவானதொருவிடயம். நம் நாட்டுடன் தொடர்புடைய அரசியல் நிகழ்வொன்றைக் கொஞ்சம் பார்ப்போமே! 'போர்த்துக்கேயரின் கையில் கடைசியாக எஞ்சியிருந்த யாழ்ப்பாணத்தையும் டச்சுக்காரர்கள் (நெதர்லாந்து, =ஒல்லாந்து=ஹொலண்ட் படைகள்) 1658 இல் கைப்பற்றியதிலிருந்து, தொடர்ச்சியாக 138 ஆண்டுகள் இலங்கையை (கண்டி ராச்சியம் நீங்கலாக) அவர்களே ஆண்டு வந்தனர். 1796 இல் அவர்களை பிரித்தானியர் வெற்றிகொண்டு தீவினை தமது ஆட்சிக்குக்கீழ் கொண்டு வந்தனர்'. சரி! நெதர்லாந்திடம் இருந்து பிரித்தானியாவிற்கு இலங்கை கைமாறியது 1796 ஆம் ஆண்டு சடுதியாக நடந்ததொரு ஒற்றை நிகழ்வா ? அல்லது.....?

அந்த 'ஒற்றை' நிகழ்வினைச் சாத்தியமாக்குவதற்குப் பின்னணியாக அமைந்த வரலாற்றுச் சம்பவங்களுடன், Hugh Cleghorn என்பவர் பற்றியும் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம். யார் இந்த கிளேக்ஹோரண் என்ற கேள்வி உங்கள் மனதில் எழக்கூடும். கிளேக்ஹோரண் ஸ்கொட்லாந்தில் வரலாற்றுப்பேராசிரியராகப் பணிபுரிந்து வந்தவர் அது மட்டுமல்ல தனது கற்பித்தல் பணியில் காட்டாத அளவு அக்கறையுடன், பிரித்தானிய அரசுக்கான உளவுத்துறை முகவராக மிகத்தீவிரமாகச் செயற்பட்டும் வந்தவர். இவை எல்லாவற்றையும் தாண்டி அவரே பிரித்தானியாவால் இலங்கைக்கான காலனித்துவ அரசின் முதலாவது தலைமைச்செயலர் ஆக நியமிக்கப்பட்டவரும் கூட! பெறுமதிமிக்கதொரு உளவாளி நிர்வாகத் துறையில். அமர்த்தப்பட்டதன் பின்னணியையும், பிரித்தானியாவால் இலங்கை கையகப்படுத்தப்பட்ட விதத்தையும் இனிப்பார்ப்போம் !



> தரையாலும் கடலாலுமென மாறி மாறி நீண்டதொரு பயணத்தை மேற்கொண்ட கிளேக்ஷோண் பல இன்னல்களுக்கு மத்தியில் இராமேஸ்வரத்தை அடைந்து பருத்தித் துறைக்குச் சென்றதைத் தனது குறிப்புகளில் நினைவுகூரத்தவறவில்லை. அதிலும் சிறியதொரு குழுவுடன் பயணத்தை மேற்கொண்டிருந்த காரணத்தினால் இடைவழியில் கொள்ளைக் காரர்களினால் அவர்களது சொத்துக்கள் பலதும் அபகரிக்கப்பட்ட நிலையிலேயே இராமேஸ்வரத்தை அடைந்திருந்தார்கள். அவர்கள் இராமேஸ்வரப்பகுதியை ஆண்ட மன்னனால் அமோகமான விருந்துபசாரங்களினால் கௌரவிக்கப்பட்டே பருத்தித் துறைக்கு அனுப்பப்பட்டிருந்தார்கள்.

மன்னராட்சி முறையை ஒழித்து சகலருக்குமான குடியரசை உருவாக்கிவிடவேண்டுமென்ற எழுச்சி பிரான்சில் சூடு பிடித்திருந்த காலம். 1789 இல் கைகூட இருந்த பிரெஞ்சுப்புரட்சிக்கான சகல ஆரம்ப கட்டங்களும் அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருந்தவேளையிலே 1793 இல் நெதர்லாந்து பிரான்சிடம் தோல்வி காணவேண்டி நேர்ந்தது. தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக நெதர்லாந்து மன்னர் முதலாவது வில்லியம் Frederik (1772-1843) பிரித்தானியா சென்று தஞ்சம் கோரினார். போரில் தோல்வியடைந்த நாட்டுச்சொத்துக்கள் தோற்கடித்த நாட்டிற்கே உரித்தானதென்ற அன்றைய (இன்றையதும் கூட !) நடைமுறைக்கேற்ப, எங்கே ஒல்லாந்து நாட்டின் காலனித்துவ நாடுகளாக இருந்தவையும் பிரான்சினால் உரிமை கொண்டாடப்பட்டுவிடுமே என்ற சஞ்சலத்தில், பிரித்தானியாவின் அந்நாள் பிரதம மந்திரியாகிய Pitt William (1759-1806) ஏற்கனவே தான் கணித்து வைத்திருந்த நரித்தந்திரத்தை நடைமுறைப்படுத்தினார். பிரான்சிற்கும், பிரித்தானியாவிற்கும் என்றுமே நல்ல உறவு இருந்ததில்லை. நாடு பிடிக்கும் போட்டியும், அதனோடு பின்னிப்பிணைந்த கடல்வழி வணிகமும் தான் அவைக்கு பிழைப்பாக வேறு இருந்து வந்தன. இப்படியான கட்டத்தில்தான் வடஅமெரிக்காவிலும் பிரித்தானியாவின் மேலாதிக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு, சுதந்திரம் பெற்றுவிடவேண்டுமென்ற 13 காலனித்துவ மாநிலங்களின் புரட்சிகாரணமாக போர் வெடித்திருந்தது. பதின்மூன்று வருட காலமாக (1775-1783) பிரித்தானியாவிற்கு எதிராக நிகழ்ந்த இந்தப்போரின் முடிவில் சுதந்திரமான ஐக்கிய அமெரிக்கா (13 மாநிலங்களின் கூட்டு-Union of 13 States) உருவானது. இவ்வாறு அமெரிக்கப் புரட்சி நடந்த காலத்திலே அதற்குப் பண உதவி செய்தது மட்டுமன்றி, ஏக காலத்தில் பிரித்தானியாவுக்கு எதிராக போரை வேறு ஸ்பெயினும், பிரான்சும் பிரகடனப்படுத்தியிருந்தன. ஆக பிரான்ஸ், ஸ்பெயி[illegible]ர்மனி என்று பலநாடுகளுடன் [illegible]ாத பகைகொண்டு போரில் [illegible]பட்டுக்கொண்டிருந்த பிரித்தானியாவுக்கு, பெருமுயற்சியின் பின்னும் கைகூடாமல் ஏற்பட்ட அமெரிக்காவின் இழப்பை (முக்கியமாக வருமான இழப்பை) எவ்வாறாவது சரிக்கட்டி விடவேண்டிய அவசியம் இருந்தது. இந்த நிலைமையைக் கையாளுவதில் பிரதம மந்திரி பிற் மிகத்திறமையாகச் செயற்பட்டிருந்தார் என்று பின்னாளில் வரலாற்றாசிரியர்களால் பாராட்டப்பட்டிருந்தார். ஆமாம், அப்படி பிற் என்னதான் செய்திருந்தார் ?

நெதர்லாந்து அரசர் முதலாவது வில்லியம் பிரித்தானியாவில் தஞ்சம் கோரியபோது, அதற்குச் சொந்தமாயிருந்த காலனித்துவ நாடுகளுக்குள் ஆங்கிலப் போர்க் கப்பல்களை உள்நுழைய அனுமதிக்குமாறு ஆணையிடும் அறிவித்தல்களை வெளியிடுமாறு அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார். பிரெஞ்சுப்படைகள் அந்நாடுகளை கைப்பற்றுவதைத் தடுக்கும்வகையில், ஆங்கிலேயர் மேற்குறித்த வசதிகளை அடைக்கலத்திற்குக் கைம்மாறாகப் பிடுங்கிக் கொண்டனர். இதைத்தொடர்ந்து 1795ஆம் ஆண்டு ஓகஸ்ட் 1ஆம் திகதி கேணல் ஸ்ருவாட்டின் தலைமையில் 5 பிரித்தானியப் போர்க் கப்பல்கள் திருகோணமலையை வந்தடைந்தன. இங்கிருந்த சில டச்சு அதிகாரிகள் ஆங்கிலேயரிடம் ஆட்சியைக் கைமாற்ற மறுத்தபோதும், உரசிக்கொண்ட ஆயுதங்களின் உஷ்ணத்திலே எண்ணிச்சென்ற காரியம் கைகூடியது. அமெரிக்காவை இழந்ததை ஈடுசெய்யும் முகமாக இலங்கையையும், இந்தோனேசியாவையும் கையகப்படுத்திவிடுவோமென்றிருந்த ஆங்கிலேய அரசுக்கு இந்தோனேசியா கிடைக்காவிட்டாலும், இலங்கை கிடைத்தது மிகவும் திருப்தி அளித்தது. அந்நாள் பிரதம மந்திரி பிற் திருகோணமலை பற்றி என்ன கூறினாரென்று பாருங்கள் : ".. to us the most valuable colonial possession on the globe, as giving to our Indian Empire a security which it had not enjoyed from its estabilishment.... Trincomalee, the finest and most advantageous Bay in the whole of India, . . the equal of which is hardly known, in which a whole fleet may safely ride and remain in tranquility (இந்தியத் துணைக்கண்டத்திலே முழு கப்பற்றொகுதியுமே பாதுகாப்பாக வந்து செல்லக்கூடிய அமைதியான குடாக்கடலைக்கொண்ட திருகோணமலைக்கு ஈடாக, வேறொரு துறைமுகத்தையும் குறிப்பிட இயலாது. நம் இந்தியப்பேரரசு உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே அது அனுபவித்திராத அளவிற்கு பாதுகாப்பை வழங்க வல்லதான இத் துறைமுகம், உலகம் பூராவும் உள்ள காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களுக்கிடையே மிகவும் பெறுமதிமிக்கது ) ". இனி இந்த ஆட்சி மாற்றத்திலே உளவுத்துறையைச் சேர்ந்த பேராசிரியர் கிளேக்ஹோரண் ஆற்றிய பங்கு பற்றிப் பார்ப்போம்.

நெதர்லாந்து மன்னர் பிரித்தானியாவிலே தஞ்சம் கோருவதற்கு முன்பாகவே அதன் காலனித்துவ ஆட்சிக்குக்கீழிருந்த நாடுகளைக் கையகப்படுத்துவதற்கான காய் நகர்த்தல்களில் பிரித்தானியர் நீண்ட காலமாகவே ஈடுபட்டிருந்தனர். இதற்காக அந்நாட்டின் அரசியல் வல்லுநர்கள், உளவு முகவர்கள் என்று பலரும் ராஜதந்திர மட்டங்களில் தத்தம் வாய்ப்பிற்காக முயன்றுகொண்டிருந்தனர். இவர்களில் ஒருவர்தான் பேராசிரியர் கிளேக்ஹோரணும் ! கற்பித்தல் பணியைவிட தனது உளவு முகவர் என்ற நிலையை அதிகம் நேசித்த அவர் சுவிஸ் நாட்டின், பிரான்ஸை அண்மித்த நியூசற்றில் என்னும் நகரில் அப்போது தங்கியிருந்தார். வெவ்வேறு நாடுகளிலுமுள்ள பல 'பெரிய மட்டங்களுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டவராகவும் அவர் இருந்தார். கேணல் ஸ்ருவாட்டின் படைகள் திருகோணமலையை அடைந்திருந்தும், தொடர்ந்தும் அங்கே பாதுகாப்பானதொரு நிலையைப் பேணுவதற்கு இலங்கையிலிருந்த ஏனைய டச்சு மேலாதிக்கத்தையும் தம் கைக்கு மாற்றவேண்டும் என்ற அவசியம் பிரித்தானியாவை நெருக்கியது. இதனால் பிரதமர் பிற் இன் பணிப்பில் அரசச்செயலர் ஹென்றி டண்டஸ் சுவிஸிலுள்ள கிளேக்ஹோரணைத் தொடர்பு கொண்டார்.

இலங்கையில் அந்நேரம் டச்சு சேவையில் அமர்த்தப்பட்டிருந்த தென்-யேர்மனிய வூற்றம்பேர்க் (தற்போது ஸ்ருட்கார்ட் என்ற மாநகரம் அமைந்திருக்கும் பிரதேசம்) றெஜிமென்ற் தலைமையுடன் கைமாற்றம் குறித்த ஒருவகை உடன்படிக்கையைச் செய்துகொள்வதுடன், கொழும்பில் இருந்த றெஜிமென்ரிற்குப் பொறுப்பாக இருந்த டெ மொய்றோன் அவர்களுக்கு அது குறித்து அறிவிக்கப்படவேண்டும். இதற்காக தரையாலும், கடலாலுமென மாறி மாறி நீண்டதொரு பயணத்தை மேற்கொண்ட கிளேக்ஹோரண் பல இன்னல்களுக்கு மத்தியில் ராமேஸ்வரத்தை அடைந்து, பருத்தித்துறைக்குச் சென்றதை தனது குறிப்புகளில் நினைவுகூரத் தவறவில்லை. அதிலும் சிறியதொரு குழுவுடன் பயணத்தை மேற்கொண்டிருந்த காரணத்தினால் இடைவழியில் கொள்ளைக்காரர்களினால் அவர்களது சொத்துக்கள் பலதும் அபகரிக்கப்பட்ட நிலையிலேயே ராமேஸ்வரத்தை அடைந்திருந்தார்கள்.

(18 ஆம் பக்கம் பார்க்க)




# அறிவியல்

இன்றைய விஞ்ஞானிகள் தங்களின் ஆய்வுகளை வரையறையின்றி வளர்த்துக்கொண்டே செல்கின்றனர். அந்த வகையில் அவர்கள் புதன் கிரகத்தை நோக்கியும் தங்களின் பார்வையை திருப்பியுள்ளனர்.

சூரியனுக்கு மிக அருகில் உள்ள புதன் கோளுக்கு அமெரிக்காவின் நாசா நிறுவனம் மெஸஞ்சர் எனும் விண்கலத்தை ஏவியுள்ளது. இந்த கட்டமைப்பு வித்தியாசமானது. இதன் மூன்றில் இரண்டு பகுதி இரும்பினாலானது. பூமிபோல புதனும் உருப்பெற்றபின் கற்களை இழந்திருக்கலாம் என கூறுகின்றார் மெஸஞ்சர் விண்கல ஆய்வாளர் ஸீன்சொலமன்.

இதன்படி எல்லாம் திட்டமிட்டபடி நிறைவேறினால் 2011 ஆம் ஆண்டில் புதன்கோளை வலம்வரும் முதல் விண்கலம் எனும் பெருமையை மெஸஞ்சர் பெறலாம்.




## புதன் கோளையும் விட்டு வைப்பதாக இல்லை

விண்கலம் 800 கோடி கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்ய இருப்பதாகவும் அதற்கு எடுக்கும் காலம் ஆறரை ஆண்டுகள் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. புதன் கோள் சூரிய குடும்பத்தில் காணப்படுகின்ற கோள்களில் வெப்பமானது நண்பகலில் அதன் வெப்பநிலை 900 டிகிரிபரனைட் ஆகும். இக்கோளின் இந்த விண்கலத்தில் இருக்கின்ற 07 கருவிகளும் ஒருவருடம் முழுவதும் புதனை வலம்வரும்போது தரவுகளை சேகரிக்கும். புதன் கோளை மெஸஞ்சர் அணுகும்போது வெப்பநிலை 370 செல்சியசாகக் காணப்படும். இந்த விண்கலத்திற்கு ஏற்பட்ட மொத்தச்செலவு 42 கோடியே 70லட்சம் அமெரிக்க டொலராகும்.

சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவதற்கு குளிர்சாதனப் பெட்டிகளின் பங்களிப்பும் நிறையவே உண்டு. இதிலிருந்து வெளிப்படுகின்ற காபனீரொக்சைட் சூழலில் பலபாதக மாற்றங்களை ஏற்படுத்துகிறது. இன்றைய உலகில் குளிர்சாதனப்பெட்டிகளின் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

எனவே எதிர்காலத்தில் சூழலுக்கு அதிகளவான பாதிப்புகள் ஏற்படலாம் என்று எண்ணிய சீன விஞ்ஞானிகள் இதற்கான மாற்றுவழியாக புதிய குளிர்சாதனப்பெட்டி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இதனடி புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள குளிர்சாதனப் பெட்டி அதிகளவான மின்சாரத்தை சேமிப்பதாகவும், அதிகளவான காபனீரொட்சைட்டை வெளிவிடுவதில்லை எனவும் கூறுகின்றனர்.

சீனாவின் மிகப்பெரிய தொழில் நிறுவனமான ஹைஹல் உற்பத்தி செய்த அனைத்து குளிர்சாதனப்பெட்டிகளிலும் Freon இல்லாமல் காற்று அழுத்தப்பொறி பயன படுத்தப்பட்டுள்ளது.

சீனாவில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடியே 40 லட்சம் குளிர்சாதனப் பெட்டிகள் விற்பனையாகின்றன. இதன்படி குளிர்சாதனப்பெட்டிகளுக்கான சீனாவின் மின்சாரப் பயன்பாடு பத்து ஆண்டுகால பாவனையின்படி மணிக்கு 60ஆயிரம் கோடி கிலோவாட்ஸ் மின்சாரம் செலவிடப்படுகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு 06கோடி தொன் காபனீரொக்சைட் வாயு வெளிவிடப்படுகிறது எனவும் மதிப்பிட்டுள்ளது.

இதனை தவிர்க்கும் முகமாகவே புதிய குளிர்சாதனப் பெட்டிகளின் தயாரிப்பு சீன சந்தைகளில் புதிய குளிர்சாதனப் பெட்டிகளுக்கு நிறையவே கேள்வி ஏற்பட்டு விற்பனையாகியுள்ளது. காலப்போக்கில் உலக சந்தைகளிலும் அறிமுகம் செய்யப்போவதாக சீனா அறிவித்துள்ளது.

## மாசடையும் சுற்றுச்சூழல்





## வெயிலில் போக வேண்டாம்

வெயிலில் அதிகமாக அலையாதீர்கள். அவசியம் வெயிலில் செல்ல வேண்டுமென்றால் குடையுடன் செல்லுங்கள். அப்படியும் இரண்டு மணி நேரத்திற்கு மேல் தொடர்ந்து வெயிலில் நிற்காதீர்கள், நடக்காதீர்கள். தினமும் குறைந்தது 4 லீட்டர் திரவ ஆகாரங்களை அருந்துங்கள். மோர், இளநீர், பதனீர், சர்பத் மற்றும் சுத்தமான குளிர்பானங்களை அடிக்கடி உபயோகியுங்கள். பப்பாளி, தர்ப்பூசணி, வெள்ளரி, கொய்யா, ஓரேஞ்சு, திராட்சை போன்ற பழச்சாறு நிரம்பிய காய்கனிகளை கோடை காலத்தில் அதிகமாகப் பயன்படுத்துங்கள்.

மனம் பாதிக்கப்படும்போது ஏற்படுகின்ற உடற்கோளாறுகளை 'நரம்புத்தளர்ச்சி' (Neurosis) என்கிறோம். பெரும்பாலும் மனதில் ஏற்படும் பலவகைக்கருத்து மோதல்கள், சிந்தனைக்குழப்பங்கள், தோல்வியை தாங்கிக் கொள்ள இயலாமை போன்றவைதான் நரம்புத்தளர்ச்சி நோய்க்கு அடிப்படைக் காரணம்.

பயம், பதற்ற நோய் (Anxiety Neurosis) ஹிஸ்டீரியா,அச்சநோய், மனத்தளர்ச்சி நோய் (Depressive Neurosis) ஆட்டிப்படைக்கும் எண்ணம்- செயல் நோய் (Obsessive Compulsive Neurosis) மனச்சிதைவு நோய் போன்றவை சில முக்கியமாக நரம்புத்தளர்ச்சி நோய்களாகும்.



## மருத்துவம்

## நரம்புத் தளர்ச்சி



## மனச்சோர்வு வேண்டாம்..!

மனம் இதை எவருமே பார்த்திருக்க முடியாது. இன்றைய உலகில் ஏற்படுகின்ற ஏனைய நோய்களைவிட மனநோய் வித்தியாசமானதும் விபரீதமானதுமான நோயாகக் காணப்படுகின்றது.

மன உணர்வுகளின் நெருக்கம் அதிகரிக்கும் போது மனம் சோர்ந்து விடுகின்றது. அதாவது வெயிலில் வாடிநிற்கும் செடி போன்று மனமும் ஒரு கட்டத்தில் துவண்டு போகின்றது. இச் சந்தர்ப்பத்தில் எம்மை பற்றி கவலைப்பட யாருமே இல்லை. நாம் தனித்துவிடப்பட்டுள்ளோம் என்ற உணர்வு மேலோங்குகின்றது. இவ்வாறான நிலையில் மனம் விரக்தியின் உச்ச நிலைக்கு செல்லும்போது இந்த உயிர் வாழ்ந்து என்ன பயன்? எனும் உணர்வு தலைதூக்க மனம் தற்கொலை செய்யுமளவுக்கு சென்றுவிடுகின்றது.

இவ்வாறான மனச்சோர்வு நோயைக் குணப்படுத்த பல வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. பொதுவாக மனநல மருத்துவர் ஒருவரின் ஆலோசனையை பெறுவது. இதன்மூலம் துவண்டு இருக்கும் மனத்தை தூக்கி நிறுத்தமுடியும். அத்தோடு அக்குபஞ்சர் சிகிச்சை மூலமும் மன அழுத்தத் திற்கு சிகிச்சையளிக்கப்படுகிறது.

ஒருவர் பால் சமூகத்தால் ஏற்படுகின்ற பாதக விளைவுகளாலும் மற்றும் உடல் குறிப்பாக நெஞ்சுப் பகுதி உறுப்புகளில் ஏற்படுகின்ற பலவீனம் காரணமாக மனச்சோர்வு ஏற்படலாம் என்றும் கூறப்படுகிறது. இவற்றுள் சிலநேரங்களில் புத்துணர்ச்சி அளிப்பதற்காக மனச் சோர்வு ஏற்படுபவர்களுக்கு புது இரத்தம் கூட ஏற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதை விட உளநல ஆலோசனை சிறந்ததாகக் காணப்படுகிறது.

மன அழுத்தம் எமது வாழ்வை முற்று முழுதாக பாதிக்கின்ற ஓர்நோய். எனவே உங்கள் மனங்களில் மனச்சோர்வுக்கு நீங்கள் இடம் கொடுக்காதீர்கள். மனதின் கட்டுப்பாட்டிற்குள் நீங்கள் மாட்டிக் கொள்ளாதீர்கள். உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் மனதை கொண்டுவாருங்கள். நிச்சயம் வாழ்வில் வெற்றிபெறுவீர்கள்.




# யாரிடம் நோவேன்?

மு.சந்திரகாந்தா

அக்கினித் திரவத்தை அள்ளி அள்ளி யாரோ ஊற்றுவது போல உடல் கொதித்தது. உடல் கட்டுப்பாட்டை இழந்து நடுங்கத் தொடங்கியது. இழுத்துப் போர்க்க வேண்டும் போல், அந்தக் கடும் காய்ச்சலிலும் உடல் குளிர்ந்து விறைத்தது. தலையிலே நூறு கிலோ பாரத்தை வைத்து அழுத்துவது போல் மிகவும் சிரமப்பட்டான் சிவகுமார்.

தேநீரைக் கொண்டு வந்த சியாமளா, "எழும்புங்கோ... மத்தியானக் குளிசையும் போடயில்லை" என்று பரிவோடு கூறினாள்.

படுக்கையில் இருந்து எழும்ப எத்தனித்தான். முடியவில்லை. யாரோ அவனை பாயோடு ஒட்டிவிட்டதாக உணர்ந்தான். கண்களை விழித்து மனைவியை நோக்கிய போது ஒருவர், இருவராகத் தெரிந்தது.

சியாமளாவின் கண்களில் நீர் கோர்த்து விட்டது. கணவனின் நெற்றியில் கை வைத்தாள். கையே கொப்பளித்து விடும் போல் இருந்தது. "காய்ச்சல் விடேல்லையே?" அன்புடன் கணவரிடம் கேட்டாள். அவனது பதிலை எதிர்பாராமலே பழைய சேலை ஒன்றை எடுத்து போர்த்தினாள்.

"கை, கால் எல்லாம் குத்தி முறிக்குதப்பா..." அவனது குரல் ஈனஸ்வரத்தில் ஒலித்தது. "மருந்தைக் குடியுங்கோ..." என்ற படி அவன் எழுந்திருக்க உதவினாள் சியாமளா. கைவசம் இருந்த கடைசி இரண்டு பனடோலையும் கொடுத்து விட்டு, அவனுக்கு புளிக்கஞ்சி காய்ச்ச அடுப்படிக்குச் சென்றாள்.

சிறிது நேரம் கழித்து அவள் திரும்பி வந்த போது குலப்பன் அடிப்பது அடங்கிப்போயிருந்தது. "என்னங்கோ..." என்ற அவளது அழைப்பில் அவன் கண்களைத் திறக்க முயன்றான். முடியவில்லை. அவன் பதில் சொல்வான் என்று அவள் சிறிது நேரம் பார்த்திருந்தாள்.

சிவகுமார் பதில் ஏதும் சொல்லாமல் துவண்டு போயிருந்தான். கையும், காலும் போட்டது போட்டபடியே இருந்தது. அரசாங்க ஆஸ்பத்திரியில் நேற்று எடுத்த மருந்துக்கு துளி கூட குணம் தெரியவில்லை. தனிப்பட்ட வைத்தியரை நாட கையிலும் காசு இருக்கவில்லை. இடப்பெயர்வின் பின்னர் எவ்வளவு கஷ்டப்படவேண்டியுள்ளது என நினைத்துக்கொண்டாள் சியாமளா. முன்பு கரணவாயில் சொந்த வீட்டில் இருந்தபோது இவ்வளவு கஷ்டம் இல்லை. பொருளாதாரத் தடைகளினால் சில கஷ்டங்களைச் சந்தித்தாலும் கூட வாழ வழியிருந்தது.

தோட்ட மண்ணைக் கொத்தி பயிர் வைத்து வியர்வை சிந்தினால் நல்ல பலன் கிடைக்கும். தோட்ட வரும்படி ஒரு புறம் இருக்க, வீட்டு வளவின் வரும்படியும், ஆடு, மாடு, கோழி வளர்ப்பில் கிடைக் கும் வரும்படியும் அடுப்பை மூன்று நேரமும் புகைய வைத்தது. ஆனால் இங்கு...?

சிவகுமார் தினக் கூலியாக ஏதாவது உழைத்து வந்தால்தா[illegible] உண்டு இல்லாது விட்டால் அடுப்பு பூனையின் வதிவிடமாகிவிடும். அதிலும் இப்போது சில நாட்களாக சிவகுமாருக்கு அடிக்கடி காய்ச்சல் வர ஆரம்பித்த பின்னர் சியாமளாவும் அடிக்கடி கூலி வேலைக்கு போக வேண்டி ஏற்பட்டது. அவர்களால் முடிந்தாலும் குழந்தைகளால் பசி கிடப்பது என்பது லேசான காரியமா என்ன?

சிவகுமார் துவண்டு போய் படுத்திருக்கையில் சியாமளாவுக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. "வாட்டிலை நிப்பமே?" என்று பரிவோடு அவனை நோக்கினாள். அவனும் சம்மதித்து தலை அசைத்தான்.

இப்போது ஆஸ்பத்திரிக்கு எப்படிப் போவது? நேற்று நண்பன் சூரி சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சென்று வந்தான். இன்று சைக்கிளிலிருந்து பயணம் பண்ணக் கூடிய நிலையில் அவன் இல்லை. எனினும் இன்றும் சூரியிடம் ஓடினாள். சூரி உடனேயே மோபைக் பிடித்து வர புறப்பட்டான். சூரியும் கஷ்டப்பட்டவன் தான். எனினும் நண்பனுக்காக அவன் பதறித் துடிக்கையில் அவள் மனது உணர்ச்சி வெள்ளத்தில் சிலிர்த்தது.

ஒருவாறு சிவகுமாரை வைத்தியசாலையில் சேர்த்தாயிற்று வெளிநோயாளர் பகுதியில் இருந்த மருத்துவர் அவனைப் பரிசோதித்தார். "மூளைக் காய்ச்சல் போல இருக்கு" என்று கூறியபடி சில பரிசோதனைகளுக்கும் எழுதி, மருந்துகளும் எழுதி வாட்டுக்கு அனுப்பினார். பெரும் திரளான நோயாளர்களைப் பார்க்கும் அவரைப் பார்க்க மனதில் பெருமிதம் ஏற்பட்டது.

வாட்டுக்கு வந்ததும் சிவகுமாருக்கு கட்டில் கிடைக்கவில்லை. தாதிமார் தமது இருக்கையில் அமர்ந்து கொண்டே விசாரித்தனர். ஓரமாக ஒரு பாயில் அவனைப் படுக்கச் சொல்லி விட்டு ஒரு தாதி அவன் அருகே வந்து அன்பாக உரையாடி காய்ச்சல் பார்த்தாள். நூற்றி மூன்று என்று துண்டில் பதிந்து விட்டு இரண்டு பனடோல் வில்லைகளைக் கொடுத்தாள்.

வாட் பார்க்கும் மருத்துவர் இன்னமும் வரவில்லை. சிவகுமாருக்கு வேறு மருந்து ஏதும் கொடுக்கப்படவில்லை. வெளி நோயாளர் பகுதியில் இருந்த, மருத்துவர் கன மருந்துகள் எழுதியது போல சியாமளாவுக்குத் தென்பட்டது. 'வேற மருந்தில்லையே அம்மா?' என்று தாதியிடம் கேட்டாள்.

"பெரிய டொக்டர் வந்து பார்க்கவேணும். பிறகுதான் மற்ற மருந்துகள், குளுக்கோஸ் எல்லாம் ஏற்றலாம்" என்றாள்.

"ஏனம்மா?"

"இப்ப மருந்தெல்லாம் தட்டுப்பாடேல்லே? பெரிய டொக்டர் பார்த்தப் பிறகுதான் ஏற்றலாம்.."

"டொக்டர் எப்ப வருவார்?"

"வருவார்... நேரம் சொல்லேலாது?"


சியாமளாவுக்கு அந்தரமாக இருந்தது. சிவகுமாரின் அருகில் சென்றாள். "டொக்டர் வந்த பிறகுதான் குளுக்கோஸ் ஏற்றுவினமாம்...."

"பாவம் டொக்டர்மாருக்கும் கடும் வேலை... இங்க இருந்து படிக்கப் போன பொடியளே இங்க சேவை செய்ய வருகுதுகளில்லை. தலை மண்டை பிளக்கிற மாதிரி இருக்கப்பா. நாக்கும் வரளுது... குடிக்க ஏதும் தாரும்.." அவள் அவனுக்குத் தேநீர் போட்டுக் கொடுத்து குடிக்கவைத்தாள். 'ஆம்பிளை வாட்டிலை பொம்பிளை நிற்கக் கூடாதம்மா... கெதியிலை போங்கோ' அற்ரெண்டன் அவளை விரட்டினான். "டொக்டர் வரப்போறார்..."

அவன் விரட்டினாலும் டொக்டர் வரப்போறார் என்ற சேதி அவளுக்கு இனித்தது. சியாமளா வெளியே சென்று நீண்ட நேரத்தின் பின் தான் மருத்துவர் வாட்டுக்குப் போனார்.

சிறிது நேரத்தின் பின்னர். வாட்டிலிருந்து திரும்பிய சூரியிடம் ஏதும் கேட்காமல் ஆவலாக அவனை நிமிர்ந்து பார்த்தாள் சியாமளா.

"கட்டில்ல விட்டிருக்கினம் சேலைன் ஏற்றியிருக்கு மூளை மலேரியா என்றுதான் பெரிய டொக்டரும் சொல்லுறார்.



இரத்தம் எடுத்து சோதிக்க அனுப்பியிருக்கு.

மதியம் பார்வையாளரை அனுமதிக்கும் நேரத்தில் சியாமளா வாட்டுக்கு விரைந்தாள். சேலைன் இன்னமும் ஏறிக்கொண்டிருந்தது. சிவகுமார் கண்களை மூடியபடி படுத்திருந்தான். இவளது வரவு ஏற்படுத்திய சலசலப்பில் அவன் விழிக்கவில்லை.

"இஞ்சாருங்கோ...." கணவனுக்கு அருகே நின்று குனிந்து கூப்பிட்டாள். சிவகுமார் இமைகளை வெட்டினான் சிரமத்துடன் கண்களை திறந்து பார்த்த போது சியாமளாவின் இனிய முகம் இரண்டாகத் தோன்றியது. கடும் சுரத்திலும் கூட அவனது இதழோரம் புன்னகை அரும்ப முகம் மலர்ந்தது.

"எப்படி [illegible]குங்கோ?"

"எனக்[illegible]ாடுமில்லை... பயப்படாதையும்...." கதைக்கும் போது மூச்சு வாங்கியது.

"இளநீர் வெட்டிக் கொண்டு போத்தில்லை விட்டுக் கொண்டுவந்திருக்கிறன், கொஞ்சம் குடியுங்கோ..."

"இப்ப வேண்டாம்.... வீட்டில பிள்ளையள் தனியவே?"

"பவளம் அக்காவோட விட்டுட்டு வந்தனான்..."

"பசிகிடக்கமாட்டுதுகள் நீ போய் சமையன்..."

"நீங்கள் இப்படிக் கிடக்க நான் விட்டுட்டுப் போகட்டே?... முதல்ல ஏதாவது குடியுங்கோ... மாக்கரைச்சுத் தாறன்...."

"வேண்டாம்... பிரட்டிக் கொண்டு வருகுதப்பா..."

"ஒரு முரடென்றாலும்..." என்றபடி இளநீரை பருக்கினாள் சியாமளா. அது நெஞ்சைப் பிளந்து கொண்டு போவதாகப்பட்டது.

"நீ சாப்பிட்டனியே...? பட்டினி கிடக்காத பிள்ளைத் தாச்சி வயிறு..." தனது வருத்தத்திற்கு மத்தியிலும் அவன் அன்போடு கேட்கையில் அவளது மனது விம்மு கிறது.

"பார்க்கிற நேரம் முடியப் போகுது நீர் வெளிக்கிடும். அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே காவலாளி, "பார்க்க வந்தவையெல்லாம் போங்கோ...." என்று பெருங்குரல் எடுத்தபடி வந்தான்.

இதற்கிடையில் தாதி அவளை அழைத்து ஒரு மருந்துச் சிட்டையைக் கொடுத்து, "இந்த மருந்தை வாங்கிவாரும்... ஏத்த வேணும்..." என்றாள்.

"என்ன விலை வரும் அம்மா?" சியாமளா கேட்கவே, "பனடோலே பத்து ரூபா விக்கிறது விலையிருக்கட்டும்... மருந்து கிடைத்தால் அது பெரிய காரியம்.." என்றாள்.

இதற்கிடையில் வேர்க்க விறுவிறுக்க வந்த சூரி, "சுணங்கிப் போச்சு... மனிசி பாயாசம் காய்ச்சித் தந்தவ.... இப்ப எப்படி இருக்கு?" என்று அன்போடு கேட்டான்.

காய்ச்சல் இறங்குதில்லை... வெளியில மருந்து வாங்கத் தந்தவை..." என்ற படி சியாமளா அவனிடம் நீட்டினாள். மருந்துத் துண்டை வாங்கிக் கொண்டு தனியார் பாமசிக்கு விரைந்தான் சூரி. இதற்கிடையில் காவலாளி, "என்னக்கா, சொல்லுறது கேட்கவில்லையே?" என்ற படி வந்தான்.

அருகே வந்த அற்ரெண்டன் ஆறுமுகம், அன்போடு அவளை நோக்கியபடி, "நீங்க போங்கோ பிள்ளை, ஆள் வரும் வரை நான் பார்க்கிறன்...." என்றான்.

அந்த ஆறுதல் வார்த்தைகள் தந்த தெம்புடன் நன்றிப் பெருக்கோடு அவனை நோக்கியபடி சியாமளா வெளியேறினாள்.

மருந்து வாங்கச் சென்ற சூரி வெறும் கையோடு ஏமாற்றத்துடன் திரும்பினான். "ஒரு கடையிலும் மருந்தில்லையாம் அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அனுப்பாட்டிலும், தனியாரையாவது கொண்டுவர விடலாமே. அரசாங்கம் திட்டமிட்டு எங்களை கொல்லுது...." சூரி சீற்றத்துடன் கூறினான்.

சியாமளா விக்கித்துப் போனாள் "கடவுளே.... எனக்கு எதுவும் வேண்டாம் அவர் தப்பிப் பிழைச்சால் போதும்...." என மனமுருக இறைவனை வேண்டினாள். தவிக்கும் மனதோடு வீட்டிற்குச் சென்று பிள்ளைகளுக்கு உணவு செய்து கொடுத்து விட்டு மறுபடியும் வைத்தியசாலைக்கு விரைந்தாள்.

"மருந்து ஓரிடமும் கிடைக்காததால் வவுனியாவுக்குத் தான் அனுப்ப வேணுமாம்." சூரி ஆதங்கத்தோடு கூறினான்.

"அம்புலன்ஸ் எப்ப போகும்?"

"இன்றைக்கு காலமை போட்டுது. நாளைக்குத்தான் திரும்பி வரும் நாளையிண்டைக்குத்தான் போகேலும்..."

"அது வரைக்கும் மருந்தில்லாமல்....?" அவள் விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள். சூரி அவளை தேற்றினான்.

நோயாளியை மட்டும் தான் அம்புலன்சில ஏத்துவினம் நானும் நீங்களும் பஸ்சில போவம்..." நட்புக்காக சூரி செய்யும் உதவிகள் புல்லரிக்க வைத்தன.

மறுநாள் மாலையில் வந்து பார்த்த போது சிவகுமார் நினைவிழந்து போயிருந்தான். "இஞ்சாருங்கோ ஒருக்கா கண்ணை முழிச்சுப் பாருங்கோ... உங்கட சியாமளா வந்திருக்கிறன்.... கதையுங்கோ..."

அவன் அசையவில்லை மூச்செடுப்பது மட்டும் நெஞ்சில் தெரிந்தது. குளுக்கோஸ் ஏறிக் கொண்டிருந்தது.

அற்ரெண்டன் ஆறுமுகம் அருகே வந்து ஆறுதல் சொன்னான். பயப்படாதேயுங்கோ... கடவுள் கைவிடமாட்டார். நாளைக்கு வவுனியா போனால் சுகமாகிவிடும்.

சியாமளா சிவகுமாரின் தலைமயிரைக் கோதியபடி அழுது கொண்டிருப்பதைப் பார்க்க சூரிக்கும் அழுகை வந்தது. "கடவுளே! எங்களுக்கு ஏன் இந்தச் சோதனை? இந்த வேதனைகளுக்கு முடிவே இல்லையா? என்று ஏங்கினான்.

மறுநாள் காலையிலும் அவனுக்குச் சுயநினைவு தோன்றவில்லை. அம்புலன்சில் ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தாதியர் ஊழியர் அனைவரும் பம்பரமாகச் செயற்பட்டனர். அம்புலன்ஸ் நிறைந்த நோயாளர்கள். சிவகுமார் நடுவே படுத்தப்பட்டிருந்தான்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

# அன்பின் வலி

நான்
பாரொடு விண்ணாய்ப் பரந்தவன்
நீ
இரண்டுக்குமே தண்மை தரும்
மழை முகிலானவள்
கலந்தனவாகிய
எமதன்புடை நெஞ்சம்
ஒரு மலை முகட்டில் வாழும்
பறவையினைப் போல்
கட்டுக்கடங்காதது
இப்பூவுலகோர்
அம்பும் வில்லுமாய் அலையும்
மலை வேடுவர்.

ஊழிப்பெருவெள்ளத்தில்
இம் மண்ணுருண்டை
மூழ்குவதாய் நான் கற்பனிக்கையில்
கர்ணப் பேழையாய் மிதந்து
என்னை மட்டும்
கரையேற்றிச் செல்கிறாயே
ஏனடி என் கனவுத் தோழி.

நீ எனக்கு
யாதுமாகி நின்றவள்
நான் காதலாகிக் கசிந்து
கண்ணீர் மல்குகிறேன்
ஏதொன்றும் அறியார்போல்
வேடமணிந்த அயலும் சுற்றமும்
படகு செலுத்துகிறது
என் கண்ணீரில்.

காரணம் வேறொன்றுமில்லையடி தோழி
இப்பூமியர் எல்லோருக்கும்
ஞானக்கண் திறப்பதற்காய்
என்றோ ஒரு நாள்
ஆதி பிதா ஆதாம்
புசித்த ஆப்பிளின்
வீரியத்தன்மை விழுக்காடாகிவிட்டது.

திறந்து மூடுகின்ற இமைகள்
நிரந்தரமாய் மூடுவதற்குள்
இன்னுமொரு ஆதாமுக்கும்
அவன் புசித்த ஆப்பிளுக்குமாய்
எங்கு சென்றலைவோமடி
என் கனவுத் தோழி.

வேல்.லவன்

# தூள்... தூள்..!

மூசு.... மூசு....
உன் மூச்சு
பகை வீழ்த்தும்
எறி.... எறி
கற்களும் போத்தல்களும்
ஆயுதமாகட்டும்
நீதி, நியாயம்
யாரிடம் கேட்கிறாய்?
ஏன் கேட்கிறாய்?
இது எங்கள் பூமி.


இங்கு எவன்
எம்மை ஆள்வது
இனியும் பொறுமையா?
ஏன்?
உன் விழிகள்
தீ உமிழட்டும்
உன் முன்
பகை... தூள்... தூள்.

முருகு பாரிமகன்

## இலக்கியப்பகிர்வு

# இலக்கியம் இல்லாத சந்திப்பு

இணுவையூர்
சிதம்பர திருச்செந்தி நாதன்



கடந்த 22.04.2005 அன்று (வெள்ளிக்கிழமை) கிளிநொச்சி கணேசபுரத்தில் ஒரு புதுமனைப் புகுவிழா தினக்குரல் பத்திரிகை யாளரான திரு.க.இரத்தினசிங்கம் அவர்கள்தான் அந்த மனையின் சொந்தக்காரர்.

எத்தனையோ புதுமனைப்புகு விழாக்கள் நடக்கின்றன. ஆனால் இரத்தினசிங்கம் அவர்களின் புது மனைப்புகுவிழா தொடர்பாக இலக் கியப்பகிர்வில் ஏன் கருத்து பகிரப் படவேண்டும் என்பது ஒரு கேள்வி யாக எழலாம். அல்லது திரு.க.இரத் தினசிங்கம் அவர்கள் ஒரு பத்திரி கையாளர் என்ற ரீதியில் வித்தி யாசமாகக் கருதலாமா? என்று நினைக்கலாம்.

இவற்றை எல்லாம்விட அந்தப் புதுமனைப் புகுவிழா எல்லோரையும் கவருவதற்குப் பிரதான காரணம் உண்டு. கலை இலக்கியப் படைப் பாளிகள், ஊடகவியலாளர்கள், நாட கக் கலைஞர்கள் என்ற பலதரப்பட்ட வர்கள் அங்கு சங்கமமாகியதால்தான் அந்தப் புதுமனைப் புகுவிழா சிறப்புப் பெறுகின்றது.

இது என்ன புதினம் என்று நீங்கள் கருதலாம். படைப்பாளிகள்- ஊடகவியலாளர்கள் கலந்துகொள் வதில் என்ன ஆச்சரியம் உள்ளது என்று கேட்கலாம்.

அந்தப் புதுமனைவிழாவின் பிரதான நாயகரான க.இரத்தினசிங்கம் அவர்களின் எண்ண ஓட்டம்தான் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியதா கின்றது.

வந்தோரை வரவேற்று வாழ வைத்துக்கொண்டு இருக்கும் கிளி நொச்சியில் பல படைப்பாளிகளும், கலைஞர்களும், ஊடகவியலாளர் களும் இப்போது வாழ்ந்து வரு கின்றனர்.

தற்போதைய அரசியல் சூழ் நிலை, தடைகள் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி என்ற பல்வேறு காரணங்களால் இங்கு பல்வேறு படைப்பாளிகளும், ஊடகவியலாளர் களும் வருகின்றார்கள்- போகின்றார் கள். கருத்துக்களைத் தெரிவிக் கின்றார்கள். எல்லோரும் ஒத்தகருத்து உடையவர்கள், ஒரே கொள்கையின் கீழ் செயற்படுவார்கள் என்ற பாவனை யும் செய்கின்றார்கள்.

இந்த மாற்றம் உண்மை யானதா? அல்லது நெகிழும் தன்மை கொண்டதா என்பதை எதிர்கால அரசியல் மாற்றம்தான் தீர்மானிக் கும் என்றாலும் கிளிநொச்சி இப் போது முக்கியமான சந்திப்பு இடமாக உள்ளது.

கிளிநொச்சியில் கலந்துள்ள படைப்பாளிகளையும், கலைஞர்களை யும், ஊடகவியலாளர்களையும் தன் இல்லத்திற்கு அழைத்து விரு துண்ணச்செய்து அவர்களை ஒளிப்பட மெடுத்து தன் வீட்டில் வைப்பதன் ஊடாக தன் வீட்டு எதிர்காலச் சந்த திக்கு மாத்திரம் அல்லாது எதிர்காலச் சந்ததிக்கு ஒரு ஆவணச் செயற் பாடாகச் செயற்படுத்தவே திரு.க. இரத்தினசிங்கம் அவர்கள் விரும் பினார். செயற்பட்டார். அதன். காரண மாகவே இந்த நிகழ்வினை இங்கு சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

கிளிநொச்சியில் சமீபகாலமாக பல்வேறு கருத்தரங்குகள், வெளி யீட்டு விழாக்கள் என பல்வேறு இலக் கிய நிகழ்வுகள் நடந்தன. நடக்கின் றன. பல்வேறு கருத்துக்களை உடைய படைப்பாளிகளும் அத னோடு தொடர்புபட்ட ஊடகவியலாளர் களும் சந்திக்கின்றனர்தான் எனினும் அத்தகையவர்கள் தங்கள் கருத்து நிலைகளுக்கு அப்பால் சந்தித்து இலக்கியச் சர்ச்சைகளில் ஈடுபடாமல் நட்புறவு ரீதியில் சந்தித்து விருந் துண்ட செயற்பாடு இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது.

இது போன்ற சந்திப்புக்கள் வேறுஇடத்தில் நடந்ததா? நடக் கின்றதா? என்பதை எல்லாம் இங்கு கூறக்கூடிய அளவுக்குத் தகவல்கள் இல்லை. என்றாலும் கிட்டத்தட்ட பத்தொன்பது வருடங்களுக்கு முன் னர் யாழ்ப்பாணம் ஆனைக் கோட்டையில் " இலக்கியம் பேசாத இலக்கியவாதி களின் முகாம் என்ற நிகழ் வினை அந்த முகாமில் பங்குகொண்டவன் என்ற ரீதியில் சுட்டிக்காட்ட லாம் என நினைக்கின் றேன்.

06.07.1986 ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை நடைபெற்ற அந்தச்சந்திப்பு பல்வேறு கருத்து நிலைப்பட்ட வர்களை ஒன்று சேரவைத்து இலக்கியம் பேசாமல் மகிழவைத்து நிறைவு கொண்டது.

மல்லிகையின் ஆசிரியர் டொமி னிக் ஜீவா அவர்களின் அழைப்பின் பேரில் சிறந்த சிறுகதை எழுத்தாள ரான சுதாராஜ் அவர்களின் ஆனைக் கோட்டை 'கவிதை' இல்லத்தில் நடைபெற்றது.


சுதாராஜ் அவர்கள் ஒரு பொறி யியலாளர் அவரது வித்தியாசமான வடிவமைப்பில் கவிதை இல்லம் புதுமையான இல்லமாக அமைக்கப் பட்டு இருந்தது. அன்றைய அந்த நிகழ்வினைக்கூட ஒரு புதுமனைப் புகுவிழாவாகக் கருதலாம். காரணம் ஒருநாள் முழுக்க படைப்பாளிகளை ஊடகவியலாளர்களை வைத்து தங்கள் விருந்து உபசாரத்தால் திக்கு முக்காடவைத்துவிட்டனர் சுதாராஜ் குடும்பத்தினர்.

டொமினிக் ஜீவா, புதுவை இரத்தினதுரை, ஈழமுரசு ஆசிரியர் எஸ்.திருச்செல்வம், கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, ஈழத்துச்சோமு, கவிஞர் இ.முருகையன், பேராசிரியர் மௌனகுரு, பூபாலசிங்கம் புத்தக சாலை அதிபர் பூ.சிறீதர்சிங், பேராசி ரியர் அ.சண்முகதாஸ், நெல்லை க.பேரன், பேராசிரியர் நந்தி, அப்போது வீரகேசரி பிரதம ஆசிரியர் ஆ.சிவநேச செல்வன், இ.சிவானந்தன், தெணி யான், பேராசிரியர் இரா சிவச்சந்திரன், பேராசிரியர் செ.யோகராசா, எஸ். வன்னியகுலம், குப்பிளான் ஐ.சண்முகன், த.கலாமணி, பேராசி ரியர் சோ.கிருஷ்ணராசா எனப்பலரும் கலந்துகொண்டு அந்தச் சந்திப் பினைச் சிறப்பித்தனர்.

யூலை மாதத்தில் நடந்த அந்த நிகழ்வின் பின்னர் அவ்வாறான ஒரு சந்திப்பினை அந்தவருடம் (1986) செப்ரெம்பர் மாதத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. எனினும் எத்தனையோ செப்ரெம்பர்கள் வந்து போய்விட்டன. அவ்வாறான ஒரு சந் திப்பு மீண்டும் நடக்கவேயில்லை.

"இலக்கியம் பேசாத இலக்கிய வாதிகள் முகாம் என்றால் என்ன? என்ற ரீதியில் சில படைப்பாளிகள் மத்தியில் எழுந்த கேலியும், கிண்ட லும் எழுந்தாலும் கூட படைப்பாளிகள் மத்தியில் நட்புறவினை ஏற்படுத்த இவ்வாறான நிகழ்வுகள் உதவும்.

இப்போது க.இரத்தினசிங்கம் அவர்கள் தனது சக்திக்கு உட்பட்ட விதத்தில் இந்த இலக்கியவாதி களை ஒன்று சேர்த்துள்ளார். இந்த நிகழ்விலும் கலந்துகொண்டவன் என்றவகையில் இதனை உண்மை யில் ஒரு மகிழ் வான நினை



வாகக் கருதுகின்றேன்.

ஈழநாதம் பிரதம ஆசிரியர் திரு. பொ.ஜெயராஜ், வன்னியில் புகழ்பூத்த கவிஞராக இருந்த கண்டாவளைக் கவிராஜர், தினக்குரல் ஆசிரிய பீடத் தைச்சேர்ந்த தேவகௌரி, வளவை வளவன், அன்ரன் அன்பழகன், பெருமாள் கணேசன், தமிழீழ தேசியத் தொலைக்காட்சியைச் சேர்ந்த பணிப்பாளர் எஸ்.கருணா கரன், பு.சத்தியமூர்த்தி, அமலதாஸ், தாமரைச்செல்வி, மண்டைதீவுக் கலைச்செல்வி, 'தவிர' கவிதை சிற்றேட்டின் ஆசிரியர் தா. விஷ்ணு, முல்லை யேசுதாசன், வேலவன், அநாமிகன், திருநகரூர் ஜெகா, நாடகக் கலைஞர் சேரன், அரசியல் ஆய்வாளரும் சிந்தனைவாதியு மாகிய மு. திருநாவுக்கரசு, டாக்டர் ச.முருகானந்தன், டாக்டர் கா.சுஜந் தன் எனச் சிறப்புமிக்க பலர் கலந்து கொண்டனர்.


அந்தப் புதுமனைப் புகுவிழா வில் க.இரத்தினசிங்கம் அவர்களின் உறவினர்களும் ஏராளமாகத்திரண்டு இருந்தார்கள். எனினும் சேர்ந்து வந்த படைப்பாளிகள் திரு. கருணாகரன் அவர்களின் ஒன்றிணைப்பில் சேர்ந்து கொண்டனர். அவர்கள் சார்பில் கண்டாவளைக் கவிராஜர் அவர்கள் வயது முதிர்ந்த நிலையிலும் தளராத குரலுடன் இரத்தினசிங்கம் அவர் களை வாழ்த்தி கவிபாடியது அன் றைய நிகழ்வின் சிறப்பாக அமைந் தது.

இலக்கியவாதிகள் மீது கொண்ட தனிப்பட்ட ஈர்ப்புக் காரண மாகவே திரு.இரத்தினசிங்கம் இந்த முயற்சியை மேற்கொண்டார் என்பது அவர் இதற்காக செயற்பட்டதை நேரில் உணர்ந்துகொண்டவன் என்ற ரீதியில் என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது.

திரு.இரத்தினசிங்கம் அவர்கள் கிளிநொச்சியில் தொடங்கிய பணியை வேறு பலரும் தொடரலாம் அது நன்மையைத் தரவேண்டும்.



# இளைய நாதம்




மணி, ராமுவின் அம்மாக்களின் பெயர் என்ன?

# அட்டை

குளம், குட்டை, ஏரி, ஆறு முதலான இடங்களில் காணப்படும் இரத்தம் உறிஞ்சும் புழுவினமே அட்டை. இதன் முக்கிய உணவு ஆடு, மாடு வனவிலங்கு, மனிதன் முதலான முதுகெலும்புடைய உயிரினங்களின் இரத்தம். மண் புழுவின் உறவினம். இரத்தம் கிடைக்காவிட்டால் பூச்சிகள் சிறிய மெல்லுடலிகள் ஆகியவற்றை உண்ணும். இது 25முதல் 10 செ.மீ நீளம் வரை இருக்கும். இதன் உடல் உருளையானது. இதனால் உடலை மிகவும் குட்டையாகச் சுருக்கிக் கொள்ளவும் முடியும். நீளமாக நீட்டிக்கொள்ளவும் முடியும். நன்றாக நீண்டிருக்கும் போது இதன் உடல் தட்டையாக இருக்கும். உடலின் முன் நுனியில் சிறிய உறிஞ்சியும் பின் நுனியில் பெரிய உறிஞ்சியும் கொண்டது.



இரத்தத்தை உறிஞ்சும் போது முதலில் இது அந்த முதுகெலும்பியின் உடலில் பின் உறிஞ்சியின் மூலம் ஒட்டிக்கொள்ளுகிறது. பின்னர் முன் உறிஞ்சியின் நடுவிலுள்ள மூன்று சிறிய தடைகள் மூலம் சருமத்தைத் துளைத்து இரத்தத்தை உறிஞ்சுகிறது. இதன் உமிழ் நீரிலுள்ள ஹிருடின் என்ற நொதியம் இரத்தம் உறையாமல் தடுக்கிறது. இதனால் தான் இந்த இனம் அடங்கிய வகுப்பிற்கு ஹிருடினியா என்ற பெயர் வந்தது. இதன் இரைப்பை நிரம்பும் வரை உடல் எடையைவிட பல மடங்கு எடை வரை இரத்தத்தைக் குடித்தபின் அந்த விலங்கை விட்டு விடுகிறது. பின்னர் ஒன்பது மாதங்கள் வரை இரை எடுக்காமலேயே இருந்து விடும்.

இது இரு பாலின உயிரி. அதாவது ஆண் பாலின உறுப்பும் பெண் பாலின உறுப்பும் கொண்டது. இரண்டு அட்டைகள் இனச் சேர்க்கை புரியும் போது ஒன்றுக்கொன்று விந்தணுக்களையும் சினை முட்டைகளையும் பரிமாறிக்கொள்ளும். கருவுற்ற முட்டைகளைத் தண்ணீரிலே இடும்.

## நகைச்சுவை



"நாயின் வாலை இழுக்காதேடா, அது கடிக்கும்"
"போங்கப்பா... நாய் வால் எங்காவது கடிக்குமா?"

## சொற்சிலம்பம் - 84

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ண் | ப் | க் | சி | ன் | லை | தீ |
| கா | கு | நீ | பா | ந் | மி | யி |
| தி | லா | தி | கோ | னி | ணி | ன் |
| ழ | அ | பி | ரி | டோ | சீ | சு |
| மோ | ட் | தா | ஷ் | ர் | ரி | தோ |
| நை | ம் | யா | சா | ள | ரு | ம |
| இ | ல் | னே | ஓ | கி | த் | சி |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -82 இன் விடைகள்

01. திருகோணமலை

02. நைல்நதி

## சொற்சிலம்பம் - 82 இன் பரிசுக்குரியவர்

ம.நிறோஜன்,
றோ.க.வித்தியாலயம்,
தாளையடி.

## சொற்சிலம்பம் - 82 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ந.தர்சிகா,
ஸ்ரீநகர் பூந்தோட்டம்,
வவுனியா.

02. செ.நிசாந்,
மு/பாண்டியன் குளம் ம.வி,
39 செல்வபுரம்.

03. சி.ரஜீந்தன்,
முத்துக்குமாரசுவாமி ம.வி,
கைதடி.

04. செ.கமலவேணி,
கோணாவளை,
வசாவிளான்.

05. பா.பிரதீபன்,
76.:.1 மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.

06. தெ.சிவசீலன்,
கேப்பாபுலவு,
முள்ளியவளை.

07. முகமட் ஜலீல்,
வ/மதினா வித்தியாலயம்,
வவுனியா.

08. தெ.தெய்வபாலா,
இல-7, 1ஆம் குறுக்குத்தெரு,
வவுனியா.

01. உலகிலேயே அதிகமான எரிமலைகள் உள்ள நாடு?
01) ....................................

02. தமிழீழத்தில் பறவைகள் சரணாலயம் உள்ள இடம்?
01) ....................................

பெயர் :- ....................................

முகவரி :- ....................................
....................................

சொற்சிலம்பம்-84
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

## ஓட்டப்பந்தயம்...

பகுதி-02




நன்றி:- பன்டேடைம்ஸ்

(தொடரும்)

## வீடு

புதிய மிலேனியத்தில் பெண் பற்றிய பிரக்ஞை சமூக மட்டத்தில் காத்திரமாக ஏற்பட்டு வருகிறது. இன்றைய இளைய தலைமுறை ஆண்களில் கணிசமானோர் பால் சமத்துவத்தை ஏற்றுக்கொண்டு பெண்களுக்கு உரிய சுதந்திரத்தை வழங்கி வருகிறார்கள். அதாவது



# பெண்கள் பற்றிய பிரக்ஞை

ஆணாதிக்கப் போக்கிலிருந்து விடுபட்டு பெண்ணை சக மானிடப் பிறவியாகக் கணித்து மதிப்பளிக்கிறார்கள்.

ஏறு முகமாகச் செல்லும் இந்த ஆரோக்கியமான சூழ்நிலையில் பெண்கள் நிதானத்துடன் செயற்படவேண்டியது அவசியம். இன்று பெண்களின் நிலை எவ்வளவோ உயர்ந்துள்ளது. ஆங்காங்கே குடும்ப வன்முறைகளும் பாலியல் துஷ்பிரயோகங்களும், சில அடக்குமுறைகளும் இருந்தாலும் கூட, முன்பிருந்த இழிநிலையிலிருந்து படிப்படியாக விடுபட்டு வருகிறார்கள். சீதனம் என்ற விடயம் மட்டும் மோசமடைந்துகொண்டு வருகிறது.

பெண்கள் ஆண்களுக்கு நிகராக இன்று செயற்பட்டு வருவது பெருமைக்குரிய விடயம். பெண்ணுக்குரிய சம இடமும் சுதந்திரமும் அளிக்கப்படவில்லையெனில், அது உலகத்திற்கே பேரிழப்பு என்பதை பலரும் உணர்ந் துள்ளார்கள்.

இன்னொரு புறம் பெண்கள் பற்றிய பார்வை சமூகத்தில் இன்னமும் முற்றுமுழுதாக மாறவில்லை. பெண்களின் முன்னேற்றங்கள் குறிப்பிடக் கூடியளவு மாற்றம் கண்டிருந்தாலும், மரபு வழி அழுத்தங்களால் குடும்பங்களில் சில பெண்கள் துயரத்துடனேயே வாழ்ந்து வருகிறார்கள். காலம் காலமாக ஆணாதிக்கம் பெண்களுக்கு ஏற்படுத்திய கடுமையான மரபு ரீதியான கட்டுப்பாடுகளால், பெண்ணியம் ஆண்களைச் சற்றுக் கடுமையாகவே சாடுகிறது. ஆனால் இன்றைய முன்னேற்றகரமான காலகட்டத்தில் இது கொஞ்சம் அடக்கி வாசிக்கப்பட வேண்டியுள்ளது. ஏனெனில் ஆதரவு தர முன்வரும் ஆண்களின் மனதை நோகாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமல்லவா?

அத்துடன் பெண்கள் சுதந்திரம் என்பதை தப்பாகப் புரிந்துகொள்ளக்கூடாது. தமது உத்தமங்களைக் கைவிடாமல், சமூகத்துடன் முட்டி மோதி முரண்பட்டு நிற்காமல் தமது ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிப்படுத்தி வளர்ச்சி அடைவதன் மூலம் தனக்குரிய இடத்தை பெறவேண்டும். அனைவரையும் மதிக்கும் போக்கும் மிகமிக அவசியம்.

**சந்திரகாந்தா**

# நமக்கு நாமே கேடு செய்யலாமா..?

மனிதனாக இந்தப் பூமியில் பிறந்த எவரும் போட்டி போட்டு உழைத்தாலும் உயர்ந்தாலும் மற்றவரிடத்தில் பொறாமை கொள்வது எந்த ஒரு மனிதனுக்கும் ஒரு தீய குண இயல்பாகும். ஆகவே நீங்கள் வைத்த ஒரு இலக்கை அடைய விரும்பினால் மனதில் திடகாத்திரமான உறுதியை வைத்துக்கொண்டு அயராது உழைக்கவேண்டும். அப்போதுதான் நாம் வாழ்வில் உயர்வை சந்திக்க முடிகின்றது.

ஒரு மனிதனின் உயர்வை பார்த்து இன்னொருவர் பொறாமை கொள்ளும் பழக்கம் பரம்பரை பரம்பரையாக இருந்து வரும் பழக்கம் ஒன்று ஒருவரை பார்த்து ஒருவர் பொறாமை கொள்வது. ஆகவே ஏன் மனிதனாகப் பிறந்த எவரையும் கடவுள் நல்லவராகவே படைக்கிறான் அதில் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பிலே என்ற முது மொழிக்கிணங்க அன்னை தனது குழந்தையை சிறுபிள்ளைப்பருவத்தில் இருந்து பள்ளிப் பருவம் வரையும் நல்லவதாகவே வளர்க்கின்றாள். அவர்கள் பள்ளிப்படிப்பு முடித்ததும் நல்லவராக வளர்வதும் தீயவராக வளர்வதும் தனது சிந்தனையின் படிதான். ஒருவர் நல்ல ஒரு இலக்கை அடைய வேண்டும் என்றால் நல்ல எண்ணத்துடனும் நற்சிந்தனையுடனும் விடா முயற்சி உடனும் இருக்க வேண்டும் அப்போதுதான் நாம் வைத்த இலக்கை இலகுவில் அடைய முடிகின்றது. இதனைப் பார்த்து சிலர் பொறாமை கொள்கின்றார்கள். மனிதனாகப்பிறந்து விட்ட நீங்கள் ஏன் மற்றவரை பார்த்துப் பொறாமை கொள்கின்றீர்கள். மனிதர்கள் எல்லோரும் ஒரே மாதிரி ஒரே சிந்தனையில் தான் இயங்குகிறார்கள். ஆகவே அனைவரும் போட்டி போட்டு பொறாமை என்பதனை விலக்கி நல்ல மனதுடனும் தூய்மையான உள்ளத்துடனும் வாழ வேண்டும்.

மனிதர்களே நீங்கள் போட்டி போட்டாலும் பொறாமை கொள்ளாதீர்கள். ஒருவரின் தீய எண்ணம் அவருக்கே கேடு செய்கின்றது. ஒருவரின் நல்ல எண்ணம் நன்மையையே தேடிக் கொடுக்கின்றது. போட்டி இருந்தாலும் மற்றவரைப் பார்த்துப் பொறாமை கொள்ளாதீர்கள் நமக்கு நாமே கேடு செய்வதாக மாறிவிடும்.



**சு.லலிதா**

## சமையல் குறிப்பு



### அசைவ ஒடியல் கூழ்

**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| ஒடியல் மா | -1/2 சுண்டு |
| மீன் | -250 கிராம் |
| இறால் | -200 கிராம் |
| நண்டு | -4(சிறிய அளவானது) |
| பயற்றங்காய் | -50 கிராம் (பிஞ்சுப்பதமானது) |
| மரவள்ளிக்கிழங்கு | -சிறிய கிழங்கு ஒன்று |
| பலாக்கொட்டை | -8 |
| செத்தல் மிளகாய் | -10 (தேவையான உறைப்பை பொறுத்து மிளகாயைக் கூட்டிக் கொள்ளவும்) |
| மஞ்சள் | -சிறிய துண்டு |
| நச்சீரகம் | -1 தேக்கரண்டி |
| மிளகு | -1/2 தேக்கரண்டி |
| வெள்ளைப்பூடு | -அளவாக |
| அரிசி | -1 மேசைக்கரண்டி |
| முருங்கையிலை | -சிறிதளவு |
| புளிக்கரைசல் (தடிப்பானது) | -4 மேசைக்கரண்டி |
| உப்பு | -அளவாக |

**செய்முறை:-**

* மீன், இறால், நண்டு, இவற்றைச் சுத்தஞ் செய்து வெட்டிக்கொள்ளவும்.
* ஒடியல் மாவை சிறிது நீர் சேர்த்துக் குழைத்து வைக்கவும்.
* காய்கறிகளைச் சுத்தம் செய்து சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்.
* செத்தல் மிளகாய், மஞ்சள், மிளகு, வெள்ளைப்பூடு இவற்றை அரைப்பதமாக அரைத்துக்கொள்ளவும்.
* மீன், நண்டு, இறால்,காய்கறிகளை மூன்று டம்ளர் நீர் சேர்த்து வேகவிடவும்.
* ஒடியல் மாவின் மேல் தெளிந்த நீரை அகற்றிய பின் மூன்று டம்ளர் நீர் சேர்த்துக் கரைத்து வைக்கவும்.
* வேகவைக்கப்பட்டவை நன்கு வெந்ததும் நன்றாகக் கடையவும்.
* அரைத்த கூட்டு, ஒடியற்கரைசல், புளி, உப்பு, முருங்கையிலை, இவற்றைக் கலந்து நன்கு துளாவிக் கொதிக்கவிடவும்.
* மா வெந்ததும் இறக்கிக் கொள்ளவும் (தடிப்பிற்கேற்ப நீர் சேர்த்துக் கொள்ளவும்.

## பயனுள்ள குறிப்புக்கள்

மின்சார சாதனங்கள், ஸ்விட்சுகளை குழந்தை கையெட்டும் உயரத்தில் வைக்கவேண்டாம்.

✣ ✣ ✣

சிகரெட் பிடிப்பவர்கள் படுக்கையில் படுத்தபடி புகை பிடித்தால் பெரிய தீ விபத்துக்கு வழி வகுக்கும்.

✣ ✣ ✣

பழக்கமில்லாத சமுத்திரம், ஆறுகள், குளங்களில் நீச்சல் தெரிந்தாலும் இறங்க வேண்டாம்.

✣ ✣ ✣

நீச்சல் குளத்தில் எக்காரணம் கொண்டும் பெரியவர்களின் மேற்பார்வை இல்லாமல் குழந்தைகளை நீந்த அனுமதிக்காதீர்கள்.

✣ ✣ ✣

உங்கள் வேலையாட்களின் சரியான முகவரி, அவர்கள் உறவினர்களின் பெயர், முகவரி ஆகிய விவரங்களைத் தெரிந்து வைத்துக்கொள்வது நல்லது.

✣ ✣ ✣

தினமும் வீட்டுப் பாடங்களை முடிக்க உதவுங்கள். நேர அட்டவணைப் படி புத்தகங்களை முதல் நாள் இரவே எடுத்து வைக்கச் சொல்லிப் பழக்கப் படுத்துங்கள்.

✣ ✣ ✣

பள்ளிக்கூட வாசலில் விற்கும் பலகாரங்களை வாங்கிச் சாப்பிட அனுமதிக்காதீர்கள். பதிலாக வீட்டிலிருந்தே தின்பண்டங்களைக் கொடுத்து அனுப்புங்கள்.

✣ ✣ ✣

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*


## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்



வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—45**

பெயர்:..............................................

முகவரி:............................................

..............................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# மதிப்பீடு மற்றும் விமர்சனங்களை — முன்வைக்கும் பண்பு இப்போது இல்லை..?

**கருணாகரன்**

தன்னுடைய முதற்கதைகளை எழுதிக்கொண்டிருக்கிறார் யோ. கர்ணன். ஏறக்குறைய கடந்த ஐந் தாண்டுகளுள் எழுதப்பட்ட கதை களை முன்வைத்து எழுதப்படுகிறது இந்தக்குறிப்பு. கர்ணனின் வாழ் களத்தையும், வாழ் காலத்தையும் இந்தக் கதைகள் ஓரளவுக்குப் பிரதிபலிக்கின்றன.

தன்னுடைய ஆர்வம், நோக்கம், இயல்பு என்பனவற்றைக் கர்ணன் தன் வாழ் களத்தின் மீதும், வாழ் காலத்தின் மீதுமே குவித்திருக்கிறார். அதனால் சாட்சியாயும் விமர்சனமாயும், அபிப்பிராயங்களாயும் உட்தொனிக்கும் சேதிகளை அவர் இந்தக் கதைகளில் வைத்துள்ளார்.

ஒரு படைப்பாளிக்கிருக்கும் தார்மீக அக்கறைகளோடு எழுதப்பட்டிருக்கும் இந்தக்கதைகள் எழுப்பும் கேள்விகள் பல. கதைகளின் புலம், நிகழ்வுகள், மனிதர்கள், அவர்களின் வாழ்க்கை, அவர்களுடைய பிரச்சினைகள், எதிர்கொள்ளல்கள், சவால்கள், உணர்வுகள் என்று விரிந்து செல்லும் எல்லையற்ற வழிகளில் நிரம்பியிருக்கின்றன பல கேள்விகள். காயமும், வலியும் உள்ள வாழ்க்கையின் கேள்விகள் சாதாரணமானவையல்ல என்பது தான் கதைகளின் உட்தொனி. ஆனால் புறப்பார்வையில் சாதாரணம் போலத் தோன்றும் விதத்தில் எல்லாவற்றையும் முன்வைத்து எளிமைப் படுத்திக் கடந்து போகிறார் கர்ணன்.

02

படைப்புத்திறனும் அக்கறைகளும் மங்கிக்கொண்டிருக்கும் ஒரு சூழலில் புதிய திறனுடைய படைப்புகளுக்காக வேண்டி கர்ணனுடைய கதைகளோடு இந்தக் குறிப்புக்கள் எழுதப்படுகின்றன.

ஈழத்தின் படைப்பு நிலை பொதுவாக மந்தத்தையும், சோர்வையும் நோக்கிப்போய்க்கொண்டிருக்கிறது. சமகாலத்தில் பல வெளியீடுகளிலும் கவிதை, சிறுகதை, கட்டுரை என்றெல்லாம் எழுதப்படுகின்றனதான். ஆனால் அவற்றின் தரம், சிறப்பு, தனியடையாளம் என்று பார்த்தால் அவை கவனத்திற் பதியாது போய் விடுகின்றன. பக்கங்களை நிரப்பும் நோக்கமே பல வெளியீடுகளிலும் தெரிகிறது. படைப்புப் பற்றிய அக்கறையும், தெளிவும் இந்த வெளியீடுகளுக்கு இருப்பதில்லை. அப்படி இருக்குமானால் அவை படைப்புத் திறன் வெளிப்பாடு பற்றிய புதிய அணுகுமுறைகளில் இயங்கும்.

நமது சூழலில் தரமாகவும் சிறப்பாகவும் எழுதிய பலர் தொடர்ந்து எழுதுவதில்லை. அல்லது எழுதுவதிலிருந்து ஒதுங்கி விட்டார்கள். ஈழச் சூழலில் இதுவொரு முக்கிய அவதானத்திற்குரியது.

தமிழகத்தில் சுந்தரராமசாமி, பா.செயப்பிரகாசம், அசோகமித்திரன், நகுலன், ஹெப்ஸிபா, யேசுதாசன், நீலபத்மநாதன், வண்ணதாசன், அ.ராமசாமி, ந.முத்துச்சாமி, அம்பை, விக்கிரமாதித்யன், ராஜமார்த்தாண்டன், ஞானக்கூத்தன், ஆதிமூலம், மருது, எஸ்.வி.ஆர், தமிழவன், கி.ராஜநாராயணன், பிரபஞ்சன், பூமணி, ச.தமிழ்ச்செல்வன் என்று சகலரும் இன்னும் படைப்பில் இயங்கிக்கொண்டேயிருக்கிறார்கள்.

க.நா.சு, பிரமிள், சு.சமுத்திரம், ஜெயந்தன், தஞ்சை ப்ரகாஷ், எஸ்.என்.நாகராஜன், எம்.வி.வெங்கட்ராம், ஜி.ராகராஜன் என மறைந்த படைப்பாளிகளுக்கும் மரணத்தின் நிழல் அவர்களை நெருங்கிய வரையில் படைப்பார்வத்தோடு இயங்கியவர்கள். ஜெயகாந்தன் போன்ற ஒன்றிரண்டு பேர் உறங்கு நிலைக்குப்போய் விதிவிலக்காகியிருக்கலாம். ஆனால் ஏனையவர்களிடம் படைப்பியக்கத்தில் திறனோடும் ஆர்வத்தோடும் இயங்கும் முனைப்புக் குறையவில்லை.

நமது சூழலில் இந்தத் தன்மை மிகக்குறைவு. சண்முகம் சிவலிங்கம், முருகையன், சி.சிவசேகரம், தெணியான், மு.பொ, சு.வி, அப்துல்கமது, புதுவை இரத்தின துரை போன்ற வெகுசிலர்தான் தொடர்ந்தியங்குகிறார்கள். சோ.ப, கல்வயல் வே.குமாரசாமி, சாந்தன், எஸ்.கே.விக்கினேஸ்வரன் போன்றோர் அவ்வப்போது எழுதி வருகிறார்கள். ஆனால் மிகக் குறைவு. விமர்சனத்தளத்தில் இயங்கிய கா.சிவத்தம்பி, எம்.ஏ.நுமான் போன்றோர் இப்போது உறங்கு நிலைக்குப் போய்விட்டார்கள்.

அகப்புற நிலைமைகளின் விளைவுகள்தான் இந்தத் தேக்கத்திற்குக் காரணம் எனச் சொல்வோரும் உண்டு.

ஆனால் ஒதுக்கம், உறங்கு நிலை, சோர்வு என்பதெல்லாம் படைப்பாளிகளைச் சூழும்போது படைப்பியக்கம் ஒடுங்கி விடுகிறது; சரிவும் வீழ்ச்சியும் ஏற்பட்டுவிடுகிறது.

புதியவர்கள் வருகிறார்கள். புதிய படைப்புக்கள் வருகின்றன. புதுமைகளும் புதிதளித்தலும் நிகழ்கின்றன. ஆனால் இது மிகச்சிறிய அளவில்தான் விரிந்து செல்லும் அனுபவத்துக்கும் அறிதலுக்கும் வாழ்க்கைக்கும் மதிப்பீடுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் இது போதாது. இவற்றில் புதிய பொருள்களில் புதிய வெளிப்பாடுகளில் புதிய வடிவங்களில் புதுமையுடன் எழுதுவோர், இயங்குவோர் மிகக் குறைவு.

ஈழச்சிறுகதைகளைப் பொறுத்த வரையில் அம்ரிதா ஏயெம், திசேரா, திருக்கோவில் கவியுவன், ஓட்டமாவடி அரபாத் போன்றோரின் அடையாளம் தனியானது. பரிசோதனை-தீவிரம் என்ற இரு திலைச் சூழலில் இவர்களுடைய படைப்புகள் வெளிக்கொள்கின்றன.

ஆனால் பல புதியவர்களால் தினமும் பல கதைகள் எழுதப்படுகின்றன. இவர்களின் படைப் பக்கத்துக்கு ஏற்ற மாதிரி படைப்புச் சிறப்பு இருப்பதில்லை. ஒரு முனைப்போடு எழுதிக்குவிக்கிறார்கள். அவ்வளவு தான்.

வெளிவரும் படைப்புக்கள் பற்றிய மதிப்பீட்டை, விமர்சனங்களை முன்வைக்கும் தன்மை நம்மிடையே இல்லாது போய் விட்டது.

பதிலாக புகழாரங்களும் வாழ்த்துக்களும் பாராட்டுகளும் பெருகி விட்டன. எந்தக் கூச்சமுமில்லாமல் ஒருவரையொருவர் பாராட்டுவதும் புகழ்வதும் தொடர்கிறது. புகழ்வது, பாராட்டுவது என்பதனூடாக அவர்கள் உருவாக்க முனைவது அணிகளையும், குழுக்களையுமே. தங்களுடைய படைப்பின் பலத்தைவிட அதன் சிறப்பைவிட அவர்கள் கூடுதலாக நம்புவது அணிகளையும் தமது குழுக்களையும் தான். அதனால்தான் அவர்களுக்கு அது தேவைப்படுகிறது. அதற்காகத்தான் அணியோடும், குழுவோடும் அவர்கள் சார்ந்திருக்கிறார்கள். அவற்றுக்காக பரிந்துரைக்கிறார்கள்; வக்காலத்து வாங்குகிறார்கள்.


படைப்புத்தரம் பற்றிச் சிந்திப்பதும், படைப்புப்பற்றி விமர்சிப்பதும் விவாதிப்பதும் இன்று வில்லங்கத்துக்குரியது என்ற நிலை. ஒரு சாரார் விமர்சனம் என்றால் புகழ்வது, பாராட்டுவது என்று எண்ணுகிறார்கள். சில இடங்களில் யாரும் தமது படைப்புக்களைத் தாராளமாக விமர்சிக் கலாம் என்று சொல்லுகிறவர்கள் யாராவது விமர்சனத்தை முன்வைத்தால் அதன் சாதகமான பக்கங்களை வரவேற்பார்கள். பாதகமான பக்கங்களை ஏற்பதேயில்லை. அதைக் கண்டனம், தாக்குதல், எதிர்த்தல், குறை சொல்லல் என்று தவறாகப்புரிகிறார்கள். இந்தப் புரிதல் உண்மையில் தவறானது என்று சொல்வதைவிட அங்கே எழுப்பப்பட்ட கேள்விகள், வைக்கப்பட்ட விமர்சனம் என்பவற்றில் தமது படைப்புத் தொடர்பான பல வீனமான அம்சங்கள் மற்றவர்களுக்குத் தெரிந்துவிட்டால் தமது அந்தஸ்துக் கெட்டுவிடும்.

வர்களாகவே இருப்பார்கள். எப்போதும் கலகக்காரர்களாக இருப்பதே அவர்களின் அடையாளம். புகழ்வதும், பாராட்டுவதும் அவர்களைக் கூச்சமடையச் செய்யும். அது வெறுப்பூட்டும் காரியம். புகழ்வோரையும், பாராட்டுவோரையும் அவர்களுடைய உள்மனம் ஏளனத்தோடு கணக்கிடும்; உள்ளே கேலிப்புன்னகை சிதறி விழும்.

கர்ணனுடைய கதைகள் குறித்த மதிப்பீட்டை அல்லது விமர்சனத்தை வைப்போராவது இது குறித்துச் சிந்திக்கட்டும்.

இளைய படைப்பாளிகளை ஊக்குவிப்பது அவர்களுக்கு ஆதரவளிப்பது என்று வெறுமனே பாராட்டுவதால் அவர்கள் படைப்பின் புதிய தளங்களுக்கு நகர்த்த

> பிழைப்புக்கான ஒரு வழிமுறையாக படைப்பைப் பயன்படுத்துவோர் எச் சூழலிலும் விமர்சனத்தை ஏற்க முடியாது. விமர்சனத்தில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் பிம்பங்கள் கலைந்து விடக்கூடும் என்ற பேரச்சத்துக்கு ஆட்படுகிறார்கள். விமர்சனம் என்றால் கண்டனம் என்றும் குற்றம் காண்பது குறை சொல்வது பிழை கண்டுபிடிப்பது என்றும் கருதப்படுகிறது.



இருப்புக்கு அச்சுறுத்தல் என்ற அச்சம் அவர்களுக்கிருக்கிறது.

படைப்பைத் தமது நலனுக்கும் புகழுக்கும் தமது சிறப்பு அடையாளத்துக்குமான ஒரு உபாயமாக, ஒரு கருவியாக பயன்படுத்துவோர் இப்படித்தானிருக்க முடியும்.

பிழைப்புக்கான ஒரு வழிமுறையாக படைப்பைப் பயன்படுத்துவோர் எச்சூழலிலும் விமர்சனத்தை ஏற்கமுடியாது. விமர்சனத்தில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் பிம்பங்கள் கலைந்து விடக்கூடும் என்ற பேரச்சத்துக்கு ஆட்படுகிறார்கள். விமர்சனம் என்றால் கண்டனம் என்றும் குற்றம் காண்பது, குறை சொல்வது, பிழை கண்டுபிடிப்பது என்றும் கருதப்படுகிறது.

ஆக விமர்சனம் என்பது என்ன என்ற புரிதல் சுத்தமாக இல்லையென்றாகி விட்டது. " நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே" என்று சொன்ன தமிழ் மரபு சாதாரண கண்ணுக்கே அஞ்சும் கோழைத்தனத்துக்குள் வீழ்ந்து கிடக்கிறது.

ஒரு பக்கம் பாராட்டு என்றும் ஒரு பக்கம் கண்டனம், குறைகூறல், பிழைபிடித்தல் என்றும் தவறாகப் பார்க்கப்படுகிறது விமர்சனம்.

03

விமர்சனம் இல்லாத சூழலில் நல்ல படைப்புக்களை எதிர்பார்க்க முடியாது. நல்ல படைப்பாளிகள் வெறுமனே அணிகளுள்ளும் வெற்று ஆரவாரங்களுள்ளும் நிற்க முடியாது. சீரிய தளத்தில் இயங்குவோர் சமரசத்திற்கு எதிரானமுடியாது. ப[illegible]ாக தேங்கியே போகிறார்கள். [illegible]து படைப்புக்கள் மூத்தவர்களா[illegible] குறிப்பிடப்படுகிறது, புகழப்படுகிற[illegible] என்பதால் அது பரவாயில்லை; சரியானது தேறி விட்டது என்றவர்கள் நம்பிவிடுகிறார்கள். அந்தப் படைப்பையும் அதற்கான பாராட்டுக்குறிப்புக்ளையும், படிக்கும் வாசகர்களும் மேற்படி படைப்புத்தரமானது என்று கருதுகிறார்கள். இப்படியே பிழையான புரிதல் வளர்ந்து விடுகிறது. பதிலாகப்படைப்புக்கள் பற்றிய குறைநிறைகளைச் சரியாகச் சொல்வதன் மூலம் குறிப்பிட்ட படைப்பாளிகளையும், படைப்புச் சூழலையும், வாசகரையும் மேல் நிலைப்படுத்தவியலும்.

ஒருபடைப்பு வெளிவரும்போது அது பற்றிய அபிப்பிராயங்களைக் கூட சொல்லும் பழக்கம் இல்லாமலாகிவிட்டது. பல படைப்பாளிகள் தங்களின் படைப்பைத்தவிர அல்லது தமக்குச் சார்பானவர்களின் படைப்புக்களைத் தவிர வேறு படைப்புக்களை வாசிப்பது குறைந்துவிட்டது. இந்த நிலையில் எப்படி விமர்சனங்களையும் அபிப்பிராயங்களையும் தெரிவிக்க முடியும்?

புதியவர்களை ஊக்கப்படுத்துவது வளர்த்துவிடுவது என்பதற்காக ஆதரவுக்கரம் நீட்டவேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். அது அவசியமானதே. ஆனால் அதற்கான வழிமுறைகள் வேறு.'

(20 ஆம் பக்கம் பார்க்க)

# தனித்துவமாக இயங்கும் தமிழீழ சட்டக்கல்லூரி

தமிழர்களுக்கு ஒரு தாயகம் என்பது இவ்வுலகில் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. ஏனெனில் தமிழர்கள் இன்று தங்களுக்கென ஒரு எல்லையை வரையறுத்து வைத்திருக்கின்றனர். அதாவது ஒரு நாட்டிற்கான அரசியல் எல்லையுண்டு. அதைவிட தனித்துவமான ஒரு இராணுவக் கட்டமைப்பு மற்றும் பொலிஸ் சிவில் நிர்வாக அலகுகள் நீதிநிர்வாகம் சட்டம் என ஒரு நாட்டிற்கு இருக்கவேண்டிய எல்லா அம்சங்களையும் கொண்டுள்ளது.


இந்த வகையில் தமிழீழ சட்டக் கல்லூரி இன்று தனது செயற்பாட்டினை தனித்துவமான முறையில் கொண்டு நடத்துகின்றது. எமது கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்களுக்கு அமைய சட்டங்களை உருவாக்கி சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாகவும் தனித்துவமான 'முறையில் தனது பணியை முன்னெடுத்துச் செல்கிறது.

இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் தமிழீழ நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திருவாளர் பரா அவர்கள் தரும் விளக்கம் வருமாறு.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை நியாயமான முறையில் தீர்க்கவும் எமது பிரதேசங்களில் சட்டம், ஒழுங்கினைப் பேணவும் என நீதிமன்றங்களை உருவாக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டது. அதற்கு முன் நீதிமன்றங்களில் நீதியாளர்களாகவும், சட்டவாளர்களாகவும் கடமையாற்றுவதற்கு ஏற்றவர்களாக மாற்ற வேண்டியதேவை இருந்தது. இச்சந்தர்ப்பத்தில்தான் சட்டக்கல்லூரியின் தேவை உணரப்பட்டு தமிழீழ தேசியத்தலைவரின் ஆலோசனைக்கு அமைவாக 1991ஆம் ஆண்டு சட்டக்கல்லூரி ஆரம்பிக்கப் பட்டது.

ஆரம்பத்தில் போராளிகளை மட்டும் உள்வாங்கி தனது பணியினை மேற்கொண்டு வந்த சட்டக்கல்லூரி தற்பொழுது அதிலிருந்து முற்று முழுதாக மாறி தனித்துவமான ஒரு சட்டக்கல்லூரியாக தகுதியான அனைவரையும் உள்வாங்கி இயங்குகின்றது.

இங்கு கற்பிக்கப்படுகின்ற சட்டங்களில் ஒன்று எமது நாட்டு கலை கலாச்சாரங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்ற சட்டங்கள், மற்றொன்று சர்வதேச சட்டங்கள். இந்த அடிப்படையில் எமது சட்டக்கல்லூரி யின் கற்கை நெறியினை மூன்று ஆண்டுகளாகப் பிரித்திருக்கின்றோம். இதில் முதலாவது ஆண்டில்



* குற்றவியல் சட்டம் (Criminal low)
* சட்ட மற்றும் ஒழுங்குமுறையின் வரலாறு (History of low and legal system)
* உரோமன் டச்சுச் சட்டம் (Roman dutch Low)
* ஆங்கிலச்சட்டம் (English Low)
* அரசியலமைப்புச் சட்டம் (Constitutionadl low)
* மனித உரிமைகளும் விதிகளும் (Human Righjts and Rules)
* சட்ட ஆய்வு (Juris Pru dence)

போன்ற பாடங்கள் கற்பிக்கின்றன. மேலும் இரண்டாம் மூன்றாம் வருடங்கள் முறையே பின்வரும் பாடங்கள் சட்டக்கல்லூரியினால் கற்பிக்கப்படுகின்றன.

* குடிமக்கள் நடவடிக்கைச் சட்டம் (Civil Procedare code)
* குற்ற நடவடிக்கைச் சட்டம் (Criminal Procedare Code)
* வர்த்தக சட்டம் மற்றும் கணக்கியல் முகாமைத்துவச் சட்டம். (Commercial low, Accountancy and management)
* பொதுவுடமைச் செயற்பாட்டுச் சட்டம். (low of Property Act)
* தேச வழமைச் சட்டம் (low of Thesavalamai)
* குடும்பச்சட்டம் (Family low)




* காவல்துறைச் சட்டம் (Police Act)
* தனிநபர்ச் சட்டம் (Personol Act
* நிலச் சட்டம் (Lant Act
* ஆங்கில மொழி

மூன்றாவது வருடத்தில்:-

* ஆதாரங்கள் சட்டம் (Evidence Act)
* நம்பிக்கைச் சொத்துச்சட்டம் (Low of trust property)
* நிர்வாகச் சட்டம் (Administrative low)
* சர்வதேசச் சட்டம் (International Low)
* சட்ட அதிகாரி உபகரணச்சட்டம் (low of notarial Instruments)
* விற்பனை வரிச்சட்டம் (sales Tax Act)
* நீதிமன்ற மருத்துவமும், குற்றவியலும்,
* ஆங்கில மொழி.


மேற்படி பாடங்களை கொண்ட மூன்று வருட கற்கை நெறியில் ஒவ்வொரு வருடமும் பரீட்சைகள் நடாத்தப்பட்டு மூன்று வருட முடிவில் அப்புள்ளிகள் கூட்டப்பட்டு அதிகபுள்ளிகள் பெற்றோருக்கு சிறப்புப் பட்டங்கள் வழங்கப்படுவதோடு, சித்தியடைந்த ஏனையவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

பெரும்பாலும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருக்கின்ற சட்டக்கல்லூரிகளைப் போன்றே எமது சட்டக்கல்லூரியும் இயங்குகின்றது. இதன் பாடவிதானங்களை வரையறை செய்வதிலிருந்து இதன் குறைநிறைகளை இனம் கண்டு அதற்கேற்ற முறையில் செயற்படுத்தி வருவது இச்சட்டக்கல்லூரியில் ஒன்பது பேர் கொண்ட குழு இதில் நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் அடங்கலாக தலைமை நீதிபதிகள் என பலர் அங்கம் வகிக்கின்றனர்.

> தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை நியாயமான முறையில் தீர்க்கவும் எமது பிரதேசங்களில் சட்டம் ஒழுங்கினைப் பேணவும் என நீதிமன்றங்களை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதற்கு முன் நீதிமன்றங்களில் நீதியாளர்களாகவும் சட்டவாளர்களாகவும் கடமையாற்றுவதற்கு ஏற்றவர்களாக மாற்ற வேண்டிய தேவை இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் தான் சட்டக்கல்லூரியின் தேவை உணரப்பட்டு தமிழீழத் தேசியத்தலைவரின் ஆலோசனைக்கு அமைவாக 1991ஆம் ஆண்டு சட்டக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

இவர்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடி சட்டக் கல்லூரியின் எதிர்காலம் பற்றியும் அதன் நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கின்றனர். இவ் சட்டக்கல்லூரியினை இக்குழுவே மேற்பார்வை செய்து வருகின்றது. இச் சட்டக் கல்லூரிக்கு என ஒரு பொறுப்பாளரும் அதன் கீழ் சட்டக் கல்லூரி அதிபரும் என நிர்வாகக் கட்டமைப்பு காணப்படுகின்றது.

இங்கு விரிவுரைகளை வெளியிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் மற்றும் தேர்ச்சிபெற்ற நீதியாளர்கள் சட்டவாளர்கள் என பலரால் விரிவுரை செய்யப்பட்டு வருகின்றது.



இந்த சட்டக்கல்லூரியின் தரம் ஏனைய சட்டக்கல்லூரிகளோடு ஒப்பிடக்கூடியவகையில் எமது பாடப்பரப்புகளை ஒழுங்கமைத்து செயற்படுத்தி வருகின்றோம். அத்தோடு நீதி நிர்வாகத்துறையின் சட்டவாளர்ச் செயலகத்தால் தேவைக்கேற்ப ஏழு பேர்கொண்ட குழுவினால் சட்டம் உருவாக்கப்பட்டு தேசியத்தலைவரின் ஒப்புதலின் பேரில் நடைமுறைக்கு வருகின்றது. இதனை நாமும் எமது சட்டக்கல்லூரியின் பாடவிதானத்திற்குள் சேர்த்துக்கொள்கின்றோம்.

எமது சட்டக்கல்லூரியில் கற்று வெளியேறுகின்றவர்கள் எமது பிரதேசத்தில் சட்டவாளர்களாக கடமையாற்ற விரும்பின் எங்களது நீதிமன்றத்திற்கு விசுவாசமாகவும், தலைவருக்கு நம்பிக்கைக்கு உரியவராகவும் உறுதிப்பிரமாணம் எடுத்துக் கொண்ட பின் கடமையாற்றுகின்றனர்.

வெளி மாணவர்கள் தங்களது ஒரு வருட பயிற்சிக்காலம் முடிந்த பின்னர் எமது நீதிமன்ற ஒழுங்கு விதி முறைகளுக்கு அமைய அவர்களும் சட்டவாளர்களாக வேலை செய்யலாம்.

இன்று வரை நான்கு பிரிவு 'மாணவர்கள் வெளியேறி இருக்கின்றனர். ஒவ்வொரு பிரிவிலும் சராசரி 25 மாணவர்கள் வீதம் வெளியேறி உள்ளனர். இதில் அதிகமானவர்கள் சட்டவாளர்களாக வேலை செய்கின்றனர். இதில் இரண்டு பிரிவு மாணவர்கள் போராளிகளை மட்டும் கொண்டு வெளியேறியுள்ளனர்.

இதைவிட வெளிவாரியாக க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்திய டைந்தவர்களை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. தற்சமயம் வெளிவாரியாக 90 மாணவர்கள் கற்று வருகின்றனர்.

இங்கு பரீட்சைகள் பல்கலைக்கழக பரீட்சைகள் முறைப்படியே முடிவுகள் கணிக்கப்படுகின்றன. பாடங்களில் E பெறுபேறு பெற்ற பாடங்கள் அனைத்தும் திருப்பி எடுக்கவேண்டும். சில வேளைகளில் கூடுதலான பாடங்களுக்கு E பெறுபேறு பெற்றிருந்தால் அவர் அக்காலத்திற்குரிய எல்லாப் பாடங்களையும் திருப்பி எடுக்க வேண்டும். ஆனால் இங்கிருந்து வெளியேறுகின்றபோது முழுமையான , சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இதை விட இங்கு வைக்கப்படுகின்ற ஆங்கிலப் பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அவசியம். மேலும் சட்ட கற்கை நெறியை பூர்த்தி செய்து வெளியேறும் போது ஒருவர் சட்டம் சம்பந்தமான ஆய்வு நூல் ஒன்றை சமர்ப்பிக்கவேண்டும். அதன் பின்பே அவருக்கு பட்டம் வழங்கப்படும்.

எனச் சட்டக்கல்லூரி தொடர்பாக தனது விளக்கங்களை பகிர்ந்து கொண்டார் திருவாளர் பரா அவர்கள். தமிழீழ சட்டக் கல்லூரி இன்று தனது பணியினை திறம்படச் செய்து வருகின்றது. பேரினவாதிகளின் அடக்கு முறைகளுக்குள் அகப்பட்டு நீதி நியாயங்கள் இன்றி ஒடுக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதி நிர்வாகத் துறையின் செயற்பாடு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**சுழியன்**




# கி.பி.1 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு

தமிழகம் போல் ஈழத் தமிழர் தாயகத்திலும் பிராமிப்பாறைக் கல்வெட்டுகள் உள்ளன.பிராமி என்பது ஒரு கல்வெட்டு எழுத்து வரிவடிவம்.இந்த வரிவடிவம் இந்தியாவிலும் இலங்கையிலும் கி.பி நான்காம் நூற்றாண்டு வரை இருந்தது.

இதனை வரலாற்றுப் பேராசிரியர் சி.பத்மநாதன் தெரிவிக்கிறார்.

இலங்கை முழுவதிலும் கி.பி.1ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 1500 கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.இவற்றில் தமிழர்தாயகத்தில் உள்ள கல்வெட்டுகளும் அடங்குகின்றன. தென்னாசியாவில் இத்துணை தமிழகத்திற்கும் இடையிலான பாரம்பரிய வரலாற்றுத்தொடர்பை மறந்த நிலையில் இலங்கைப் பிராமிக்கு வடபிராமி எனப்பெயரிட்டு சிங்கள மக்களின் மூதாதையினர் வடஇந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்ததற்கு இக்கல்வெட்டு எழுத்தை சான்றாகக் காட்டியுள்ளார்.அத்துடன் கல்வெட்டுகளுக்குரிய பிராகிருத மொழியை சிங்கள மொழியின் பழைய வடிவம் எனவும் இவை காணப்படும் இடங்களில் சிங்கள மக்களே வாழ்ந்தனர் என்றும் நியாயப்படுத்தினார்.இதன் மூலம் இலங்கை முழுவதும் முன்பொருகாலத்தில் சிங்கள மக்களே வாழ்ந்தனர் என்ற கருத்தையும் ஏற்படுத்தியுள்ளார்' என்கிறார்.

இதற்கு மாறாக



தமிழர்தாயகத்தில் அதிகம் திருகோணமலை மட்டக்களப்பு, அம்பாறைப்பகுதிகளிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதற்கான அடிப்படைக்காரணம் அங்குதான் அதிகம் பாறை மலைகளும் மலைக்குகைகளும் காணப்படுகின்றன. இந்தக்கட்டுரை கல்வெட்டுகள் பற்றிய அறிமுகமே தவிர ஆய்வல்ல என்பதை இந்த இடத்தில் நினைவூட்டித் தொடர் வோம்.

வன்னியில் அல்லது வடபகுதியில் பெரியபுளியங்குளம் கல்வெட்டு,நெடுங்கேணி குறிசுட்டகுளம் மலைக்கல்வெட்டு, நாவல் நீராவிமலைக் கல்வெட்டு, தாண்டவன் புளியங்குளம் மலைக்கல்வெட்டு என்பன உள்ளன.

நூவல் நீராவிமலை வவுனியாவின் எல்லைப்பகுதியில் உள்ளது.இதன் கல்வெட்டு 1886ல் ஆங்கிலேய உதவி அரச அதிபரான பு.ஆ.பௌலர் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.இது ஒரு பௌத்தமத சாசனம்.

இதைவிட வவுனியாவில் இப்பொழுது சிங்களக் குடியேற்றமாக உள்ள கச்சைக்கொடிக் கல்வெட்டு. இது வவுனியாவின் கிழக்குப்பகுதியில் உள்ளது. வடபகுதியில் முக்கிய கல்வெட்டாக பெரியபுளியங்குளம் கல்வெட்டே காணப்படுகின்றது.

அதிக கல்வெட்டுகள் வேறு எங்கும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த பிராமிக்கல்வெட்டு வாசிப்பில் சிங்கள சாசன வாசிப்பாளரான பரணவிதான ஈடுபட்டார். அவரின் வாசிப்பு சிங்களம் சார்ந்ததாகவே உள்ளது.அந்த வாசிப்பில் உண்மைத்தன்மைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.இதனால் தமிழர் தாயகக் கல்வெட்டுகள் வாசிப்பில் உண்மைத்தன்மை இல்லாத நிலைமை உள்ளது.

இவரின் வாசிப்புப்பற்றி வரலாற்றுத்துறை விரிவுரையாளர் கலாநிதி ப.புஸ்பரட்ணம் தெரிவிக்கையில் 'இலங்கைக்கும் இலங்கையில் வடபிராமி தவிர தமிழ்ப்பிராமிக்கல்வெட்டுகளும் இருக்கின்றன.தமிழர் தாயகத்தில பாறை அல்லது மலை அல்லது குகைக்கல்வெட்டுகள் 1855 முதல் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.ஆரம்பத்தில் ஆங்கிலேயர்களே அதிகம் இந்தக்கல்வெட்டுகளை கண்டு பிடித்து ஆராய்ந்தனர்.

குறிப்பாக ஆங்கிலேய நீர்ப்பாசனப்பொறியியலாளர் ஏச்.பாக்கர் அதிகம் கல்வெட்டுகளை கண்டு பிடித்தார்.வன்னியில் இந்தக் கல்வெட்டுகளை அவரே கண்டு பிடித்திருக்கிறார்.

இந்தக் கல்வெட்டுகள்

திருகோணமலையில் தம்பலகாமம், திரியாய், தென்னமரவடி, விலகம்விகாரை, பூநகர் கல்வெட்டுகள் முக்கியமானவை.மட்டக்களப்பில் குடும்பிமலை கல்வெட்டு,நவக்கிரி கல்வெட்டு,கல்குடா கல்வெட்டு, காத்தான்குடிக் கல்வெட்டு என்பன முக்கியமானவை.இவை தவிர திருகோணமலை வெருகல் மாவடிச்சேனை கல்லடி மலை கல்வெட்டும் குறிப்பிடத்தக்கது.

குரலோன்

---


(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்கள் ராமேஸ்வரப்பகுதியை ஆண்ட மன்னனால் அமோகமான விருந்துபசாரங்களினால் கௌரவிக் கப்பட்டே பருத்தித்துறைக்கு அனுப் பப்பட்டிருந்தார்கள். (அந்நியர்கள் என்ன நோக்கத்திற்காக, எப்படி உள்நுழைகிறார்கள் என்று எதுவித சிந்தனையுமின்றி 'வெள்ளை'யை மெச்சி நின்ற அந்த தமிழ்மன்னனின் ஏமாளித்தனத்தைப் பார்த்தீர்களா ? எங்களை அடிமைகொள்ள வந் தவருக்கு அயலார்வீட்டில் ஆராத் தியும், ஆனந்த உபசாரமும் !!). தீவிற்கு வந்துவிட்ட போதும் வந்த விடயத்தை எளிதிலே முடித்துவிட முடியவில்லை. கொழும்பிலிருந்த கவர்ணர் வான் அங்கில்பீக் எந்த ஆங்கிலேயனும் கேணல் டெ மொய் றோனை நேருக்குநேர் சந்திப்பதை அனுமதிக்கவில்லை. இதன் காரணமாக வெவ்வேறு தந்திரங் களைக் கைக்கொண்டு உள்நுழைந்த கிளேக்ஹோண், கைமாற்றம் குறித்த உத்தியோகபூர்வக் கடிதத்தை ரகசிய மாக டெ மொய்றோனிற்குக் கிடைக்க வழி செய்தார். அதைத் தொடர்ந்து சிறியளவு இழப்புடன் இலங்கையி லிருந்த டச்சு மேலாதிக்கம் பிரித்தா னியரின் கைகளுக்கு மாறியது. இங்கிருந்த படையணிகள் யாவும் இந்தியாவிலுள்ள பிரித்தானியக் கட்டளையகத்திற்கு உட்படுத் தப்பட்டன. இந்தளவு கைங்கரியங் களும் '1796 இல் பிரித்தானியர் ஒல்லாந்தரை வெற்றிகொண்டு இலங் கைத்தீவினை தமது ஆட்சிக்குக்கீழ் கொண்டு வந்தனர்' என்ற ஒற்றை வாக்கியத்தகவலால் ஈடுசெய்யப்படக் கூடியனவா ? அது மட்டுமல்ல இலங் கைக்கான பிரிட்டனின் முதலாவது கவர்ணர் பிரெட்றிக் நோர்த் இற்கான தலைமைச்செயலர் ஆகவும் 1798 இல் கிளேக்ஹோண் நியமிக்கப்பட் டார். 1831ஆம் ஆண்டிலே தமிழ கத்தில் முதலாவது Madras College I நிறுவியவரும் இவரே ! இருந்த போதும் தனது சொந்தநாட்டிலேயே கற்பித்தலில் ஈடுவதைத் தவிர்த்து, பிரித்தானிய அரசுக்கான உளவு முகவராக இருப்பதையே விரும்பிய இவர், அது அடிமை கொண்ட நாடொன்றில் சமூகத் தொண்டாற்றும் (?) நோக்கில் கல்லூரி ஒன்றை நிறுவியிருப்பாரா அல்லது பெரிய பிரித்தானியாவிற்கு விசுவாசத்துடன் செயற்படக்கூடிய சுதேசியர்களைக் கொண்ட முகவர் வட்டமொன்றை உருவாக்கி விடும் திட்டத்தைக் கொண்டிருந்தாரா என்று பரவலாகவே சந்தேகிக்கப்படுகின்றது.

வெற்றிகளும், தோல்விகளும் நிறைந்த வரலாற்று நிகழ்வுகள் வெறுமனே செய்தித்தரவுகள் மட்டுமல்ல. அவை (சிலவேளைக ளில் மறைக்கப்பட்ட) பின்னணியில் இடையறாத பல முயற்சிகளுடைய தொடர்ச்சியின் வெவ்வேறு கட்டங்க ளாகும். நாமும் நமது இனத்தின் வரலாற்றை, வாழ்வாதாரத்தைத் தீர்மானிக்கும் மிக முக்கியமானதொரு காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டி ருக்கிறோம். மற்றைய நாடுகள் நம்மை அடிமை கொள்வதற்கு எடுத்த கடும் முயற்சிகள் பற்றிப் பார்த்தி ருந்தோம். அப்படியானால் நாம் எம்மைப் பாதுகாப்பதற்கு எவ்வா றெல்லாம் சகல மட்டங்களிலும் கடும் பிரயத்தனங்கள் செய்தாக வேண்டும் என்று புரிகிறதல்லவா ! வழிகாட்டு வதற்கு ஆயிரியங்கள் காணாத அரிய வாய்ப்பாய் தலைவன் ஒருவன் வாய்த் திருக்க, தலைநிமிர்வதற்கு இன்னும் என்ன தயக்கம் ! !

---

1998ஆம் ஆண்டு நெடுந்தீவு மாவலித்துறையில் ஈ.பி.டி.பி தேசவி ரோதிகள் முகாமில் தம்மை அசைக்கமுடியாது என்று இறுமாந்திருந்தனர். இதற்கு வேட்டுவைக்கும் வகையில் அன்று விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்துவதற்காக படகு ஒன்றில் வந்து மாவலித்துறைக்கு அருகாக தரையிறங்கினர். இருளாடு இருளாக நகர்ந்து வந்து காலைவேளை அந்த முகாம் மீது திடீர்த்தாக்குதலை நடத்தினர்.அந்தத் தாக்குதலால் நிலைகுலைந்த ஈ.பி.டி.பியினர் அங்கிருந்து ஓடத்தொடங்கினர். அவர்களின் முகாம் எரியூட்டப்பட்டது. அவர்களில் இருவர் கொல்லப்பட்டனர். தாக்குதலை விடுதலைப்புலிகள் நடத்தியவேளை அவர்களுக்கு உதவ உடனடியாக சிறிலங்கா கடற்படையினர் வரவில்லை. அவர்களால் உடனடியாக வரவும் முடியாது. ஏனெனில் அந்த தனித்த ஆழ்கடலில் கடற்புலிகளிடம் தாம் மாட்டிக்கொண்டால் தப்பமுடியாது என்ற பயம்தான்.




## ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

அதனால் அவர்கள் தப்பித்துக்கொள்ளமுடியாது மக்கள் குடியிருப்புகளை நோக்கி ஓடினர். அந்தத் தாக்குதலின் பிறகுதான் மாவலித்துறை விடுதலை பெற்றது. ஆம் அங்கிருந்து ஈ.பி.டி.பியினர் மக்கள் குடியிருப்புகள் உள்ள இடங்களில் முகாம் அமைத்தனர்.அப்போது தமது துணைப்படையான ஈ.பி.டி.பியினர் அங்கு தமக்குப்பதிலாக நிலைகொள்ளவேண்டும் என்பதற்காக அடுத்தடுத்த நாட்களில் சிறிலங்கா கடற்படையினர் நெடுந்தீவில் நிலை கொண்டனர். ஒருமாத காலமளவில் நிலைகொண்ட அவர்கள் பிறகு அச்சம் மிகுந்தவர்களாக அங்கிருந்து நயினாதீவுக்குச் சென்றுவிட்டனர். இதற்கிடையில் நெடுந்தீவில் போராளி ஒருவர் காட்டிக்கொடுப்பவன் ஒருவனால் உணவளிப்பதாக அழைத்துவந்து கொல்லப்பட்ட சம்பவம் நடந்தது. அதேபோல் புங்குடுதீவிலும் இவ்வாறு போராளி ஒருவர் காட்டிக்கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டார். இந்த துரோகிகளுக்கு அடி கொடுக்கும் வகையில் புங்குடுதீவில் தேசத்துரோகிகளின் முகாம் விடுதலைப்புலிகளால் தாக்கியழிக்கப்பட்டது. 1998 சனவரி 23ஆம் திகதி புங்குடுதீவு ஈ.பி.டி.பி முகாம் தாக்கப்பட்டது.

இதில் அந்த முகாம் அழிக்கப்பட்டது.இதில் 9 ஈ.பி.டி.பியினர் கொல்லப்பட்டனர். அவர்களில் எட்டுப்பேர் அப்போது நடைபெறவிருந்த உள்ளூராட்சி தேர்தலில் ஈ.பி.டி.பியினரால் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்ட வர்களாவர். இந்தத் தாக்குதல் புங்குடுதீவில் அவர்களின் அட்டகாசத்தை குறைத்தது. நெடுந்தீவில் அட்டகாசத்தை ஒரு அளவுக்கு மட்டுப்படுத்தியது.

ஈ.பி.டி.பி தேசவிரோதிகளின் பிடியிலிருந்து மாவலித்துறை விடுதலைபெற்றதன்மூலம் குமுதினியும் வதை முகாமாக இருந்து விடுதலைபெற்றது. அதன் பின் குமுதினி திருத்[illegible] பெற்று மீள போக்கு வரவில் ஈடுபடத்தொடங்கியது.இதற்கிடையில் 2000[illegible] ஆண்டு காரைநகர் சிறிலங்கா கடற்படைத்தளத்தை அதிகம் பல[illegible]டுத்தும் நோக்கில் கடற்கோட்டை முதல் ஊர்காவற்றுறைவரையா[illegible] கடற்பகுதியை அதிஉயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தி அங்கு பயணிகள் படகுகள் வருவதை சிறிலங்கா கடற்படை தடைசெய்திருந்தது.ஆனால் அந்தப்பயணிகள் லோஞ்சுகள் புங்குடுதீவின் குறிகாட்டுவானுக்குச் செல்லவும் சிறிலங்கா கடற்படைதடை செய்திருந்தது. இந்த நிலையில் மக்கள் லோஞ்சுகள் செல்ல இறங்குதுறை தேவைப்பட்டது.

ஊர்காவற்றுறையில் கரம்பன் என்ற கிராமத்தின் கடற்கரையில் பழைய கண்ணகை அம்மன்கோயில் ஒன்று இருக்கின்றது.ஆண்டாண்டு பொங்கல் மூலம் மட்டும் இது அறியப்பட்டிருந்தது.அந்த இறங்குதுறை ஈ.பி.டி.பி தேசவிரோதிகளின் பயன்பாட்டில் இருந்து வந்தது.கடற்படை தனது பாதுகாப்புக்காக ஈ.பி.டி.பியினரையும் கூட எப்பொழுதும் தனது தளங்களுக்கருகில் இருக்கவிடுவதில்லை.அவர்களை அந்த விடயத்தில் கடற்படை எட்டவே வைத்திருந்தது.இதனால் தான் ஈ.பி.டி.பியினருக்கு கண்ணகை அம்மன் கோயிலடியில் இறங்குதுறையை அமைக்க அனுமதித் திருந்தது.ஊர்காவற்றுறை இறங்குதுறைக்கு லோஞ்சுகள் நுழைவதற்கு தடை விதித்த கடற்படை லோஞ்சுகளை அணைப்பதற்கான துறையாக கண்ணகை அம்மன்கோயில் துறையை தெரிவு செய்து அங்கு தமது பெரிய முகாமை அமைத்து ஈ.பி.டி.பியை வெளியேற்றிவிட்டு தாம் அங்கு நிலைகொண்டனர்.ஆனால் ஈ.பி.டி.பியினர் மக்களுக்கு தாம் அமைத்துக் கொடுத்த இறங்குதுறை என்ற அரசியல் நாடகத்தை அரங்கேற்றினர்.அது அப்படி அல்ல. சிறிலங்கா கடற்படை மக்களின் இறங்குதுறையை அபகரித்த வசதியற்ற ஆழமற்ற இந்தத் துறையை தயார் செய்து கொடுத்துள்ளது.இதுதான் உண்மை. இந்த நிலையில் குமுதினியும் ஆழமற்ற இந்த இறங்குதுறைக்கு போக்குவரவு செய்ய ஆரம்பித்தது. ஆழமற்ற காரணத்தால் குமுதினி அடிக்கடி போக்குவரவில் ஈடுபடமுடியாத நிலைமை காணப்பட்டது. 2002 வரை இந்த அவலமே காணப்பட்டது.2002 போர்நிறுத்த உடன்பாடு வந்தபின்னர்தான் குறிகாட்டுவான் இறங்கு துறையை சிறிலங்கா கடற்படை போக்குவரவுக்குத் திறந்துவிட்டது. அந்த உடன்பாட்டின் பிறகும் குமுதினி அடிக்கடி பழுதடைந்து போக்குவரவில் ஈடுபட்டுக்கொண்டுதான் இருக்கின்றது.அந்த மிதக்கும் போர்நினைவுச் சின்னம் தமிழரால் பாதுகாக்கப்படவேண்டிய அரும்பொருளாகும்.

'அது மிதக்கும் ஒஸ்ட்விச்'..

'இது குமுதினியின் கதை'

துருவன்

# இந்தியர்களுக்குப்பிடித்த கிரிக்கெட் -ஜோன் ரைட்



கடந்த 2000 மாவது ஆண்டில் இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராகச் சேர்ந்தார். இவரது வருகை இந்திய அணியில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

வரிசையாக வென்று கொண்டே... வந்த அவுஸ்திரேலிய அணிக்கு 2001 இல் இந்திய அணி கடிவாளம் போட்டது என்றால், இவரும் அதற்குக் காரணம். உலகக் கோப்பைத் தொடரின் இறுதிப் போட்டிவரை முன்னேறியது, பாகிஸ்தான் அணியை அவர்கள் மண்ணில் வைத்தே வீழ்த்தியது என இந்திய கிரிக்கெட்டுக்கு ஜோன் ரைட் அளித்த பங்களிப்பு சாதாரணம் அல்ல.

ஐந்தாண்டுகள்... அருமையாகப் பயிற்சியளித்து விட்டு, விடை பெற்றுவிட்டார் ஜோன் ரைட். இனி குடும்பத்தினருக்கு அதிகக் காலம் ஒதுக்கப் போகிறாராம். இவருக்கு நிகரான புதிய பயிற்சியாளருக்கு வலை விரித்து வைத்திருக்கிறது இந்திய கிரிக்கெட் போட்டி.

பாகிஸ்தானுக்கு எதிரான டில்லி போட்டிதான் இந்திய அணி பயிற்சியாளராக இவரது கடைசிப் போட்டி. நிறைய சாதித்தாலும் கடைசித் தொடர் தோல்வியில் முடிந்தது ஏமாற்றம்தான் நியூசிலாந்து கிளம்பும் முன்னதாக ஜோன் அளித்த பேட்டியில்

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை ஜெயிக்கமுடியாதது ஏமாற்றம்தானே எனக் கேட்டபோது;

நிச்சயமாக ஆனால், விளையாட்டில் வெற்றி, தோல்விகள் சகஜம் என்பதை மறக்கக்கூடாது. ஒரு நாள் தொடர்களில் இன்னும் அதிகக் கவனம் செலுத்த வேண்டியிருகிறது.

மோசமான ஆட்டத்துக்கு என்ன காரணம் என்பதைத் தேர்வுக்குழுதான் கண்டுபிடிக்க வேண்டும். ஆனால் அதிக மாற்றங்கள் தேவையில்லை என்பது என் கருத்து. இந்திய அணியில் திறமைக்குப் பஞ்சமே இல்லை. சகல திறமையும் கொண்ட வீரர்கள் இங்கு இருக்கிறார்கள் இந்திய அணிக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. அடுத்த 2007 உலகக் கோப்பைத் தொடரில் இந்தியா சாதிக்கும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது.

இந்திய அணியின் பயிற்சியாளராக பொறுப்பு வகித்தது எனக்குக் கிடைத்த மிகப் பெரிய கௌரவம். வீரர்கள், நிர்வாகிகள் அனைவரும் எனக்கு நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தனர். குறிப்பாக, மூத்த வீரர்கள் எந்தப் பிரச்சினையும் இன்றி என்னுடன் பணியாற்றினார்கள். இப்படிப்பட்ட வீரர்களுடன் பணியாற்றியது... உண்மையிலேயே நான் அதிர்ஷ்டசாலிதான்.

என் குடும்பத்தினருடன் எனக்கு நிறைய வேலை இருக்கிறது. தவிர, ஐந்தாண்டு காலம் இந்திய கிரிக்கெட் வீரர்களுடன் பழகிய இனிய அனுபவங்களை தொகுப்பாக வெளியிடும் ஆசையும் மனதின் ஓரத்தில் இருக்கிறது.

# கோடி கோடியாய்...



கிராண்ட் சிலாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி வருகிற ஜுன் மாதம் 20 ஆம் திகதி முதல் ஜுலை 3 ஆம் திகதி வரை லண்டனில் நடக்கிறது.

இந்தப் போட்டிக்கான பரிசுத் தொகை கடந்த ஆண்டை விட 3.9 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதாவது 86.85 கோடி ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப்படுகின்றது.

# ரிட்லி ஜேக்கப் ஓய்வு பெறுகிறார்

வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணியின் முன்னணி விக்கெட் கீப்பராகவும் சகல துறை ஆட்டக்காரராகவும் திகழ்ந்தவர் ரிட்லி ஜேக் கப்ஸ் 37 வயதான ஜேக்கப்ஸ் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

65 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள ஜேக்கப்ஸ் 207 பிடிகளையும் 12 முறை ஸ்டம்பிங்களையும் செய்து உள்ளார். மேலும் அவர் 2,577 ஓட்டங்களையும் அடித்து உள்ளார். ஜேக்கப்ஸ் 147 ஒரு நாள் போட்டிகளிலும் ஆடியுள்ளார்.



# இலட்சங்கள் கோரும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை

இந்திய சுற்றுபயணத்தில் கூடுதலாக ஒரு ஒரு நாள் போட்டி விளையாடியதால் இந்திய கிரிக்கெட் போர்ட் 21 லட்சம் தர வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் போர்ட் கேட்டுள்ளது.

சமீபத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது முதலில் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டி நடத்துவதாகத்தான் ஒப்புக்கொள்ளப்பட்டது பின்னர் கூடுதலாக ஒரு நாள் போட்டி அகமதாபாத்தில் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது. இதனால் இந்திய கிரிக்கெட் போர்ட் பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டுக்கு 21 லட்சம் தரவேண்டும் என பாகிஸ்தான் கேட்கும் என தெரிகிறது.

இந்தியா அடுத்தமுறை பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்யும்போது இதேபோல் கூடுதலாக ஒரு நாள் போட்டியை நடத்தி கொள்ளலாம் என்ற இந்திய கிரிக்கெட் போர்டின் வேண்டுகோளையும் பாகிஸ்தான் கிரிக்கெட் போர்ட் நிராகரித்துள்ளது. இந்திய பாகிஸ்தானிடையே உள்ள சூழ்நிலை சர்வதேச பாதுகாப்பு இந்த பிரச்சினைகளால் தற்போது பாகிஸ்தானில் இந்திய சுற்றுப்பயணத்துக்கு வாய்ப்பில்லை யென்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் போர்ட் தெரிவித்துள்ளது. எனவே சர்வதேச விதிமுறைகளின்படி கூடுதலாக நடத்தப்பட்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டிக்கு பங்கு தொகையாக 21 லட்சம் ரூபாய் கேட்பதை தவிர வேறு வழியில்லை எனவும் பாகிஸ்தான் கிரிக்கெட் போர்ட் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் முடித்தகையோடு பாகிஸ்தான் அணி இந்தியாவில் சுற்றுப்பணம் மேற்கொண்டது. அதற்கு முன்பாக ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியிலும் பாகிஸ்தான் விளையாடியது. இந்தியா, பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தில் கூடுதலாக ஒரு நாள் போட்டியில் ஆடினால் அது வரவேற்கத்தக்கது. இதற்கு உலகம் முழுவதுமுள்ள ரசிகர்களுடைய நல்ல வரவேற்பு இருக்கும். தொலைகாட்சிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். எனவே இந்தியாவுக்கு கூடுதலாக பணம் கொடுக்க முடியும். தற்போது கூடுதலான போட்டிக்கு இந்திய கிரிக்கெட் போர்ட் பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டுக்கு பணம் தரவேண்டும். இவ்வாறு பாகிஸ்தான் கிரிக்கெட் போர்ட் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்திய சுற்றுப்பயணத்தில் ஒரு நாள் தொடரை 4-2 என்ற கணக்கில் பாகிஸ்தான் வென்றது குறிப்பிடத்தக்கது.

# வளரும் நட்சத்திரங்கள்

நாளைய வானத்தை அலங்கரிப்பன நாளை தோன்றும் நட்சத்திரங்களே. அது போன்று நாளைய கிரிக்கெட் மைதானத்தை அலங்கரிக்கப்போபவர்களும் மலர்ந்து வரும் நட்சத்திரங்களே.

அந்த வகையில் ஆசியாவில் இருந்து வெளியாகும் கிரிக்கெட் சஞ்சிகையான விஸ்டன் தனது புதிய வெளியீட்டில் 21 வயதுக்குட்பட்ட சில கிரிக்கெட் நட்சத்திரங்களை இனம் கண்டுள்ளது.

அந்த வரிசையில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மொய்சஸ் ஹென்ரிகஸ் முதலிடத்தைப் பெறுகின்றார். அவுஸ்திரேலியாவின் கிரிக்கெட் பயிற்சிக்கல்லூரி உருவாக்கி தந்துள்ள இவ் வீரர் 18 வயதான போர்த்துக்கல் நாட்டை சேர்ந்தவராவார். தனது ஒன்பதாவது வயதிலேயே நண்பர்களுடன் கிரிக்கெட் ஆட்டத்தில் ஈடுபட்ட இவர் ஆறு அடி இரண்டு




அங்குல உயரத்தைக் கொண்டவராவார். இவர் அனுபவமுள்ள பழம் பெரும் வீரர்களுடன் ஒப்பிடக் கூடிய பந்து வீச்சாளராவார். சிட்னியில் நடைபெற்ற போட்டியொன்றில் ஒரு இன்னிங்சில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்தி சரித்திரம் படைத்துள்ளார். சகல துறை வீரரான இவரின் அபிமான கிரிக்கெட் வீரர் ஜக்கலிஸ் ஆவார். அதே நாட்டுக்காக ஆடும் ஜோனாதன் வெல்ஸ் பிரபல இளம் துடுப்பாட்ட வீரராக உருவெடுத்து வருகிறார். 16 வயதான இவர் அடுத்த மாதம் இங்கிலாந்தில் நடைபெறும் அவுஸ்தொடரில் பங்குபற்ற ஆவலுடன் காத்திருக்கிறார்.

அடுத்ததாக இந்தியாவைச் சேர்ந்தவரும் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இணைந்துள்ள வேகப்பந்து வீச்சாளருமான ரவிராம் போல் என்பவரும் இப்பட்டியலில் இணைத்துள்ளார்.20 வயதான இவரின் வேகம் 90 மைல்களாகும். தற்போது 17 சர்வதேசப் போட்டிகளில் இவர் பங்கேற்றுள்ளார். மேலும் ஒரு தென்னாபிரிக்க வீரரான 18 வயது சேவியர் மார்ஷல் கடந்தவருடம் நடைபெற்ற 19 வயது உலகக்கிண்ணப் போட்டித் தொடரில் அதிக ஓட்டங்களை (331) பெற்ற வீரர் என்ற பெருமையை பெறுகிறார். அதே அணியில் பிரான்சிஸ் இன்குனா எனும் 18 வயதுடைய வேகப்பந்து வீச்சாளர் அணியில் இடம் தேடுகிறார். இவரது பந்துவீச்சு வேகம் 150 கிலோ மீற்றராகும். அதே அணியில் விக்கெட்காப்பாளராகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் டிவில்லியர்ஸ் மிளிர்கிறார் தற்போது மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிராக அவர் தனது முதல் சதத்தைப் (178) பெற்றிருக்கிறார்.

அடுத்ததாக சென்ற வருடம் சர்வதேச கிரிக்கெட் சபையால் வளர்ந்து வரும் வீரராக இனம் காணப்பட்டு விருது வழங்கப்பட்டவர் 20 வயதான இந்தியாவின் இர்பான்பதான் ஆவார். இடது கை பந்து வீச்சாளராகவும் துடுப்பாட்ட வீரராகவும் இவர் வளர்ச்சிபெற்று வருகின்றார். அதே நாட்டைச் சேர்ந்தவர்களான இடது கை துடுப்பாட்ட வீர்கள் ஷிகர் டோன், சுரேஷ் றெயினா ஆகியோரும் போட்டிகளுக்காகக் காத்திருக்கின்றனர்.

பாகிஸ்தானின் வளர்ந்து வரும் இளம் துடுப்பாட்ட வீரராக சல்மான் பட் இனம் காணப்படுகிறார். புதிய சுழல் பந்து விச்சாளராக தாரிக் மெக்மூத் என்னும் 19 வயது இளஞர் முன்னணி வகிக்கிறார். இவர் 19 வயது உலகக் கிண்ணப் போட்டிகளில் 18 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அதனைவிட டெஸ்ட் தரவரிசையில் மிகவும் பின்தங்கியிருக்கும் பங்களாதேஷ் அணியில் மொகமட் அஷ்ரபுல் சகல துறை ஆட்டக்காரராக வலம் வருகிறார். சிறிலங்காவுக்கெதிராக அவர் பெற்ற சதம் உலக டெஸ்ட் வரலாற்றில் இளம் வீரர் பெற்ற சதமாகும். இங்கிலாந்தில் இளம் துடுப்பாட்ட வீரர் ஸ்ரீபன்டேவிஸ் மற்றும் பாடசாலை மட்டப்போட்டகளில் விக்கெட்காப்பாளராக றொட்னி மார்ஷ் சிறந்து விளங்குகின்றனர்.

சிறிலங்காவைப் பொறுத்தவரை பர்விஸ் மக்ரூப் சிறந்த வளர்ந்துவரும் சகல துறை வீரராகவுள்ளார்.

சம்பத்



# பொருண்மிய வாசல்

## எங்கள் மண்ணின் மாண்பு

சிதம்பரதிரு

கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. எல்லா இடங்களிலும் மழை பெய்தாலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்யும் மழை தொடர்பாக இங்கு நாம் கவனிக்க வேண்டியுள்ளது.

காரணம் தொடர்ச்சியான இந்த மழையினால் கிளிநொச்சியில் உள்ள குளங்கள் நிரம்பி வழிகின்றன. வயல்களிலும் அளவுக்கதிகமாக நீர் நிரம்புவதால் அதனைத் தடுப்பதற்கு விவசாயிகள் அந்த நீரை ஆறுகளில் கலக்க விடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு குளங்களில் மேலதிக நீரும் விவசாயிகள் வயல்களில் இருந்து வெளியேற்றும் நீரும் சேர்ந்து ஆறுகளின் ஊடாக ஆனையிறவு கடலுக்குள் சங்கமமாகின்றன.

தொடர்ச்சியான இந்தக் செயற்பாட்டால் தினசரி பெருமளவு நீர் எந்தவிதமான பிரயோசனமும் இல்லாமல் விரைகின்றது. அவ்வாறே வட்டக்கச்சிப் பகுதியில் இருந்துகூட இவ்வாறு சேரும் நீர் கனகராயன் ஆறு ஊடாக கடலுக்கு போய் சேருகின்றதாம்.

இந்தத் தடவை சிறுபோகச்செய்கைக்காக இரணைமடுக் குளத்தில் இருந்து வழங்கப்படும் நீரின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. குளத்தின் நீர் மட்டம் உயர் மட்டத்தில் இருப்பதன் காரணத்தால் குளத்திலிருந்து வாய்க்கால்கள் வழியே செல்லும் நீரின் வேகம் மிக அதிகமாகவுள்ளது. இதன் காரணத்தால் பல வீதிகளும் மக்கள் போக்குவரத்துக்கு உகந்ததாக அமையவில்லை எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

இவ்வாறு பலவழிகளிலும் நீர் விரைவது தொடர்பில் நாம் அக்கறை கொள்ளவேண்டும். காரணம் கடலில் சேரும் நீரையோ ஏனைய வழிகளில் வீணாகும் நீரையோ நாம் மீளவும் பெற்றுக்கொள்ள முடியாது.

ஆனால் நீர்ப் பற்றாக்குறை என்பது வரும் மாதங்களில் எப்போதும் தோன்றக்கூடிய ஒன்று.

எனவே இதற்கு மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இந்த வீணாகும் நீர் தடுக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் அக்கறை கொள்ள வேண்டும்.

## பதனிடப்படாத உப்பு — மனிதனுக்கு கேடு விளைவிக்குமா?

தமிழீழப் பிரதேசத்திலே கடலும் கடலேரிகளும் காணப்படுவதால் இயற்கையின் பருவ இயல்புகளால் சூரிய சக்தி, காற்று என்பவற்றைக் கூடிய அளவில் பெறும் வாய்ப்புக்கள் உள்ளதாலும் சரியான முறையான, கண்காணிப்புக்கள் இல்லாமலே குன்றுகளிலும் குழிகளிலும் சேறு சகதிகளிலும், உள்ள இடங்களில் உப்பு விளைகின்றன.

இவ்வாறு பாதுகாப்பற்ற இடங்களில் விளையும் உப்பினை இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்புக் காலப்பகுதியில் மக்கள் தன்னிச்சையாகவே அள்ளுவதும் அதைப் பதப்படுத்தாது வீடுவீடாகக் கொண்டு சென்று விற்று வந்தனர். கிராமப்புற நகர்ப்புற கடைகளிலும் பதனிடப்படாத உப்பு விற்கப்பட்டது. இவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் மறைமுகமாக விற்றவர்களும் இருக்கத்தான் செய்தார்கள்.

அன்றைய கால கட்டத்தில் பொருளாதாரத் தடை ஒரு புறம். இராணுவ ஆக்கிரமிப்பு இன்னொருபுறம். இதனால் நசுக்குண்ட மக்கள் செய்வதறியாது பதனிடப் படாத உப்புக்களை வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

எனினும் தற்போது உப்பு பதனிடப்பட்டு "அயடீன்" கலந்து உப்பாக விற்பனையாகின்றது. ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து பெறப்படும் உப்பு பதப்படுத்தப்பட்டு சகல கடைகளிலும் கிடைக்கக் கூடியதாகவுள்ளது. இந்த நிலை இருக்கும் போது மக்களாகிய நாம் பதனிடப்படாத உப்பை வாங்கிப் பாவித்து உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ளலாமா?

பதனிடப்படாத உப்பு உடலுக்கு கேடு விளைவிக்கின்றது. பதனிடாத உப்பில் உடலுக்கு கேடு விளைவிக்கும் இரசாயனங்கள் இருப்பதால் இந்த இரசாயனங்கள் உடலினைச் சென்றடைய வாய்ப்பு ஏற்படுகிறது.

இவ் இரசாயனப் பொருட்கள் உடலில் சேர்வதால் வயிற்றோட்டம் திடீர்க் காய்ச்சல், உணவு சமிபாடு அடையாமல் வாந்தி எடுத்தல் போன்றன ஏற்பட வாய்ப்புண்டு. அது மட்டுமல்ல பதனிடப்படாத உப்பில் காரம் அதிகமாக இருப்பதால் குடல்களில் அரிப்புத தன்மை, இரத்த அழுத்தம் போன்றவற்றிற்கும் காரணமாக அமைகிறது. ஆரம்பத்தில் இவை போன்ற நோய்கள் ஏற்பட்ட போதிலும் காலப்போக்கில் இவை மிகவும் பாதகமான விளைவையே ஏற்படுத்தும்.

மக்னீசியம், மக்னீசியம் ஒட்சைட் என இரண்டு வகை இரசாயனங்கள் விளையும் உப்பில் காணப்படுகின்றன. இவ்விரண்டும் மனிதனின் உடலில் இரண்டு சதவீதத்திற்கு மேல் சேருமானால் மலட்டுத் தன்மை ஏற்படும். பிறகும் குழந்தைகள் வளர்ச்சி குன்றிக் காணப்படும். மந்த புத்தியுள்ளவர்களாகவும் காணப்படுவர். அங்கவீனமுற்ற குழந்தைகள் பிறக்க நேரிடும்.

பதனிடப்படாத உப்பில் கேடு விளைவிக்கும் தன்மை இருப்பதால்தான் உப்பளங்களில் உப்புமால் போடப்பட்டு உப்பினை சேமித்து வைக்கப்படுகின்றது. சூரிய ஒளி மூலமும் நிலத்தினாலும் உறிஞ்சப்பட்டு மக்னீசியம், மக்னீசியம் ஒட்சைட் விகிதங்கள் குறைவடைகின்றன. இதன் பின்னர் உப்பில் அயடீன் கலந்து பதப்படுத்திய பின்னரே விற்பனைக்கு விடப்படுகிறது.

எனவே உடல் நலத்தைப் பாதிக்கும் பதனிடாத உப்பினை விற்கும் வியாபாரிகளிடமிருந்து உப்பினை வாங்க வேண்டாம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் தமிழீழ சுகாதார சேவையினரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி சந்தைப் பகுதியில் அண்மையில் பதனிடப்படாத உப்பு விற்பனை செய்யப்பட்டது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினராலும், சுகாதார சேவையினராலும் கண்டு பிடிக்கப்பட்டது என செய்திகள் கூறுகின்றன.

இயற்கையாக விளையும் இடங்களில் அள்ளி விற்கப்படும் உப்பில் இரண்டு தொடக்கம் 5 வீத மக்னீசியம் இருப்பது தெரியவந்துள்ளது. இவ்விடயத்தில் மக்கள் அனைவரும் கவனம் எடுத்து தரமான உப்பை இனங்கண்டு கேட்டு வாங்கிப் பயன்படுத்துவது எமது உடல் நலத்திற்கு முக்கிமானதாகும்.

சிவகமலா

(16 ஆம் பக்கத்தொடர்ச்சி)

படைப்புத் தொடர்பாக அவர்களுக்கு நேரிலோ கடிதமூலமோ உண்மையானவற்றைச் சொல்லலாம். சமகாலத்தில் தமிழிலும் பிறத்தியிலும் விரிந்திருக்கும் படைப்புலகத்தை அறிமுகப்படுத்தலாம். மூத்த தலைமுறையினரின் தரமான படைப்புகளையும் அவர்களின் பங்களிப்புகளையும் கொடுத்துதவலாம். படைப்புப்பற்றிய விவாதங்களை நிகழ்த்தலாம். கோட்பாட்டு ரீதியான விமர்சனங்களை, வாழ்க்கையனுபவங்களைப் பகிரலாம். இப்படி எவ்வளவோ செய்வதற்குண்டு.

இதையெல்லாம் புறக்கணித்து விட்டுச்சிபார்சுகளைச் செய்வது எதற்கும் உதவாது. எங்களின் சூழலில் சிபார்சு செய்வதுதான் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

இப்படி உள்ள நிலைமைகளை நேரடியாகவும் வெளிப்படையாகவும் எழுதும்போது பலருக்கு முகச்சுழிப்பு ஏற்படும். இது பலருக்கு அதிர்ச்சி அளிக்கும். வேறு சிலருக்கு கோபத்தை வரவழைக்கும், எரிச்சலையூட்டும். ஆனால் அதற்காக எழுதாமலிருக்க முடியுமா? எழுதினால்- இது காரணமாக மீண்டும் அணிகள் திரளும். குழுக்கள் பலம் பெறும். குழுமனப்பான்மை வளரும். ஆனால் அவையெல்லாம் எப்போதும் நீடித்திருப்பதில்லை.

இங்கே முன்வைக்கப்பட்டிருக்கும் கருத்துகள் தொடர்பாக மறைபொருளிலும் பூடகமாகவும் கிண்டல், புறக்கணித்தல் போன்ற வழிமுறைகள் மூலமாகவும் சிலர் எழுதக்கூடும்.

அதை விட நேரடியாக பதில்கருத்துகள், விமர்சனங்கள், மறுப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அப்படி எழுதினால் அது ஒரு நல்ல விவாதத்துக்கான வாசலைத்திறக்கும். அதுதான் எதிர்பார்க்கவும் படுகிறது.

கர்ணனின் கதைகள் கோரி நிற்பதும் அதைத்தான்.

எந்தப்படைப்பாளியின் படைப்பும் பொது வாசகரை நோக்கிய கதைகள் இரண்டு விதமான பார்வைக்குட்பட்டுள்ளன இரண்டாவது விமர்சனங்கள் சக படைப்பாளிகளை நோக்கியது.

கர்ணனுடைய கதைகளும் அப்படித்தான். வாசகர்கள் இந்தக்கதைகளை எப்பிடி வரவேற்கிறார்கள்; விமர்சகர்கள் மற்றும் சக படைப்பாளிகள் இவற்றை எவ்வாறு அணுகுகிறார்கள் என்பது.

கர்ணன் காத்திருக்கிறார்; புதிய பயணத்துக்கான ஆயத்தத்துடன். அவரை தரிப்பிடத்திலேயே நிற்க விடுவதா அல்லது பயணத்தில் ஈடுபடுத்துவதா என்பதை வாசிப்போர் சொல்லவேணும்.

(06 ஆம் பக்கத்தொடர்ச்சி)

சந்திரிகாவின் அண்மைக் கால அரசியல் நகர்வுகளை அவதானிக்கும். போதுநாட்டுப் பிரச்சினையைவிட தனது பிரச்சினைக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து வருவதாகவே தெரிகிறது.

இலங்கைத்தீவின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மீண்டுமொரு காலம் கனிந்து வந்திருக்கின்றது. இதை இலங்கை அரசு நல்லமுறையில் பயன்படுத்துவார்களா? புரிந்துணர்வு உடன்படிக்கை காலப்பகுதியில் எவ்வித சாதகமான விளைவுகளும் ஏற்படவில்லை. மாறாக அரச படையினருடனான முறுகல்நிலை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இன்று கிழக்குப் பகுதிகளில் படையினர் மேற்கொள்கின்ற அடாவடித்[illegible]ங்கள் விரும்பத்த[illegible]கவையல்ல. புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி பொருளாதரத்தடை என்பது இருக்கக்கூடாது. ஆனால் இராணுவம் கிழக்குப் பிரதேசத்தில் நிலைமையை மாற்றியிருக்கின்றது. அதுமட்டுமன்றி அரசியல்பணியில் ஈடுபடுகின்ற போராளிகள் மீதான கெடுபிடிகளும் அதிகரித்தே காணப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளை இலங்கைப் பிரச்சினையில் அக்கறை கொண்டுள்ள எந்தத்தரப்பினரும் விரும்பவில்லை. எனவே அரசு இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பது மட்டுமல்லாமல் ஜே.வி.பி உள்ளிட்ட இன்வாதக் கட்சிகள் சார்பாக பேச்சளவில் கொண்டுள்ள எதிர்ப்பினை விடுத்து அவற்றிக்கும் செயல்வடிவம் கொடுத்து ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வதே இலங்கைத்தீவுக்கு ஆரோக்கியமானதாக இருக்கும்.

இலங்கை விவகாரத்தை இன்று உன்னிப்பாக அவதானித்து வரும் சர்வதேச சமூகம் இன்று இதனையே விரும்புகின்றது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை புதுடில்லியில் வைத்து ஐ.தே. கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்தபோது இலங்கையில் சமாதான பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமெனவும் சமாதான முறையில் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமெனவும் இதுவே இந்தியாவின் நிலைப்பாடு என்றும் கூறினார்.

சர்வதேச சமூகம் இலங்கையில் சமாதானம் நிலவுவதையே இன்று விரும்புகின்றது. இது சிறிலங்கா அரசுக்கும் புரிந்திருக்க வேண்டும். ஆனால் அரசினதும், அதன் படைகளினதும் செயல்பாடு சமாதானத்தைத் தொடர்ந்து பேணுவதாகத் தெரியவில்லை.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் இந்நாட்டுப் பிரதமர் தனக்கு எதுவுமே தெரியாது என கைவிரித்து விட இந் நாட்டு சனாதிபதி பொதுக்கட்டமைப்பு தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்த கால அவகாசம் தேவையென கூறுவதும் நாட்டின் இனவாதக் கட்சிகள் பொதுக் கட்டமைப்பு உருவாகுவதைத் தடுக்க உயிரையும் கொடுப்போம் எனக் கூறுவதும் தமிழர் பிரச்சினையில் சிங்கள தேசம் கொண்டுள்ள நிலைப்பாடு என்ன என்பதைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றது.

எது எவ்வாறோ அரசு உள்நாட்டுப் பிரச்சினை தொடர்பாக மேற்போன்ற நிலைப்பாடுகளை விடுத்து இதய சுத்தியுடன் செயற்படுமானால் அதுவே வளமான இலங்கை நாட்டைக் கட்டியெழுப்ப அடிக்கல்லாக அமையும் என்பது மட்டுமன்றி இந்நாட்டு மக்களும் நிம்மதியாகவும், சுபீட்சமாகவும் வாழ வழிவகுத்தாக அமையும் என்பது உண்மையே

உலா 31

# பரிஸில ஒரு குட்டி யாழ்ப்பாணம்

*'வணக்கம* எல்லாருக்கும்! எப்படி பார்த்தீங்களோ ? என்ர கரிநாக்கு மாதிரி, ஏதாவது சொன்னால் பலிக்கும். சும்மா ஓரளவுக்கு ஒழுங்காய்க் கிடந்த நிலைமையைப் பயன்படுத்தி உ்ருப்படியாய் காரியம் ஆற்றிறதை விட்டிட்டு, வேண்டாம் வேண்டாமெண்டு மறிக்கவும் கேட்காமல் அரசாங்கம் சொறிச்சேட்டை விடத் தொடங்கினதெல்லோ! இப்ப கெட்டிக்காறர் விளையாட்டுக் காட்டத்தொடங்கியிருக்கினம். அதில்லைப் பாருங்கோ! அந்த 5 சடலங்களையும்தான் பொறுப்பெடுக்கிறன் எண்டொருத்தர் அறிவிச்சிருக்கிறாராம். சரி சரி செய்யட்டும். சரி சரி இது உங்கட 'இனப்பிரச்சினை நீங்களாச்சு, உங்கட முடிவுகளாச்செண்டு நானும் ஒண்டும் மறிக்கேல்லை. மற்றது பாருங்கோ! ராணுவம் துரோகக் கும்பல்களுக்கு பயிற்சி குடுக்கிற படங்கள் வேற வெளியிடப்போயினமாம் அந்த மர்மப் பிரிவினர். சந்திரிகாதான் பாவம், சரியான ரென்சனால மனுசி நூலாய் இழைச்சுப்போட்டிது. ஆக பத்து வருசமெல்லே பதவியில அமர்ந்து! கண்ணை மூடித்திறக்கிறதுக்கிள்ளை என்னமாய் கெதியாய் போட்டிது காலம். அதையிதை மாத்திக்கீத்தி குறைஞ்சது ஒரு 80 வயசு மட்டுமெண்டாலும் அனுபவிச்சாலெல்லே பத்தியம் தீரும். ஆனால் அதுக்கு மற்றவங்கள் விட்டாலெல்லோ! அவர் துண்டு போட்டவர் ஒரு பக்கம், தம்பியார் மறுபக்கம். அவாவிடை தம்பி பாருங்கோ ஒரு சோலியில்லாத சீவன் ஆசைக்கேற்ற மாதிரி அனுபவிக்கிறதுக்குப் பொருத்தமான உல்லாசத்துறை அமைச்சு. தான் உண்டு, தன்ரை பாடுண்டு எண்டிருக்கிது. அந்நாள் ஆட்சியோட ஒட்டிக்கொண்டிருந்தாலே, அரசாங்கத்துக்கு அபசகுனமாம் எண்டு ஆட்கள் கதைப்பினம். எனக்கென்னவோ அது விளங்கேல்லை. என்ன 360 பாகைக்கு கொஞ்சம் சள்ளை வைச்சிருக்குதே தவிர, மற்றம்படி எவ்வளவு வடிவான ஆள் ! இதுகிடக்கட்டும் இப்ப ஐரோப்பா பக்கம் என்னை விடுங்கோ! முதல்லை சுவிஸ் பக்கம்தான் போக இருந்தனான். பேந்து சொந்தக்காரர் ரெலிபோன் எடுத்துச் சொல்லிச்சினம், 'ஒருகிழமை கழிச்சு வாங்கோ! எங்களுக்கும் 2 கிழமை விடுமுறை இருக்கு. ஆறுதலாய் எல்லா இடமும் போகலாம்' எண்டு.

சரி அதுகளும் பாவம், ஓய்வில்லாமல் வேலை செய்கிறதுகள், ஆறுதலாய் இருக்கிற நேரம் போவோம் எண்டிட்டுத்தான் பிரான்சுக்கு வந்தன். என்ன இருந்தாலும் கலைக்கும், வீரத்துக்கும், புரட்சிக்கும் புகழ்பெற்ற நாடெல்லோ பிரான்ஸ்! அதுவும் நெப்போலியன் மாதிரி ஒரு வீரன் பிறந்த மண்ணுக்கு, என்னை மாதிரி ஒரு வீரன் உவ்வளவு தூரம் வந்திட்டு இஞ்சால வந்து பார்க்காட்டி, அது நெப்போலியனுக்கு அழகில்லையெல்லோ! பிரான்ஸ் நாடு பாருங்கோ! கிட்டத்தட்ட 544 000 சதுரகி.மீ. (இலங்கைத் தீவை விட 9மடங்கு பெரியது) பரப்பளவு. கீழ தென்மேற்காக ஸ்பெயினையும், வடக்கு-வடகிழக்காக பெல்ஜியம், யேர்மனி, சுவிஸ், இத்தாலி எண்டு 4 நாட்டையும் எல்லையாய் கொண்டிருக்கிது. தலைநகரம் பரிஸ். மொழி பிரெ[illegible]சு. நாணயம் முந்தி பிராங்க், இ[illegible] பொதுநாணயம் யூரோ ! [illegible] நான் நெதர்லாந்தில மாத்தி[illegible] காசை இஞ்சையும் பாவிக்கலாம்.

பிரான்சின்ரை ஸ்பெயின் எல்லையில 'பிறெனீ' எண்ட மலைத் தொடரும் இருக்கிது. 3298 மீற்றர் உயரம். ஐயோ நான் அங்கையொண்டும் ஏறேல்லை. 3298 உயரம் எண்டால் கிட்டத்தட்ட 'மேல' போனமாதிரித்தானே! பேந்து இவ்வளவு நாளும் இறங்கிவாற பஞ்சியில இருக்கிறயமன், 'ஆ யாரங்கே! பாருங்கள் ஏரம்புப்பையன் வருகிறான். இழுத்தெடுங்கள் மேலே!' எண்டு கயித்தை வீசினாலும், வீண் சோலியை ஏன் விலைக்கு வாங்குவான் எண்டிட்டு நான் மலைக்குப் போகேல்லை!

மொத்தமாய் 60 மில்லியன் சனத்தொகை. தலைநகர் பரிஸில மட்டும் 2.25 மில்லியனாம் (கொழும்பிலையே இப்பை 1 மில்லியனைத் தாண்டிட்டிது). பரிஸ் தவிர அடுத்த பெரிய நகரங்கள் எண்டால் மார்சைல், லியோன், ருலூஸ், ஸ்ராஸ்பேர்க் போன்றதுகளைச் சொல்லலாம். ஆ! எங்கட தமிழ் ஆக்கள் எண்டால் ஒரு 50 ஆயிரத்துக்குக்குறையாது. என்ன ஒருகவலை, இஞ்சை இருக்கிற எங்கட ஆக்களுக்கெண்டால், பெரிய நாடு, தமிழ்ச்சனம் எல்லாம் பரிஸைத் தவிர மற்ற இடங்களில சிதறிச்சிதறி இருக்கினம். உறவுகளெல்லாம் தொலைபேசி வழியாய்த்தான். இடையிடை வாற திருவிழா, கலியாணம், பிறந்த நாள், சாமத்திய வீடுகளெண்டால் எல்லாரையும் சந்திக்கலாம் எண்ட கொண்டாட்டம்தான். அதெல்லாம் விடுமுறையான சனிக்கிழமையளிலைதான் வைபடும். அப்பதான் கூடுதலான ஆக்களுக்கு நேரம் கிடைக்கும், கலந்துகொண்டிட்டு இரவிரவா காரில திரும்பிப் போய் திங்கட்கிழமை விடிய வேலைக்குத் தயாராகலாம். அதிலையும் 2 வேலை செய்யவேண்டிய குடும்ப நிர்ப்பந்தத்தில இருக்கிற ஆக்களுக்கு பம்பர வாழ்க்கைதான்.

இஞ்சை எங்கட நாட்டுத்தமிழர் மட்டுமில்லாமல், பாண்டிச்சேரித் தமிழரும் (இந்தியாவில பிரெஞ்சு காலனி ஆட்சிக்குக்கீழ இருந்த பகுதி) கனபேர் இருக்கினம். அவையளிலை புதுசா வந்த ஆக்கள் தவிர, மற்றாக்கள் பெரும்பாலும் சாப்பாடு தவிர ஏனைய நடைமுறையளிலை அடையாளத்தை கைவிட்டிட்டினம். ஆனால் எங்கட சனம் அப்பிடியில்லை. தமிழ்ச்சோலை எண்ட பெயரிலை தமிழ் ஆக்கள் வசிக்கிற நகரங்கள் எல்லாத்திலையும் தாய்மொழிப் பள்ளிக்கூடங்கள் நடத்தினம். தமிழர் பாரம்பரிய விளையாட்டுப்போட்டியள், திருவிழாக்கள் செய்யினம்.

ஈழமுரசு, ஈழநாடு எண்டு 2 கிழமைப்பத்திரிகையள் வருகிது. **TRT, ABC** இன்னும் ஏதேதோ பேரிலை தாயக உணர்வுகளைப் பிரதிபலிக்கிற 24 மணித்தியால வானொலிச்சேவை நடக்கிது. இதெல்லாத்துக்கும் மேலால பத்திரிகையளில வாசிச்சிருப்பீங்கள்: NTT எண்டு தமிழீழத்தேசியத் தொலைக்காட்சி தொடங்கப்பட்டிருக்கிது எண்டது. அதை உங்கையிருந்து இஞ்சை இழுத்துக்குடுக்கிற **TTN** முழுநேரத்தொலைக்காட்சியும் இஞ்சைதான் இருக்கிது. இந்த ஊடகங்கள் எல்லாம் சேர்ந்து, தூரங்களால பிரிஞ்சிருக்கிற எங்கட சனங்களுக்கான உறவுப்பாலமாய் சேவை செய்யிறதால, உங்க நீங்கள் தும்மினால் இஞ்சை சத்தம் கேட்கக்கூடினமாதிரி ஒரு நெருக்கத்தோட எல்லாரும் தமிழராய் இருக்கினம்.

பரிஸில இருக்கிற குட்டி யாழ்ப்பாணத்தைப் பற்றியும் நான் உங்களுக்குச் சொல்லோணும். அதுக்கு முதல் இஞ்சையிருக்கிற உலகப்பிரபல்யம் வாய்ந்த ஐபிள் கோபுரத்தைப் பார்ப்போம். இந்தக் கோபுரத்தை 1889 ஆம் ஆண்டில குஸ்ராவ் அலெக்சாண்டர் ஐபிள் எண்ட பொறியியலாளர் வடிவமைச்சுக் கட்டினார். உலக நீதிக்கான சின்னம் இதெண்டு சொல்லி 300 மீற்றர் உயரத் துக்கதனி உருக்கிரும்பினால கட்டின இது, இண்டைக்கு இந்த நகரத்தை உலகளாவிய ரீதியில பிரதிபலிக்கிற சின்னம் ஆகவும் மாறீட்டிது.

7000 தொன் உருக்கிரும்பைப் பாவிச்சுக் கட்டியெழுப்பின இதுக்கு ஓரிடத்திலையும் **welding** வேலை பார்க்கப்படேல்லை எண்டதும் ஒரு அதிசயம்தான். முழுக்க முழுக்க நட்டுகளும், புரியளும்தானாம். ஆக உச்சிக்கும் ஏறிப்பார்க்கலாம். பயப்பிடாங்கோ ! வருசா வருசம் ஆணியள், நட்டுகள், புரியள் எல்லாம் ஒழுங்காய் மாத்திப்போடுவினமாம். கொஞ்சம் இருட்டினாப் பிறகு அந்த சுற்றுவட்டாரத்தைப் பார்க்க அந்தமாதிரி வடிவாய் இருக்கும். முன்னுக்கு ஒரு பழையகால அரண்மனையும் இருக்கிது. இடம் பார்க்கவெண்டு உள்நாடு, வெளிநாடெண்டு எல்லா இடங்களிலையிருந்தும் எக்கச்சக்க சனம் குவிஞ்சு கொண்டு இருக்கும்.




நீங்கள் அப்பிடி நினைக்கமாட்டியள். இருந்தாலும் உதெல்லாம் வேலையில்லாத வெள்ளைக்காரரின்ரை கொழுப்பு மிஞ்சின வேலையெண்டு சொல்லிறதை நீங்கள் ஆராவது கேட்டால் ஒருக்கால் அவையளுக்குச் சொல்லுங்கோ ! நான் ஒண்டும் ஐபிள் கோபுரம் கட்டச்சொல்லிச் சொல்லேல்லை. இருக்கிற எங்கட பாரம்பரிய வரலாற்றுச்சின்னங்களைப் பராமரிச்சுக் காப்பாத்தினாலே போதும்! இது ஒண்டும் ஒருசிலரின்ரை பொறுப்பில்லை, தன்ரை தன்ரை பொறுப்பை உணரிற ஒவ்வொரு பொதுமகனும், பொதுமகளும் இப்படியான சின்னங்களின்ரை பெறுமதியை உணரோணும். இந்த நகரச்சின்னத்தைக் கட்டமுடிஞ்ச செலவையோ அல்லாட்டி வருசா வருசம் நட்டுகள் மாத்திற செலவையோ அர்த்தமில்லாத தொகையாய் ஆக்கிற அளவுக்கு அதால வருமானம் கிடைக்கிது. ஏன் எங்கட ஏ9 கடையளிலை தொங்கிற எத்தினை ரீசேர்ட்டுகளிலை ஐபிள் - பரிஸ் படம் அடிச்சிருக்கிது. ஏன் சுண்டிக்குளக்கரை, ஆனையிறவு, மன்னார், இரணைமடுக்குளம், திருகோணமலைத்துறைமுகம், மட்டு-வாவி எண்டு எத்தினையைப் போடலாம். பாபாவும், ஜக்குபாயும் எண்டுமட்டும் போட்டுத்திரியத்தான் எங்களுக்கு இஸ்ரம். சும்மா வாய்க்குவாய் சொல்லிப்போடுவோம். 'எனக்கு வாற ஆத்திரத்துக்கு வந்தனெண்டால், எல்லா ஜக்குபாயளையும் நடுவீதியில வைச்சுச் சுருட்டிப் போடுவன்.

பரிஸில பார்க்கவேண்டிய முக்கியமான இடங்களெண்டு நூலகம், அரண்மனை, எங்கட இவா 'மொனாலிசா' ஓவியம், **White Church** எண்டு கனக்க. நகர ஞாபகத்துக்கெண்டு மட்டுமில்லாமல் அதுகளும் ஏதோ ஒருவகையில விளம்பரம்தான். எனக்கு அந்த போஸ்ற் கார்ட்டுகளைப் பார்க்க எரிச்சல் எரிச்சலாய் வந்திச்சிது. இருந்தும் 5,6 விரும்பி வாங்கினன். கிளிநொச்சி கார்ட் விற்கவேண்டாம் எண்டு பிரெஞ்சுக்காரன் வந்து தடுத்தவனே! ஏன் எனக்கு எரிச்சல் வருகிது! நாங்களெல்லோ எங்கடையளுக்கு மதிப்புக்குடுக்காமல் இருக்கிறம். அப்பிடியே எல்லாத்தையும் பார்த்துக்கொண்டு, நீங்காத அந்த நினைவுகளோடை திரும்பினன்.

ஆ . . குட்டி யாழ்ப்பாணத்தைப் பற்றிச்சொல்லிறனெண்டு சொன்னனான் எல்லோ ! பரிஸில பாருங்கோ ஒரு 3, 4 வீதி நீட்டுக்கு நிண்டால் வெள்ளைக்காரனே கொஞ்சநேரம் குழம்பிடுவான், தான் எங்கையோ மாறிக்கீறி வந்திட்டன் எண்டு. அவ்வளவுக்கு எங்கட ஆக்களின்ரை மளிகைக்கடையள், சாப்பாட்டுக்கடையள், நகைக்கடையள், உடுப்புக்கடையள், வீடியோக்கடையள், விமான ரிக்கற் ஏஜென்சியள், புத்தகக்கடையள், சலூன்கள் அப்பிடி இப்பிடியெண்டு இறைச்சிக்கடை வரைக்கும் எல்லாம் தமிழ்தான் ! லா சப்பல், லா குர்ணே, றூ பெடொணே எண்டு அந்தப் பகுதியளின்ரை பேருகள்.


இந்த பிரெஞ்சுமொழி பாருங்கோ, பார்த்தால் மூக்கால கதைக்கிற மாதிரி இருக்கும். பத்துப்பதினைஞ்சு எழுத்தைக்கொண்ட உள்ள சொற்களெல்லாம் 2,3 ஒலியன்களோடை வாசிக்கப்பட்டிடும். அதுதான் பாருங்கோ கன **silent letters**. அந்த இடங் களிலை போற, வாற, நிக்கிற, சிரிக்கிற, அழுகிற எல்லாமே தமிழில தான். ஒருத்தர் சொன்னார், 'சிலநேரம் சுடச்சுட எங்கட தமிழில சண்டை, சச்சரவுகளையும் கூட பார்க்கலாம்' எண்டு.

உந்த இந்தியப்படங்களின்ரை பேரிலை ஒவ்வொரு குழுக்களும் சீனு, பானு, தில், முள் எண்டு ஏதோ பேரிலையெல்லாம் **Gangs** எண்டு சில இளவட்டங்கள் திரியினமாம். முந்தியைவிட இப்ப ஓரளவு அடக்கமாம். நான் சொன்னன் 'அதுக்குப் பதிலாய் யாழ்ப்பாணத்திலை கனக்க முளைச்சிட்டிது, தம்பியவையள் ! காரணங்களைத் தவிர்த்துக்கொள்ளாமல் காரியங்கள் திருந்தும் எண்டு எதிர்பார்க்கேலாது. ஊர்ப்பக்கம் போனநேரம் என்னோடை படிச்ச பெட்டையள், பொடியங்களை (என்ரை கூட்டாளியளை நானே அப்பு, ஆச்சிமார் எண்டு சொல்ல மனம் வரேலை) பார்க்கப்போனால் அந்தக் கூட்டமே குடும்பப்பிரச்சினை மாதிரி ஒரே நாடகக்கதையும், சினிமாக் கதையும். ஒவ்வொருத்தரும் தங்கட குடும்பத்திலை மனக்கட்டுப்பாடோடை உதுகளைத் தவிர்த்தால் சமூகம் மாறும்'.

மற்றது பிள்ளையள் பிரான்ஸ் இண்டைக்கு ஒரு வளர்ச்சி அடைஞ்ச நாடாக மட்டுமல்லாமல், அமெரிக்காவுக்கு தலை பணியாத தன்மான அரசியல் போக்கையும் கொண்டு விளங்கிது. அதுக்காக இரண்டு தரப்புக்கும் ஒத்துவராது எண்டில்லை. ரொணி பிளேயர் மாதிரியில்லாமல் தங்கட தேசிய நலன்களை முன்னிறுத்தி, அதுக்கு ஒத்து வந்தால் மட்டுமே அமெரிக்காவுக்கு பிரான்ஸ் ஒத்துழைக்கும். ஈராக் விசயத்திலையும் அப்பிடித்தான். ELF எண்ட பிரெஞ்சு பெற்றோல் கொம்பனி ஈராக் எண்ணெய் வர்த்தகத்தில வகிச்சு வந்த நிலைமையைப் பொறுக்கேலாமல், அமெரிக்கா தங்கட நிறுவனங்களின்ரை ஆதிக்கத்தை நிலைநாட்டிறதுக்காகத்தான் சதாம், பேரழிவு ஆயுதம் எண்ட கதையளெல்லாம், எண்ட கதையும் அடிபடுகிது. அமெரிக்காவின்ரை அரசியலோடை சம்பந்தப்பட்ட கனபேரும் எண்ணெய் நிறுவனங்களில முதல் போட்டு வைச்சிருக்கிற ஆக்கள்தான். அதுகளைப் பற்றின கதையளை விடுவம். பேந்து நான் அங்காலையும் போகவிரும்பினாலும் விசா தராமல்விட்டு விடுவாங்கள். ம் . ம். . அமெரிக்கா பாருங்கோ, தங்கமான நாடு ! ! (இனி விசா கிடைச்சிடும்).

பிரான்ஸ் பாருங்கோ கன தத்துவஞானியள், சிந்தனைவாதியள், புரட்சிவாதியளை உருவாக்கினதொரு தேசம். ஐரோப்பாவில மத்தியகாலப் பகுதியில உருவான சிந்தனைப் போக்குகள் மரபுவாதியளுக்கும், மதவாதியளுக்கும் ஒத்துவராமல் போகவே அந்த அறிஞர்மாருக்கு அச்சுறுத்தல் குடுத்திருக்கினம். 'பூமி உருண்டை போல கிடக்கிதெண்டு சொன்னால் பிழை! கொலரா வர்றதுக்குக் காரணம் சாத்தான் இல்லை, கிருமியள்.

(22ஆம் பக்கம் பார்க்க)



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 08

பகுதி -44

அடிப்படை கோட்பாட்டு ரீதியான உருவாக்கங்களை நடைமுறைப்படுத்துபவையாக இந்த முறைகள் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

டிப்ஸின் தாயைப் பொறுத்தமட்டிலே தனது பிள்ளை பெற்றிருந்த அறிவுத்திறன் என்ற கொடையை ஓரளவுக்காவது அவள் அறியாதிருக்கும் வாய்ப்புகள் மிகவும் குறைவானவையாகவே இருந்திருக்கும் என்று எனக்குத் தோன்றியது. அவளுடைய ஒட்டு மொத்த அனுபவத்தை வைத்துப் பார்க்கும் பொழுது அறிவுத்திறன் சார்ந்த சாதனைகளை ஈட்டுவது மட்டும் போதுமானதாக இருக்கவில்லை. அன்பு, மரியாதை, புரிந்துணர்வு ஊடாக தனது பிள்ளையுடன் சுமுகமான உறவை வளர்ப்பதில் அவள் பெற்றிருந்த தோல்வியானது அநேகமாக அவளுடைய சொந்த உணர்வு ரீதியான இழப்புக்களால் ஏற்பட்டதாக இருக்கலாம். இந்த அடிப்படை அனுபவங்களை பெறாத ஒருவர் எப்படி இன்னொருவர் மீது அன்பு செலுத்தலாம்? எப்படி மரியாதை செலுத்தலாம்? இன்னொருவரை எப்படிப் புரிந்துகொள்ளலாம்? அவள் இந்தச் சந்திப்பிலே தான் மதிக்கப்படுவதாக, புரிந்துகொள்ளப்படுவதாக உணர்ந்து (புரிந்து) கொண்டிருந்தால், அது அவளுக்கு அதிக உதவிகரமானதாக இருக்கும் என்று எனக்குத் தோன்றியது. இந்தப் புரிந்து கொள்ளுதலானது, தேவையின் அடிப்படையில் அதிகளவில் பொதுமைப் படுத்தப்பட்ட ஒரு எண்ணக் கருவாக, அதாவது அவளது செய்கைகளுக்குக் காரணம் இருக்கிறது, மாறிக்கொள்ளும் இயலுமை அவளுக்கு இருக்கிறது. மாற்றங்கள் அவளுக்குள் இருந்தே வரவேண்டும். அவளுடைய, அவளுடைய கணவருடைய டிப்ஸினுடைய அனைத்து மாற்றங்களும் அவர்களது திரண்ட திரட்டிய அனுபவங்களால் செயல்நோக்கமளிக்கப்பட்டவையாகும் என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும் அது அவளுக்கு உதவிகரமானதாக இருக்கும் என்று தோன்றியது. அவள் எப்படியான சொற்றொடரை இதற்குப் பயன்படுத்தினாள் என்று நினைத்துப்பார்த்தேன். “இரண்டு பேருமே பயந்துபோயிருக்கிற தனிமையாயிருக்கிற, மகிழ்ச்சியை இழந்துபோன மனிதர்களா ஆகிப்போயிருந்தம். எங்களச் சுற்றி நாங்க எழுப்பிக்கொண்டிருந்த அரண்கள் எல்லாமே நொருங்கிப் போயிருந்தன. எங்கள கைவிட்டுப் போயிருந்தன...

நாங்களும் சாதாரண மனிதர்களப் போல இருக்கமுடியும்... நாங்களும் தவறு விட முடியும்.... நாங்கள் தவறு விட்டுவிட்டோம் என்பதை ஏற்றுக்கொள்ளவும் முடியும் எண்டு உணர்ந்துகொண்டது பெரிய ஆறுதலாய் இருந்துது...

## அத்தியாயம்- 09

அடுத்த வியாழக்கிழமை டிப்ஸ் ஓரளவுக்கு மகிழ்ச்சியோடு விளையாட்டு அறைக்கு வந்தான். டிப்ஸின் தாயார் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஊசிமருந்துகளை ஏற்றுவதற்காக டிப்ஸை குழந்தை மருத்துவரிடம் கொண்டுசெல்ல வேண்டியிருப்பதால் பதினைந்து நிமிடம் முன்னதாக டிப்ஸ் வரலாமா என்று கேட்டு ஒழுங்கு செய்துகொண்டிருந்தார்.




டிப்ஸ் விளையாட்டு அறைக்குள் வந்தபோது “இன்றைக்கு நான் ஊசி போடப் போற நாள் டொக்டரிட்ட நேரம் எடுத்திருக்கு” என்றான்.

“ஓம் அது எனக்குத் தெரியும் நீங்கள் குறித்த நேரத்துக்கு அங்கே போகலாம்” என்று அவனுக்குப் பதில் சொன்னேன்.

“இந்த நேரமாற்றம் எனக்கு மகிழ்ச்சி தருகிறது” பெரிதாக புன்னகைத்தபடி என்னைப் பார்த்துச் சொன்னான்.

''அப்பிடியோ?... ஏன்?'' நான் கேட்டேன்.

“அது எனக்கு மகிழ்ச்சியைத் தாற படியால் நான் மகிழ்ச்சியாய் இருக்கிறேன்'' அத்தோடு அந்த விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அவன் அந்த பொம்மை வீட்டை நோக்கிச் சென்றான். “இஞ்ச ஒரு வேலை செய்ய வேண்டியிருக்குது” என்றான்.

“என்ன வேலை?”

“இது” என்று பொம்மை வீட்டைச் சுட்டிக்காட்டினான். “இதை சரி செய்து பூட்டி விடவேண்டும். கதவுகளை புட்டிவிடவேண்டும். ஜன்னல்கள சாத்த வேண்டும்” சொல்லிவிட்டு விளையாட்டு அறையின் ஜன்னலை நோக்கிச் சென்றவன் வெளியே பார்த்தான். பின் என்னை நோக்கி பார்வையை செலுத்திக் கொண்டே “சூரியன் இண்டைக்கு பிரகாசமாய் இருக்குது. இண்டைக்கு வெளியில சரியான வெக்கையா இருக்குது. நான் போட்டிருக்கிற சாமான்களை கழற்றப் போறன்'' என்றான். பின் எந்த உதவியுமில்லாமலே தனது தொப்பி, கோட்டு, காலுறை எல்லாவற்றையும் கழற்றி, அவற்றைக் கொண்டு போய் கதவுக் குமிழில் தொங்கவிட்டான்.

“எனக்கு வர்ணம் பூச இண்டைக்கு சரியான ஆசையாய் கிடக்குது'' என்றான் அவன். “அது உங்கட விருப்பத்தைப் பொறுத்தது” என்றேன். “ஓம் அது என்ர விருப்பத்தை பொறுத்ததுதான்.'' என்றவன், சித்திரம் வரையும் நிலைச் சட்டத்தின் அருகில் சென்றான். தீந்தை குப்பிகளின் மூடிகள திறந்து ஒவ்வொரு நிறத்திலயும் ஒரு தூரிகையை வைக்கப்போறன். உரிய ஒழுங்கில அதுகளை வைக்கப்போறன். சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், நீலம், பச்சை'' என்று சொல்லிக் கொண்டே போனான். திரும்பி ஒரு முறை என்னைப் பார்த்தான். சில விஷயங்கள் என்ர விருப்பத்தை பொறுத்தவைதான்... சில விஷயங்கள் அப்பிடியில்லை. “முறுக்கோடு சொன்னான்.”

“ஓம் அது உண்மை என்றுதான் நினைக்கிறேன்'' என்றேன் நான்.

“அது உண்மைதான்'' அழுத்திச் சொன்னான் அவன். பின்பு முறையான வர்ண ஒழுங்கில் தீந்தைகளை ஒழுங்கு செய்யத் தொடங்கினான். பின்பு அவன் கடதாசியில் வர்ணக் கீற்றுகளை வரையத் தொடங்கினான். “அய்யா! தீந்தையை பூசினா அது ஓடுது'' என்றவன் கிறேயோன்கள் இப்ப ஓடுறயில்ல. எங்க கீறுறீங்களோ அந்த இடத்திலேயே அவை நிக்கும். தீந்தைகள் நிற்காது. அவை ஓடும். இதில ஒரு செம்மஞ்சள் புள்ளிய வைக்கிறன். அதில தீந்தை ஓடுறது தெரியுதா? இப்ப பச்சையில ஒரு கோடு கீறுறன். அதுகும் கீழ சொட்டுது. அது சொட்டயிக்க நான் அத துடைச்சு விடுறன்.'' என்றான்.

கையை நீட்டி, கண்ணாடி பூட்டியிருந்த சுவரை விரல்களால் தட்டிக் காட்டியபடி, “அங்கால ஆற்றையோ அறை இருக்குது. போனமுறை அந்த இருட்டான அறைக்குள்ள யாரோ இருந்தவை ஆனா இண்டைக்கு ஒருத்தரும் இல்ல''.

இந்த எதிர்பாராத அறிவித்தலால் நான் திகைத்துப் போனேன். “நீங்கள் அப்பிடி நினைக்கிறீங்களோ?'' என்று கேட்டேன். “எனக்குத் தெரியும் சின்னச் சின்னச் சத்தங்களும் கிசுகிசுத்த குரல்களும் அதை எனக்குக் காட்டித் தந்து விட்டன.

குழந்தைகள் தங்களைச் சூழ உள்ள பொருட்களை எவ்வாறு அறிந்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சிறிய சான்று சுட்டிக் காட்டியது. அந்தந்தச் சமயங்



களில் அவர்கள் அவற்றைப் பற்றி எதுவும் கூறாவிட்டாலும் அவர்கள் அவற்றை அறிந்திருப்பார்கள். இது டிப்ஸையும் ஏனைய பிள்ளைகளையும் பொறுத்தவரை உண்மையானதாக இருக்கிறது. அநேகமாக எமது தனிப்பட்ட அறிந்துகொள்ளுதல்களின் ஒரு சிறிய பகுதியே வாய்மொழி மூலமாக மற்றவர்களுக்கு கடத்தப்படுவதாக இருக்கலாம்.

“உங்களுக்கும் அது தெரியுமா'' கேட்டான் அவன்.

''ஓம்'' என்று நான் பதில் சொன்னேன்.

சித்திரம் வரையும் நிலைச்சட்டத்தை நோக்கித் திரும்பிக் கொண்ட அவன், மேலும் பல வர்ணக் கீற்றுக்களை கீறினான்.

“இந்தக் கோடுகளும் கீற்றுகளும் என்ர எண்ணங்கள காட்டுதுகள்'' என்றான் அவன்.

“அப்பிடியோ?'

“ஓம் இப்ப நான் சண்டைக்குப் போற ஆட்களை வெளியில எடுக்கப்போறன். முக்கியமா அந்த குறிப்பிட்ட ஒரு ஆளை எடுக்கப்போறன்!''

அவன் அந்த நிலைச் சட்டத்திலிருந்து மணல் பெட்டிக்கு செல்லும் வழியில் எனக்கருகே தரித்து, எனது குறிப்பேட்டைப் பார்த்தான் அவன் பயன்படுத்திய வர்ணங்களின் பெயர்களை சுருக்கமாக அவற்றின் முதலெழுத்துக்களால் குறித்து வைத்திருந்தேன். டிப்ஸ் எனது குறிப்பேட்டைப் பார்த்தான். அவனது செய்கைகளே அதில் குறிக்கப்பட்டிருந்தன. அவனுடைய வார்த்தைகள் எதுவும் குறிக்கப் படவில்லை. மௌனமா[illegible] இருந்தபடி ஒலிப் பதிவுக் கருவியை இய[illegible]க்கொண்டிருக்கும் அவதானிப்பாளர் அவற்[illegible]ப் பதிவு செய்து கொண்டிருப்பார்.

“எல்லா எழுத்தையும் எழுதலாம் தானே'' என்று கூறிய டிப்ஸ் “சி எண்டா சி..வ..ப்...பு, ம எண்டா ம..ஞ்...ச...ள்...'' என்றான். தொடர்ந்து இந்த முறையில் எல்லா நிறங்களையும் எழுத்துக் கூட்டிச் சொன்னான்.

(தொடரும்)

---

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதுக்கான மருந்தைக் கண்டு பிடிக்கோணும் எண்டு சொன்னால் பிழை'. எண்டெல்லாம் பலரும் நெருக்கடியளைச் சந்திக்கேக்கை, உடன ஓடி வாறது பிரான்ஸ்க்குத் தானாம்.

சிந்தனையளை வெளிப் படுத்திறதுக்கு கூடுதல் சுதந்திரம் இருந்த நாடு உலகத்திலேயே பிரான்ஸ் தானாம். அதால தான் 'சுதந்திரம் மனிதன் ஒவ்வொருவரினதும் பிறப்புரிமை. அரசாட்சி என்பது கடவுளால் வழங்கப்பட்டதல்ல ! ' எண்ட விழிப்புணர்ச்சியோட 1789 இல பிரெஞ்சுப்புரட்சியை நடாத்தி, உலகத்துக்கே முன்னுதாரணம் காட்டினவை. வியட்னாமின் தந்தை எண்டு போற்றப்படும் வீரர் ஹோசீமின் உம் தன்ரை ஆரம்ப காலத்தில இஞ்சை இருந்தவர்தான். மற்றது இந்த நாட்டின்ரை பொருளாதாரம் எண்டு சொல்லப்போனால் பாரிய தொழிற்சாலையள் நிறைஞ்சு கிடக்கிது. ஆயுத ஏற்றுமதியளிலையும் முதன்மை வகிக்கிற நாடுகள் பட்டியலில இடம்பெற்றிருக்கிது. றெனோல்ட், பிஜோ எண்ட வாகனங்களை உற்பத்திசெய்யிது. AERO-BUS எண்ட விமானத்தயாரிப்பு நிறுவனம் இருக்கிது (அமெரிக்காவின்ரை Boeing இற்கு அடுத்ததாய் நிற்கிற ஒண்டு). இன்னும் கனக்க சொல்லக்கிடக்கிது. ஆனால் பாருங்கோ நான் சொன்ன லா சப்பல் இன்ரர்நெற் சென்ரரிலை இருந்து இதை உங்களுக்கு எழுதிக் கொண்டிருக்கிறன். பக்கத்துச் சாப்பாடுக்கடையில கொத்துரொட்டி வெட்டி சத்தம் கேட்கிது. கனநேரம் என்னால தாக்குப்பிடிக்கேலாது. ஆகவே இப் போதைக்கு உங்களைக் காய்வெட்டிறன் (நான் கொத்து வெட்டிறதுக்காக) மிச்ச விசயங்களோடை வாற முறை சந்திப்பம், வாறன் ! (நச்சரிச்சுப்போடாங்கோ! வயசுபோன காலத்திலை நிம்மதியாய் சாப்பிட விடுங்கோ!).

---

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியாமளா எட்டிப் பார்த்தாள். இப்பொழுதும் அவனிடம் அசைவில்லை. அம்புலன்ஸ் புறப்பட்டது. சிறிது நேரத்தில் பஸ் வரவே சூரியும், சியாமளாவும் ஏறிக்கொண்டார்கள்.

பஸ் பொயின்ரை அடைந்த போது அங்கே பெரும் சனத்திரள் காத்திருப்பதைக் கண்ட சியாமளா விக்கித்துப் போனாள். 'இன்றைக்குப் போன மாதிரித்தான்...''

அவர்கள் பஸ்சிலிருந்து இறங்கிய போது, “இன்று பாதை மூடியிருக்கு... இராணுவம் போக விடவில்லை'' என்ற தகவல் காதுக்கு எட்டவே அவர்கள் பதறினார்கள்.

“அப்ப அம்புலன்ஸ்...?'' சுற்று முற்றும் நோட்டம் விட்டான் சூரி. ஒன்றன் பின் ஒன்றாக பல வாகனங்கள் அணிவகுத்து நின்றன. அங்கே அவர்களது அம்புலன்ஸ்சும் நின்றது.

சூரியும், சியாமளாவும் அங்கு விரைந்து சென்றார்கள். ''அம்புலன்சையும் விடாங்களோ?''

“ஒரு வாகனமும் போக முடியாதாம்''

''ஏன்...?''

“ஆருக்குத் தெரியும்...''

சியாமளாவிடம் இருந்த அற்ப சொற்ப நம்பிக்கையும் போய்விட்டது. அவள் துடிதுடித்தபடி அம்புலன்ஸ்சுள் நோக்கினாள். நடமாடக் கூடிய நோயாளர்கள் இறங்கி வெளியே நின்றார்கள். சிவகுமார் இன்னமும் சுயநினைவின்றி மூச்சிழுத்துக் கொண்டிருந்தான். சியாமளா ஏறி உள்ளே சென்று அவனது தலையைத் தனது மடியிலே வைத்துக்கொண்டு அழுதாள்.

அவனது தேகம் மறுபடியும் அனலாய்க்கொதித்துக் கொண்டிருந்தது. ஏறிக் கொண்டிருந்த குளுக்கோசும் முடிந்துவிட்டது. வைத்திய சாலை ஊழியர்கள் எவரும் இல்லாத போதிலும் கிளீனர் வந்து குளுக்கோசைக் கழற்றினான்.

''மூன்று நாளைக்குப் போக்குவரத்து இல்லையாம்''' தகவல் அறிந்து வந்த சாரதி கூறவே சியாமளா பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தாள்.

எல்லோரையும் ஏற்றிக் கொண்டு திரும்பிய அம்புலன்ஸ்சில் சாரதி சியாமளாவையும் அனுமதித்தான்.

அம்புலன்ஸ்சில் பயணிக்கையில் மடியிலேயே சிவகுமாரின் ஆவி பிரிந்ததை அறியாத சியாமளா இன்னமும் கடவுளை வேண்டிக்கொண்டிருந்தாள்.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

*பாவலா!*

*சேருவில் சம்பவத் தின் பின் அரசு கருணா குழு தொடர்பாக என்ன கூறப்போகிறது?*

*சிவகுமார்,*
*கிளிநொச்சி.*

'எங்கடை அப்பன் குதிருக்குள் இல்லை' என்ற வழமையான குழறலையே தொடரப் போகிறது.

*பாவலா!*


*எனக்கு வீட்டில் திருமணம் பேசப்போகிறார்கள் எனவே பெண்ணிடம் பணம், பண்பு, பாசம், இதில் எதை அதிகமாக எதிர்பார்ப்பது?*

*சதீஸ்குமார்,*
*செல்வாநகர்.*

முதலில் அந்தப் பெண் உங்களிடம் எதிர்பார்ப்பது உங்களிடம் உள்ளதா என்பதை உறுதி செய்யுங்கள்.

*பாவலா!*

*எரிக் சொல்ஹெய்மின் நோர்வே - இலங்கை பயணங்களின் எண்ணிக்கை கின்னஸ்சுக்கு போகுமா?*




*சாரங்கன்,*
*புதுக்குடியிருப்பு.*

பயண விவகாரத்தில் கதிர்காமரின் சாதனையை எவரும் எட்டவே முடியாது தள்ளாத வயதிலும் எந்தப் பயணத்தையும் அவர் தள்ளிவைப்பதில்லை.

*பாவலா!*

*விஞ்ஞானம் சாதித்தது என்ன? சாதிக்காதது என்ன?*

*பிரசாந்,*
*வவுனியா.*

சாதித்தது உலகளவு, சாதிக்காதது பிரபஞ்சமளவு.

*பாவலா!*

*குருத்தோலைகளின் நக்கல் காவோலைகளை அதிகமாக தாக்குகிறது என்ன செய்யலாம்.?*

*ஐங்கரன்,*
*ஸ்கந்தபுரம்.*

காவோலைகளும் முன்னர் தாம் குருத்தோலைகளாக இருந்த போது அடித்த நக்கல்களை மலரும் நினைவுகளாக மீட்டுப் பார்த்தால் தாக்கம் எதுவும் ஏற்படவாய்ப்பில்லை...

*பாவலா!*

*எமது தமிழ் மொழியை இளைய தலைமுறையினருக்கு தூய தமிழில் கற்றுக்கொடுக்க வேண்டும். அதற்கு தங்களை ஆசிரியராக நியமிக்க எண்ணியுள்ளோம் உமது கருத்து என்ன?*

*கு.மயூதரன்,*
*சிறுப்பிட்டி.*

தமிழ் தூய தமிழாகவும், தமிழன் தூய தமிழனாகவும் இருக்க வேண்டும் என்ற பெருவிருப்புடையவன் அடியேன்... தமிழும் தமிழனும் உயர்வுறவேண்டுமெனில் என்னைப் போன்ற பாவலர்களை விடவும் நாவலர்களை நாடலே நன்று... (இதற்குள் எத்தனை தமிழ் எழுத்து மற்றும் இலக்கணப் பிழைகள் உள்ளதோ? யாமறியோம் பராபரமே!)

*பாவலா!*

*நான் சகல துறை வீரனாக வர ஆசைப்படுகிறேன் அதற்கு என்ன செய்ய வேண்டும்?*

*இ.கெயகேசவன்,*
*கிளி/வட்டக்கச்சி. ம.வி.*

கடும் முயற்சி, கடும் பயிற்சி, இவ் விரண்டுமே ஒரு வீரனை உருவாக்கும் திறன் கொண்டவை... அதுசரி 'தாங்கள் எந்தத்துறையில் சகல துறை வீரனாகப் போகிறீர்களாம்?

*பாவலா!*

*தென்னிலங்கையில் வீணை ஒன்று சுருதிமாறி நாதம் இசைக்கின்றது இவ் வீணையின் சுருதியை எப்போது சீர் செய்யலாம்?*

*யோ.பத்மசுதந்திர,*
*உடையார்கட்டு.*

வீணை இராவண வாத்தியம். இப்போது அதை விபீஷணர்கள் கையில் எடுத்து அபஸ்வரம் ஒலிக்க வைக்கிறார்கள். அவ்வளவுதான். தரமான அறிவுசார்ந்த ரசனையுள்ளவர்கள் அபஸ்வரத்தை ரசிப்பார்களா?

*பாவலா!*

*ஆனந்த சங்கரியார் ஆடி அடங்கிவிட்டார் என எண்ணினேன். ஆனால் மீண்டும் அட்டகாசம் செய்கிறார் என்ன செய்யலாம்.*

*சீலன்,*
*செல்வாநகர்.*

துள்ளுற கழுதை பொதி சுமக்கும்- கத்துற தவளை களைத்து ஓயும் தானாக ஆடி அடங்கிற 'கேஸ்' அல்ல இது.

*பாவலா!*

*சனாதிபதியால் நியமிக்கப்பட்ட விடுதலை புலிகளின் கொலைகளை விசாரிப்பதற்கான விசாரணைக் குழுவின் நீதி நீதியாக இருக்குமா?*

*இ.லக்ஸ்மன்,*
*திருவையாறு.*

குற்றவாளிகளே நீதிபதிகளாகி விசாரணையை மேற்கொள்ளும் போது எதனை எதிர்பார்க்க முடியுமாம்?

*பாவலா!*

*உந்துருளி ஓடுவதற்கான அனுமதிப்பத்திரம் உம்மிடம் உள்ளதா? இல்லாவிட்டால் என்னிடம் 2500 ரூபாவுடன் வாரும் உடனே வாங்கித் தருகிறேன். இப்போதுதான் இந்த விலை காலப்போக்கில் பணவீக்கத்திற்கு ஏற்ப இதன் விலையும் ஏறலாம்.*

*பிரியா?*
*பரந்தன்.*

ஒரு லட்சம் ரூபா கொடுத்து உந்ருளியை வாங்கி 2500 ரூபாவுக்கு உம்மிடம் அனுமதிப் பத்திரமும் பெற்ற பின் நான் எமனூருக்கு பயணிக்க வேண்டும் என்பதுதான் உமது விருப்பம்




''சுனாமியடிச்சதோட இடப்பெயர்வில பாதிக்கப்பட்டவைக்கு நிவாரணங்குடுக்கிறத நிப்பாட்டிப் போட்டாங்களே.

ஏன் சுனாமியடியோட இடம் பெயர்ந்த சனம் மிதந்து விட்டினமோ...''

இல்லத் தெரியாமயே- சின்னக்கோடு பெரிய கோடுக் கதைதான். வீட்டில ஒரு சொட்டுச் சீனியில்ல. வேலை வெட்டிக்குப் பஞ்சமில்லை எண்டு சொல்லுறது தான் மழை விட்டாலெல்லோ.

பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடையெண்டமாரி சம்பளங் கூடிப் போச்சு ஆனாச் சாமான் விலை கூடினதைப்பற்றி ஆருங்கேக்கினமே-

என்னப்பா இருநூறு ரூவாச் சம்பளத்தில வாங்கின அதேயளவு சாமானத்தானே இப்ப நாநூறு ரூவாக்கும் வாங்கிறம்.

போனாப் போகுது கடைசி சராயத்தின்ர விலையெண்டாலும் குறைஞ்சதே.


இல்லத் தெரியாமத்தான் கேக்கிறன். உந்தக் குடிய விட்டா என்ன?

அடப் பாவி- மனிசன் என்னவும் செய்யலாம் எப்பிடியும் வாழலாம். தேசப்பற்று முக்கியமடா மண்பற்றில்லாதவன் மனிசனா?

மண் பற்றுக்கும் உன்ர மதுக்குடிக்கும் என்ன சம்பந்தம். தெரியாமத்தான் கேக்கிறன்.

விசரா இண்டைக்கு மதுச்சாலைகளையும் சினிமாத் தியேட்டருகளையும் மூடிற்றா அரசாங்கம் நிம்மில ஓடுந் தெரியுமே. இதுக்காகத்தானே நான் உவள கசிப்பு மலிவாக் கிடைச்சாலும் வேண்டாமெண்டு விட்டிட்டு சாராயம் குடிக்கிறன். ஏதோ நாட்டுக்கு என்னால ஆன சிறு பங்களிப்பு.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –117



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினை வுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–117

.............................................................................
.............................................................................
.............................................................................
.............................................................................

பெயர் : ............................................................ ஈழநாதம்
முகவரி : ............................................................ யாழ்சாலை,
............................................................ கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –116



**அ.மதனகுமாரன்,**
**10 ஆம் கட்டை,**
**புளியடி,**
**விசுவமடு.**

### பரிசுக்குரிய வரிகள்

*வளங்கொளிக்கும் ஈழவள நாட்டில் வாடி நிற்காது- நம்*
*வறுமை போக்கிட உழுதுண்டு வாழ்வோம் வாடா!*
*விளைந்த ந(நெ)ல் மணிகளை பக்குவமாய் பதனிட்டு*
*விடுதலை வேள்விக்கு, பொருண்மிய வளம் காப்போம்!*

### பாராட்டுக்குரிய வரிகள்

*உழவுத் தொழிலை வந்தனை செய்தோம்.*
*உயரும் எரிபொருள், பசளை விலை இயற்கையின்*
*சீற்றம்- புழுங்கிய மனதுடன் புழுங்கல் பரவி*
*போக்கிடுவோம் உறவுகளின் வயிற்றுப் பசிதனை.*

திருமதி. ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*போர்க்கால இருள் படர்ந்த அந்நாளில்*
*பரவிக் காயவைத்த தானியத்தை விட்டோடினோர் இந்நாளில்*
*பதமாய் அவித்த புழுங்கலை தினமும்*
*இதமாய்க் கிளறி வெய்யிலில் காய விடுகிறோம்.*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*வளம் செழிக்கும் தமிழீழமதில் வாழும்*
*வல்லவர்கள் நீங்கள்- சோர்வு சிறிதளவும் வேண்டாம்*
*நெற்றிவியர்வை மண்ணில் சிந்தி விவசாயம் செய்து*
*நெருக்கடியற்ற வாழ்வை விரைவாய் வளம்படுத்திடுவீர்.*

சு.சிவாஜினி,
புதுக்குடியிருப்பு.

*வளம் மிகு வயல்களைப் பதப்படுத்த*
*வெளிநாட்டு இயந்திரங்கள் தேவையில்லை எமக்கு*
*தங்க நெற்கதிர்கள் தலையாட்டிட*
*தள்ளுபலகை ஒன்றே போதும் எமக்கு.*

தெ.சதீஸ்,
பாபு,
கைதடி.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்
அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு





படைய தொடக்க பயிற்சிக்கல்லூரியின் பத்தாம் ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு கடந்த 26-04-2005 அன்று புதுக்குடியிருப்புசந்தியில் இருந்து விசுவமடு வரை நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் கலந்து கொண்ட பெண்கள் பிரிவினரையும் ஆண்கள் பிரிவினரையும் படைய தொடக்க பயிற்சிக்கல்லூரி சிறப்புத்தளபதி ஆதவன் அவர்களுடன் காணப்படுவதை படங்களில் காணலாம்.


படங்கள்-கா.சுரேன்

ஆனையிறவு வெற்றிவிழாவைச் சிறப்பித்து மாபெரும் விளையாட்டுப்போட்டி நிகழ்வுகளில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு சோதியா படையணித்தளபதி கேணல் துர்க்கா அவர்கள் கைலாகு கொடுப்பதையும் அருகே மாலதி படையணி தளபதி கேணல் விதுசா அவர்களையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த கேணல் தீபன். கேணல் ஜெயம் மற்றும் போராளிகளையும் படங்களில் காணலாம்.

படங்கள்:வீ.பிரதீபன்

















இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது